விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper In Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 19 வள்ளுவர் ஆண்டு 2049 ஆவணி 29 வெள்ளிக்கிழமை (14.09.2018) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 269

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/= மட்டுமே

## தியாகி திலீபனின் 31-வது நினைவேந்தல் நாளை ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபனின் 31-வது ஆண்டு நினைவேந்தல் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வுகள் நாளை 15-ம் திகதி இடம்பெறவுள்ளது. தியாகி திலீபனின் நினைவு நாட்கள் நடைபெறும் இக் காலங்களில் களியாட்டங்களைத் தவிர்த்து திலீபனின் 23

எட்டு தமிழ் அரசியல் கைதிகள்

## விடுதலையை வலியுறுத்தி உணவு தவிர்ப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் தமது விடுதலையை வலியுறுத்தி இன்றில் இருந்து உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த அரசியல் கைதிகள் 8 பேரும், தண்டனை தீர்ப்பு வழங்கப்படாமல் 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் மேற்குறித்த அரசியல் கைதிகள் தொடர்பில் எந்த நடவடிக்கையும் இதுவரை 23

கைவேலி வாள்வெட்டு தாக்குதல்

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் உயிரிழப்பு




(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு கைவேலி பகுதியில் வாள் வெட்டுக்குழு மீது வீட்டின் உரிமையாளர் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் வாள் வெட்டுக்குழுவை சேர்ந்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கி (இடியன் / நாட்டு துப்பாக்கி) சூட்டில் படுகாயமடைந்த 24

# மகாவலி திட்டத்தின் பேரில் முல்லையில் சிங்களவரை குடியேற்ற விடமாட்டோம்



## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(திருகோணமலை) மகாவலி திட்டத்தின் பேரில் முல்லையில் சிங்கள மக்களை குடியேற்ற ஒருபோதும் விடமாட்டோம் என கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார். (23-ம் பக்கம் பார்க்க...)

ஹெரோயினுடன்

## கோண்டாவிலில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

9கிராமும் 850 மில்லிகிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் 23

குடியிருப்புக்குள் புகுந்த

## இராணுவ சிப்பாய் நையப்புடைப்பு!

(கண்டாவளை)

பூநகரி, கரியாலை நாகபடுவான் கணேஸ்குடியிருப்பு பகுதியில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்து தொந்தரவுசெய்த இராணுவச் சிப்பாய் ஒருவர் மக்களால் மடக்கிப் 23

## காணாமல் போன உறவினர்களுக்கு ஜெனிவா செல்ல விசா மறுப்பு

(பனிக்கன்குளம்)

காணாமல் போனவர்களின் உறவினர்கள் ஜெனிவா செல்வதற்கு இலங்கை அரசு விசா 23

## யுத்தத்தில் புலிகளை காப்பாற்ற மேற்கத்தேய நாடுகள் முயற்சி

இந்தியாவில் வைத்து மகிந்த தெரிவிப்பு

(டில்லி)

இறுதி யுத்தத்தில் விடுதலைப் புலிகளைக் காப்பாற்ற பிரித்தானியா உட்பட மேற்கத்தேய நாடுகள் தீவிர முயற்சியை எடுத்த போதிலும் தான் அதற்கு இடம்கொடுக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் இடம்பெற்றது பயங்கரவாதிகளுக்கு எதிரான யுத்தமே தவிர அது இன ரீதியாகவோ அல்லது தமிழர்களுக்கு எதிராகவோ? நடத்தப்படவில்லை என்பதை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பா.ஜ.கவின் மூத்த தலைவர் சுப்பிரமணியன் சுவாமியின் 23

## நீர்வேலி தெற்கில் வீடு புகுந்து கொள்ளைக்கும்பல் கைவரிசை

### 30 பவுண் நகை 15 ஆயிரம் ரூபாய் பணம் பறிபோனது

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி தெற்கு கந்தசுவாமி ஆலயத்திற்கு அருகில் உள்ள வீடு ஒன்றினுள் நேற்று அதிகாலை புகுந்த திருட்டுக் கும்பல் வீட்டிலிருந்த 30 பவுண் நகை மற்றும் 15 ஆயிரம் ரூபாய் பணத்தையும் திருடிச் சென்றுள்ளார்கள். இச்சம்பவம் குறித்து தெரியவருகையில்,

நேற்று அதிகாலை குறித்த வீட்டின் மதிலால் ஏறி வீட்டினுள் குதித்த நான்கு திருடர்கள் வீட்டின் சமையலறை கூரையின் ஓட்டினை கழற்றி வீட்டினுள் நுழைந்துள்ளார்கள். அறை ஒன்றினுள் நுழைய முற்பட்டபோது அறையி 23

## இறுதிப் போரில் 8 ஆயிரம் பேரே உயிரிழப்பு!

● டில்லியில் மகிந்த

(டில்லி)

இறுதி யுத்தத்தின் போது விடுதலை புலிகள் உள்ளிட்ட 8 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே உயிரிழந்தனர் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பினை ஏற்று 23

## மன்மோகன் சிங் மற்றும் ராகுலுடன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த சந்திப்பு



23

## முப்படைகளின் பிரதானியை காப்பாற்ற மைத்திரி முயற்சி

விசேட அமைச்சரவையில் நிராகரிப்பு

(கொழும்பு)

முப்படைகளின் பிரதானி ரவீந்திர விஜேகுணரட்ண கைதுசெய்யப்படுவதை தடுப்பதற்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முயற்சியை இலங்கை அமைச்சரவை நிராகரித்துள்ளது. எக்னமி நெக்ஸ்ட் இந்த தகவலை வெளியிட்டுள்ளது

இது தொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

முப்படைகளின் பிரதானி ரவீந்திர குணவர்த்தன கைதுசெய்யப்படுவதை தடுப்பது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அமைச்சரவையின் விசேட கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். 23

# மத்திய வங்கி மோசடி தொடர்பான வவுச்சர்கள் அழிக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

மத்திய வங்கியின் முறிகள் மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை நடைபெற்ற போது, பேர்ப்பச்சுவல ட்ரஷரீஸ் நிறுவனத்தினூடாக W.M.மென்டிஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணம், அந்நிறுவனத்தினூடாக சந்தேகத்திற்கிடமான முறையில் இரண்டாம் தரப்பினருக்கு வழங்கப்பட்டது.

குறித்த 102 வவுச்சர்களும், W.M.மென்டிஸ் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியின் ஆலோசனைக்கு அமைய அழிக்கப்பட் டமைக்கான சாட்சியம் தற்போது கிடைத்துள்ளதாக சொலிசிட்டர் ஜெனரல் யசந்த கோதாகொட நேற்று வியாழக்கிழமை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இதனை வெளிப்படுத்தியிருந்தார்.

இந்நிலையில் பர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன ஆகியோரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இருவரையும் எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

## வேம்படி மகளிர் கல்லூரியில் குரங்குகள் அட்டகாசம்

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்குள் அடிக்கடி குரங்குகள் நுழைந்து அட்டகாசம் செய்வதால் மாணவிகள் பீதி அடைந்துள்ளனர்.

நேற்றையதினம் திடீரென வகுப்பறைக்குள் நுழைந்த இரண்டு குரங்குகளால் மாணவிகள் பயந்து வெருண்டனர்.

இதேபோல் கடந்த சில தினத்திற்கு முன்னரும் குரங்குகள் வேம்படி மகளிர் கல்லூரிக்குள் நுழைந்தமை குறிப்பிடத்தக்கது.(ம)

## கனகராஜன் குளத்தில் குடும்பம் மீது தாக்குதல்

# பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு வாக்குமூலம்

(பனிக்கன்குளம்)

கனகராஜன்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் மனித உரிமைகள் ஆணைக்குழு வாக்குமூலம் ஒன்றை பதிவு செய்துள்ளனர்.

கனகராஜன்குளம் பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் கடந்த 10ஆம் திகதி பொலிஸ் பொறுப்பதிகாரி சிவில் உடையில் சென்று தாக்கிய சம்பவம் தொடர்பாக வைத்தியசாலையில் தாக்குதலுக்குள்ளாகிய நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ள தந்தை, இரு பிள்ளைகள் உட்பட மூவரின் நிலைமைகள் தொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக நேற்று காலை 10மணி முதல் சுமார் இரண்டரை மணித்தியாலயங்கள் கனகராஜன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா பிராந்திய இணைப்பாளர் ரோஹித பிரியதர்ஷன தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருகையில்,


கடந்த 10ஆம் திகதி கனகராஜன்குளம் பகுதியில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியினால் தாக்குதலுக்குள்ளாகிய தந்தை மற்றும் இரு பிள்ளைகளின் தாயாரான வசந்தகுமார் சர்மிளா இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு தொடர்பாக நேற்றைய தினம் கனகராஜன்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று காலை 10மணிமுதல் ஆரம்பமாகி சுமார் இரண்டரைமணி நேரம் பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகளை 24மணி நேரத்திற்குள் மேற்கொண்டு அறிக்கையினை வழங்குமாறு மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கும் வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அலுவலகத்திற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு நேற்றுமுன்தினம் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளது. சம்பவதினம குறித்த மூவரும் தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு நேரில் சென்று பார்வையிட்டு விசாரணைகளை மேற்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் குறித்த தந்தை மற்றும் இரு பிள்ளைகளும் தாக்கப்பட்டிருந்தால் அதற்குரிய சட்ட நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் தொடர்புபட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலத்தினை யடுதது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் மேலதிக விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (ம-281)

## மரண அறிவித்தல்

## சின்னவன் கந்தையா (கந்தன்)



சர்வோதய வீதி, ஆவரங்கால் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னவன் கந்தையா அவர்கள் நேற்று (13.09.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை இன்று (14.09.2018) காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவரங்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-மகன்
க.பாலச்சந்திரன் (சந்திரன்-சுவிஸ்)
சர்வோதய வீதி,,
ஆவரங்கால் மேற்கு, ஆவரங்கால்.
(5664)


WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு தரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(அ-3785)



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையானதொரு தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
யாழ். கலாலயா பயிற்சியகம்
இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்டது.


விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம். (யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியர்,
வெளிநாட்டுக்குச் செல்லவிருக்கும் மங்கையர்,
சொந்தமாக தொழில் புரிய விரும்பும் நங்கையர் மற்றும் ஆர்வமுள்ள பெண்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!





FACIALS (முக அழகுக்கலை)
கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்
BRIDAL DRESSINGS (மணப்பெண் அலங்காரங்கள்)
கேக் ஐசிங்
உணவு தயாரித்தல்

இம்முறை A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவிகளுக்கு மேற்படி பயிற்சிகளின் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
(அ-3835)

பிளவுஸ், சாறி பிளவுஸ், சுரிதார்,
மற்றும் ஆடைகள் தைக்கும் சான்றிதழ்
அற்ற கிழமை நாள் தையல் பயிற்சிகள்.





பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் பயிற்சிகள் யாவும் பயிற்றுவிக்கப்படுகின்றன!

கிழமை நாள் பிரிவுகள் ஆரம்பம் - 14.09.2018 வெள்ளிக்கிழமை
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 16-09-2018 ஞாயிற்றுக்கிழமை
நேரம் 09.30மணி

மேலும் விபரங்களை நாள்தோறும் மு.ப 9.30 - பி.ப 5.30 வரை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-



வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532





வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத் தருகின்றோம்


நிறஞ்சன் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, உடுப்பிட்டி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

நிறஞ்சன் நகைமாடம்
சந்தை வீதி, உடுப்பிட்டி.
தொடர்பு: 0763836129


## அகவை 60 நிறைவும் சேவைநலன் பாராட்டும்



உயர்திரு. பழனி பரமலிங்கம்

யா/கலட்டி மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலையில் கடந்த 11 ஆண்டுகளாக உப அதிபராகவும் கணிதபாட ஆசிரியராகவும் அரும்பெரும் சேவையாற்றிய உயர்திரு. பழனி பரமலிங்கம் அவர்கள் 60 வயதை பூர்த்தி செய்து இன்று ஓய்வு பெறுகிறார். ஓய்வுபெறும் இவ்வேளை அவரை வாழ்த்துவதுடன் அவரின் எதிர்காலம் சிறப்பாக அமைய இறையாசி வேண்டுகிறோம்.

வாழ்த்துவோர் : அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை சமூகம்

# சீனாவின் கடன்பொறியில் இலங்கை சிக்கவில்லை

## பிரதமர் ரணில் விளக்கம்

(ஹனோ)

**சீனாவின் கடன் பொறிக்குள் இலங்கை விழுந்து விட்டது என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்துள்ளார்.**

வியட்நாமின் தலைநகர் ஹனோயில் நடைபெறும், உலகப் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்கச் சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க, சி.என்.பி.சி. தொலைக்காட்சிக்கு அளித்துள்ள செவ்வி ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கை தனது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களின் கட்டுப்பாட்டை சீனாவிடம் இழந்து விட்டது என்று கூறப்படுகிறது.

ஆனால், சீனாவின் உயர் வட்டி வீதக் கடன்களால் நாடு கடன் பொறியில் சிக்கியது என்று நான் நம்பவில்லை.

நாங்கள் சீனாவுடன் தொடர்புகளை வைத்திருக்கின்றோம். கணிசமானளவு சீன முதலீடுகள் உள்ளன. கடன்களும் இருக்கின்றன. இதனை ஒரு அச்சுறுத்தலாக நான் பார்க்கவில்லை." என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# தீவிரவாதத்திற்கு எதிராக தீர்க்கமான நடவடிக்கை!

## மகிந்தவுக்கு சு.சுவாமி புகழாரம்



(கொழும்பு)

ஜனாதிபதியாக விரைவில் பொறுப்பேற்கப் போகிறவர் என்று டில்லியில் நேற்று முன்தினம் நடந்த கருத்தரங்கில் மகிந்த ராஜபக்ஷவை அறிமுகப்படுத்தினார் சுப்பிரமணியன் சுவாமி.

சுப்பிரமணியன் சுவாமி தலைமை வகிக்கும் விராட் ஹிந்துஸ்தான் சங்கம், நேற்று முன்தினம் டில்லியில் கருத்தரங்கிற்கு ஒழுங்கு செய்திருந்தது.


இந்தக் கருத்தரங்கிற்கு தலைமை வகித்த சுப்பிரமணியன் சுவாமி, மகிந்த ராஜபக்ஷவை அறிமுகப்படுத்தி வைத்த போதே, விரைவில் இலங்கை ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கப் போகிறவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

"அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கான முன்னணித் தலைவரான மகிந்த ராஜபக்ஷ, விரைவில், ஜனாதிபதியாவார். தீவிரவாதத்துக்கு எதிராக அவர் தீர்க்கமான நடவடிக்கை எடுத்தவர். அதனை தனது நாட்டில் இருந்து வேரோடு அகற்றியவர்.

அதன் விளைவாக, இலங்கை இன்று அனைத்துலக முதலீடுகள் விரும்பப்படும் ஒரு இடமாக மாறியிருக்கிறது" என்றும் சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்தார். (இ-7)

# இந்து சமுத்திரத்தில் சுதந்திர கடற்பயணம்

## இலங்கை-வியட்நாம் இணக்கம்



(ஹனோய்)

இலங்கைக்கும் வியட்நாமுக்குமிடையிலான இராஜதந்திர உறவை மாத்திரமன்றி பாராளுமன்ற, அரசியல் கட்சிகள், மக்கள் ஆகிய தரப்புகளுக்கிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வியட்நாம் பிரதமர் க்யென் ஷுன் ஃபுக் (H.E. Nguyen Xuan Phuc) பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தினார்.

வியட்நாம் பிரதமருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நேற்று முன்தினம் வியட்நாம் பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்ற இருதரப்புப் பேச்சுவார்த்தையின்போது, பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி அரசியல், சமய, சமூகம் வர்த்தகத்துறை ஆகிய தரப்புகளுக்கிடையிலும் பரஸ்பரம் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வியட்நாம் பிரதமர் வலியுறுத்தினார்.

அடுத்த வருடம் ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வெசாக் தினத்தை வியட்நாமின் ஹனோய் நகரில் நடத்த திட்டமிடப்பட்டிருப்பதால், அதற்கு இலங்கையின் ஒத்துழைப்பை வழங்குமாறும் வியட்நாம் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இரு நாடுகளுக்குமிடையில் பௌத்த தூதுக்குழுவினரைப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இலங்கைக்கும் வியட்நாமுக்கும் இடையில் நிலவிய வரலாற்று ரீதியிலான உறவு பற்றி ஆராய்வதற்குக் கணிசமான அளவு நிபுணர்களைக் கொண்ட குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று யோசனை தெரிவித்தார். இந்தக் குழுவை மிக விரைவாக நியமிப்பது பொருத்தமானது என்று இதன் போது வியட்நாம் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

அநேகமான வியட்நாம் பிரஜைகள் இலங்கைக்குச் சுற்றுலா செல்லும் எதிர்பார்ப்பில் இருப்பதால், இரு நாடுகளுக்குமிடையில் நேரடி விமான சேவைகளை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை வியட்நாம் பிரதமர் தெளிவுபடுத்தியபோது அதற்குத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க இலங்கை தயாராக உள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இதற்கமைவாக சுற்றுலாப்பயணிகளின் வசதி கருதி இரு நாடுகளுக்குமிடையிலான விசா நடைமுறையை இலகுபடுத்துவது பற்றி ஆராய விரைவில் பேச்சுவார்த்தை தொடங்கப்படவுள்ளது.

எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கை வர்த்தகப் பிரதிநிதிகள் குழுவொன்று வியட்நாம் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் அதன் பின்னர் வர்த்தகத்துறையில் தொடர்ச்சியான கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொள்வதெனவும் இப் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் வியட்நாமுக்குமிடையில் கடற்றொழில் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றைச் செய்துகொள்வதற்கு இணக்கம் கண்டுள்ள இரு நாட்டுப் பிரதமர்கள், பொருளாதார ஒருங்கிணைப்புப் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவின் செயற்பாடுகளைத் துரிதப்படுத்தவும் அதனை விரிவுபடுத்துவதற்கான அவசியத்தையும் வலியுறுத்தினர்.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சுதந்திரமான கடற்பயணத்தையும் ஒழுங்கையும் உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவதெனவும் இரு நாட்டுப் பிரதமர்களும் இந்த சந்திப்பில் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

அபிவிருத்தி மூலோபாயங்கள், சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வியட்நாமுக்கான இலங்கைத் தூதுவர் ஹசந்தி திசாநாயக்க, பிரதமரின் மேலதிகச் செயலாளர் சமன் அத்தாவுடஹெட்டி, விசேட பங்கேற்பாளர் சன்ட்ரா பெரேரா முதலானோரும் இலங்கையின் சார்பில் கலந்து கொண்டனர். (இ-7)

### இலங்கைக்கு மிகச் சிறந்த சர்வதேச அங்கீகாரம்

# அரச தலைவர்களுக்கான கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரி சிங்களத்தில் உரை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள முதலாவது அரச தலைவர்களுக்கான உயர் மட்டக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையை இலங்கைக்கு சர்வதேசத்திடமிருந்து கிடைத்துள்ள மிகச் சிறந்த அங்கீகாரமாக நாம் காண்கின்றோமென அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரச தலைவர்களுக்கான முதல் நாள் கூட்டத்தில் ஜனாதிபதி சிங்களத்தில் உரையாற்றுவாரென்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஜெனீவா விஜயத்தின்போது பல நாட்டின் அரச தலைவர்களை சந்திக்க வாய்ப்பு கிட்டியிருப்பதுடன் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக் கும் போதைவஸ்து தொடர்பான சவாலை சர்வதேச மட்டத்தில் முறியடிப்பது தொடர்பிலான பயிற்சிப்பட்டறையிலும் கலந்துகொள்வார்.

அத்துடன் 24 ஆம் திகதி நெல்சன் மண்டேலாவின் நினைவு தினத்திலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து சிறப்புரையாற்றவுள்ளார்.

கொழும்பு டார்லி வீதியிலுள்ள சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

"ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் அரச தலைவர்களுக்கான உயர் மட்ட மாநாடு எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆரம்பமாகிறது. இதில் அனைவரது கவனத்தையும் ஈர்க்கக்கூடிய மிக விசேடமான முதல் நாளன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு உரையாற்ற சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இது இலங்கைக்கு மிகவும் சாதகமானதொரு விடயம் என்பதுடன் இது இலங்கைக்கு சர்வதேசத்திடமிருந்து கிடைத்துள்ள சிறந்த பிரதிபலிப்பாகவே நாம் கருதுகின்றோம்," என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

ஜெனிவாவில் ஜனாதிபதி இலங்கையில் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டு வரும் அபிவிருத்திகள், நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் எதிர்கொள்ளும் சவால்கள் தொடர்பில் விளக்கமளிப்பாரென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் செயலாளர் நாயகம் ஹுசைன் ஏற்கனவே இலங்கைக்கு நேரில் வந்து ஜனாதிபதியை சந்தித்திருப்பதனால், ஜெனிவாவில் அவருடன் நல்லெண்ணப் பேச்சுவார்த்தையை நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் அமைச்சர் சமரசிங்க தெரிவித்தார்.

இலங்கை போதைப் பொருள் விவகாரத்தில் பாரிய சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளது. எதிர்காலத்தில் இதுதொடர்பான நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு சர்வதேச நாடுகளுடனான தொடர்பு எமக்கு பெரும் சக்தியாக அமையும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில் அமைச்சர், "ஜனாதிபதி எச்சந்தர்ப்பத்திலும் இராணுவ வீரர்களை பாதுகாப்பேன் என உறுதியளித்துள்ளார்.

அதனடிப்படையிலேயே 25 ஆம் திகதி அவர் சர்வதேசம் முன்னிலையில் உரையாற்றுவாரென நம்புகின்றோம். பொறுத்திருந்து பார்ப்போம்," என்றும் பதிலளித்தார். (இ-7)

### விசம் கலந்த பால் பக்கெற் விவகாரம்

# அரசு இராஜினாமா செய்ய வேண்டும்

## கூட்டு எதிரணி வலியுறுத்து

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சி கடந்த 5 ஆம் திகதி கொழும்பில் நடத்திய மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு அரசாங்க தரப்பினால் விசம் கலந்த பால் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாட்டை மேற்கொண்டு மக்களை கொன்றொழிப்பதற்கு முயற்சித்தமை தொடர்பில் அரசாங்கம் இராஜினாமாச் செய்ய வேண்டும் என கூட்டு எதிரணியின் உறுப்பினர் டளஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொரளை என்.எம். பெரேரா நிலையத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆகாரம் வழங்குவதாக வாக்குறுதியளித்திருந்தது.

எனினும் கூட்டு எதிர்க்கட்சி கடந்த ஐந்தாம் திகதி கொழும்பில் நடத்திய மக்கள் எழுச்சிப் பேரணியில் கலந்து கொண்டவர்களுக்கு அரசாங்கத் தரப்பினர் விசம் கலந்த பாலை வழங்கியுள்ளனர்.

எனவே இலங்கை வரலாற்றில் அரசாங்கத்தினால் மக்களுக்கு விசம் கலந்த ஆகாரம் வழங்கிய சம்பவம் கடந்த ஐந்தாம் திகதியே பதிவாகியுள்ளது.

அவ்வாறு பகிர்ந்தளிக்கப்பட்ட பால் பக்கெற் சிலவற்றை எனது சாரதியும் பெற்று வந்தார். அதில் ஒன்றை நானும் அருந்தினேன். அதனால் தொடர்ந்து மூன்று நாட்கள் நான் நோய் வாய்ப்பட்டிருந்தேன்.

ஆகவே இவ்வாறான செயற்பாட்டை மேற்கொண்டு மக்களை கொன்றொழிப்பதற்கு முயற்சித்தமை தொடர்பில் அரசாங்கம் இராஜினாமா செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (இ-7)

# கற்றுக் கொள்வாரா ஹோலி?

## முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் அறிவுரை



விராட் ஹோலி

**மாற்றம் தேவை**

அதேநேரம் அணியில் பெரியளவில் மாற்றம் செய்யத் தேவையில்லை. இது தன்னம்பிக்கை மற்றும் கட்டமைப்பை பாதித்து விடும்.

ஆனால் எந்த இடத்தில் பலவீனமாக இருக்கிறோம் என்பதை கண்டறிந்து அவற்றை சரி செய்ய வேண்டும். அணியின் ஆரம்பம் மற்றும் 'நடுத்தர வரிசையில்' எந்தெந்த வீரர்களை அனுப்புவது. 'சகலதுறை வீரர்' யார் என்பது போன்ற விடயங்களில் கவனமாக செயற்பட வேண்டும். ஆடுகளம் மற்றும் எதிரணிக்கு ஏற்பவும் முடிவு எடுக்க வேண்டும்.

ஐந்தாவது டெஸ்டில் 464 ஓட்டங்கள் என்ற இலக்கை 'சேஸ்' செய்து வெற்றி பெறுவது கடினம்தான். இருப்பினும் இந்திய அணி 'சமன்' செய்யும் என நம்பினேன். துரதிர்ஷ்டவசமாக ராகுல், ரிஷாப் பன்ட் ஆட்டமிழந்ததும் மற்றவர்கள் ஏமாற்றியதால் இந்தியா தோற்க நேரிட்டது.

போட்டிகளின் போது எந்த இடத்தில் களத்தடுப்பாளரை நிறுத்த வேண்டும், சூழ்நிலைக்கு ஏற்ப பந்துவீச்சில் மாற்றம் செய்வது குறித்தும் ஹோலி இன்னும் கற்றுக் கொள்ள வேண்டும்," என முன்னாள் இந்திய அணித் தலைவர் கவாஸ்கர் அறிவுரை வழங்கியுள்ளார்.

ஹோலி டெஸ்ட் அணித் தலைமையைப் பொறுப்பேற்ற பிறகு, ஆசிய கண்டத்துக்கு வெளியே நடந்த இரண்டு தொடர்களிலும் இந்தியா 1-2 (தென்னாபிரிக்கா), 1-4 (இங்கிலாந்து) என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

இதில் துடுப்பாட்டத்தில் 286, 593 ஓட்டங்கள் குவித்த ஹோலி, இரு தொடர்களிலும் 'நம்பர் 1' வீரராக வலம் வந்தார்.

ஆனால் தலைவராக இவர் சொதப்பியதாக கூறப்படுகிறது. இதுகுறித்து இந்திய அணியின் முன்னாள் தலைவர் கவாஸ்கர், (வயது-69) கூறியதாவது.

ஹோலி தலைவராக பொறுப்பேற்றபோது போதிய அனுபவம் இல்லாமல் இருந்தார். தற்போது சில ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இன்னும் நிறைய கற்றுக் கொள்ள வேண்டும். பல்வேறு விடயங்களில் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

ஏனெனில் சமீபத்திய தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து தொடர்களில் களத்தடுப்பாளர்களை நிறுத்திய விதம் மற்றும் பந்துவீச்சில் செய்த மாற்றங்கள் பெரியளவில் வெற்றி தேடிக் கொடுக்கவில்லை.

**அனுபவம் போதாது**

ஏனெனில் இந்திய ஆடுகளங்களில் விக்கெட்டுக்கள் விரைவாக சரிந்து விடும். இதனால் சிறந்த 'இணைப்பாட்டத்தை' பிரிப்பது எப்படி என்ற அனுபவம் ஹோலிக்கு இல்லாமல் இருந்தது. அடுத்து வரும் அவுஸ்திரேலிய தொடரில் இந்தக் குறையை சரி செய்வார் என்ற நம்பிக்கை உள்ளது.

தவிர இறுதி இலக்க வீரர்கள் அதிக ஓட்டங்கள் சேர்க்க அனுமதித்து வெற்றியை எதிரணி பறித்துச் சென்று விடாமல் பார்த்துக் கொள்வதும் மிக முக்கியம். இவ்வாறு கவாஸ்கர் கூறினார்.

**பந்துவீச்சாளர்களுக்கு பாராட்டு**

"இங்கிலாந்து தொடரில் ஐந்து டெஸ்டில் கிட்டத்தட்ட 100 விக்கெட்டுகளையும் இந்திய பந்துவீச்சாளர்கள் வீழ்த்தி, தங்கள் வேலையை சரியாகச் செய்தனர். துடுப்பாட்ட வீரர்கள்தான் ஹோலியுடன் இணைந்து ஜொலிக்கத் தவறிவிட்டனர். இதனால் தொடரின் முடிவு ஏமாற்றம் கொடுத்தது என்றார்.

# இந்திய பெண்கள் 'திரில்' வெற்றி



அரைச்சதம் அடித்த இலங்கையின் ஜெயகனி

இலங்கை அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இந்திய பெண்கள் அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் 'திரில்' வெற்றி பெற்றது.

ஐ.சி.சி., பெண்கள் சம்பியன்ஷிப் தொடருக்காக இலங்கை வந்துள்ள இந்திய அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டியில் வென்ற இந்திய அணி 1-0 என தொடரில் முன்னிலையில் உள்ளது.

இந்நிலையில் இரு அணிகள் மோதிய இரண்டாவது போட்டி காலி மைதானத்தில் நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் மிதாலி களத்தடுப்பை தேர்வு செய்தார்.

**இரு அரைசதம்**

இந்திய அணிக்கு பூணம் ராத், ஸ்மிருதி மந்தனா ஜோடி மோசமான ஆரம்பம் கொடுத்தது. 2 பவுண்டரிகள் அடித்த மந்தனா 14 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். பூணம் ராத் (3), ஹர்மன்பிரீத் (7) இருவரையும் ஒற்றை இலக்க ஓட்டங்களில் வெளியேற்றினார் வீரக்கொடி.

தீப்தியும் (12) ஆட்ட மிழக்க இந்திய அணி 66 ஓட்டங்களுக்கு 4 விக்கெட் டுக்களை இழந்து தள்ளாடியது. பின் இணைந்த அணித் தலைவர் மிதாலி ராஜ், தானியா ஜோடி பொறுப்பான ஆட்டத்தை கொடுத்தது. நிதானமாக ஓட்டங்கள் சேர்த்த மிதாலி ராஜ் 121 பந்துகளில் 52 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

தானியா (68) தன் பங்கிற்கு அரைச்சதம் அடித்தார். ஹேமலதா 35, ஷிகா பாண்டே 15 ஓட்டங்கள் எடுத்தனர்.

இந்தியா 50 ஓவர்களில் 219 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் இலங்கை சார்பில் ஜெயகனி 3, வீரக்கொடி 2, பிரபோதனி 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**மான்ஷி அபாரம்**

எளிய இலக்கை விரட்டிய இலங்கை அணிக்கு பிரசதானி (11), ஹன்சிகா (0), சுரங்கிக (3) அதிர்ச்சி கொடுத்தனர்.

அரைச்சதம் அடித்த ஜெயகனியை (57), மான்ஷி வெளியேற்றினார். ஷஷிகலா (49) ரன் அவுட்டானார். சஞ்ஜீவனியை (17) ஆட்டமிழக்கச் செய்த பூணம் யாதவ், வீரக்கொடியை (17) ரன் அவுட் செய்தார்.

இலங்கை அணிக்கு கடைசி 21 பந்துகளில் 15 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கைவசம் 3 விக்கெட்டுகள் இருந்ததால் இந்தியாவுக்கு சிக்கல் நீடித்தது.

இருப்பினும், பிரபோதனி (7), நிலக்சி (31), சுகந்திகா (3) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, இலங்கை அணி 48.1 ஓவர்களில் 213 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் இந்தியா 6 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்றது. இதன்மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை ஒரு போட்டி மீதமிருக்கையில் 2-0 எனக் கைப்பற்றியது.

# கொலிங்வூட் ஓய்வு



இங்கிலாந்து கிரிக்கெட் வீரர் போல் கொலிங்வூட், உள்ளூர் பேட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் சகலதுறை வீரர் போல் கொலிங்வூட் (வயது-42), கடந்த 2001ல் பாகிஸ்தானுக்கு எதிராக பேர்மிங்காமில் நடந்த ஒருநாள் போட்டியில் அறிமுகமான இவர், 2011ல் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விடைபெற்றார்.

இவர், 68 டெஸ்ட் (4259 ஓட்., 17 விக் ..). 197 ஒருநாள் (5092 ஓட்., 111 விக்..), 36 சர்வதேச 'ரி20' (583 ஓட்., 16 விக்.,) போட்டிகளில் விளையாடி உள்ளார். ஆஷஸ் டெஸ்ட் தொடரில் கிண்ணம் வென்ற இங்கிலாந்து அணியில் மூன்று முறை இடம்பிடித்திருந்த இவர், ஒருநாள் போட்டியில் தலைவராக (25 போட்டி, 11 வெற்றி, 12 தோல்வி, ஒரு 'ரை') செயற்பட்டார். இவரது தலைமையிலான இங்கிலாந்து அணி, கடந்த 2010ல் 'ரி20' உலக கிண்ணம் வென்றது.

இங்கிலாந்தில் நடக்கும் 'கவுன்டி' போட்டிகளில் டெர்காம் அணிக்காக விளையாடி வரும் இவர், இந்த சீசனுடன் ஓய்வு பெறப் போவதாக தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் இவரது 23 ஆண்டுகால கிரிக்கெட் வாழ்வு முடிவுக்கு வரவுள்ளது.

இதுகுறித்து கொலிங்வூட் கூறுகையில், "உள்ளூர் போட்டிகளில் இருந்து ஓய்வு பெற சரியான நேரம் வந்துவிட்டதாக கருதுகிறேன். எனவே இந்த சீசனுடன் விடைபெற உள்ளேன்," என்றார்.

# பறந்தது இந்தியா

ஆசிய கிண்ண தொடரில் பங்கேற்க பொறுப்புத் தலைவர் ரோகித், தோனி உள்ளிட்ட இந்திய அணி வீரர்கள் டுபாய் புறப்பட்டுச் சென்றனர்.

ஆசிய கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஷில் (செப். 15-28) நடக்கவுள்ளது.

இதில் பங்கேற்கும் ஆறு அணிகள் இரு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளன. 'ஏ' பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், ஹொங்கொங் அணிகள் இடம் பெற்றுள்ளன. 'பி' பிரிவில் இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அணிகள் உள்ளன.

முதலில் லீக் முறையில் போட்டிகள் நடக்கின்றன. லீக் முடிவில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் 'சுப்பர் 4' சுற்றுக்கு முன்னேறும்.

இதில் முதல் இரு இடம் பிடிக்கும் அணிகள் வரும் 28ஆம் திகதி நடக்கும் இறுதிக்கு முன்னேறும்.

இந்திய அணி எதிர்வரும் 18ஆம் திகதி ஹொங்கொங், 19ஆம் திகதி பாகிஸ்தானை சந்திக்கிறது.

இதற்கான இந்திய அணிக்கு ரோகித் சர்மா தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஹோலிக்கு ஓய்வு தரப்பட்டது. இதனிடையே தோனி, ரோகித் சர்மா, சகால், குல்தீப் யாதவ் உள்ளிட்ட வீரர்கள் டுபாய் புறப்பட்டுச் சென்றனர்.

ஐ.பி.எல்., தொடரில் சென்னை அணிக்காக விளையாடிய போது தொடையின் பின் பகுதியில் ஏற்பட்ட காயத்தால் விலகிய கேதர் ஜாதவ், சத்திரசிகிச்சைக்குப் பின் மீண்டார். இவரும் டுபாய் சென்றார்.

மற்றைய வீரர்கள் விரைவில் இந்திய அணியுடன் இணைவர் என இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்தது.

# சச்சின் மீது சர்ச்சை புகார்

## ரசிகர்கள் எதிர்ப்பு

சச்சின் மீது புகார் கூறிய நடிகை ஶ்ரீரெட்டிக்கு ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

தெலுங்கு நடிகை ஶ்ரீரெட்டி, சமீப காலமாக தெலுங்கு மற்றும் தமிழ் நடிகர்கள் மீது பாலியல் புகார் தெரிவித்து வருகிறார். தற்போது இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் மீது சேற்றை வாரி இறைத்துள்ளார்.

தனது பேஸ்புக் பதிவில் அவர் கூறுகையில், 'சச்சின் வசீகரமானவர். ஒருமுறை ஹைதராபாத்துக்கு வந்திருந்தார். அப்போது 'சார்மிங்' ஆன பெண்ணுடன் தொடர்பு கொண்டார். இதற்கு சாமுண்டீஸ்வர் சாமி என்பவர் இடைத்தரகராக செயற்பட்டார். உண்மையில் சச்சின் சிறந்த வீர்தான், நான் சொல்வது களத்தில் அல்ல, காதலில்' என தெரிவித்துள்ளார்.

இதில் யாருடைய பெயரையும் நேரடியாக கூறவில்லை என்றாலும், பிரபல நடிகை ஒருவரை மறைமுகமாக கூறுவது தெரிகிறது. இந்த பதிவிற்கு சச்சின் ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

# பாராளுமன்றத்தை முற்றுகையிடுவோம்



## அனைத்து பல்கலைக்கழக மாணவர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

தொலைக்காட்சி ஊடகங்களுக்கு முன் சென்று பொய்யுரைக்காமல் உண்மையில் பல்கலைக்கழகங்களுக்குள் காணப்படும் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வை உடனடியாகப் பெற்றுத்தாருங்கள். இல்லையேல் பாராளுமன்றம் உள்ளிட்ட அரச நிறுவனங்களை ஒரேநாளில் முற்றுகையிடுவோம் என அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர எச்சரித்துள்ளார்.

சப்ரகமுவ பல்கலைக் கழகத்தினுள் காணப்படும் குறைப்பாடுகள் தொடர்பாக பல்கலைக்கழக மாணவர்கள் கையெழுத்திட்ட குறைபாடுகள்அடங்கிய கோரிக்கை மனுவை உயர் கல்வி அமைச்சிடம் வழங்குவதற்காக வருகை தந்திருந்த சபரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று முன்தினம் மனுவை எவரிடமும் கைய ளிக்க முடியாமல் போனமை யினால் அமைச்சகத்திற்கு முன்பாக வீதியில் அமர்ந்து போராட்டத்தை தொடர்ந்திருந்தனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்ட மாணவர்களது போராட்டப் பேரணியானது கொம் பெனித்தெரு வழியாக உயர் கல்வி அமைச்சகத்திற்கு வந்து சேர்ந்தது. இதன்போது லோட்டஸ் சுற்றுவட்டாரம் முற்றாக வீதி மறியல் இடப் பட்டிருந்ததுடன் நீர்த்தாரை பிரயோகிக்கும் வாகனங்களும் கலகம் அடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களைத் தாண்டி உயர்பல்கலைக்கழக அமைச்சகத்திற்கு மாணவர்கள் வருகை தந்திருந்த வேளையில் அமைச்சகத்திலும் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் உயரதிகாரிகள் எவரும் இல்லையென கோரிக்கை மனுவை கையளிக்க சந்தர்ப்பம் வழங்கப் படவில்லை.

இதன்போது ஆவேசமடைந்த மாணவர்கள் அமைச்சகத்தின் நுழைவாயிலை முற்றுகையிட்டு அதன் முன்பாக வீதியை மறைத்து அமர்ந்ததுடன், ஒலியெழுப்பக் கூடாது என சமிக்ஞை பொருத்தப்பட்டிருந்த இடத்திலேயே ஒலிபெருக்கிகளை வைத்து கோஷமெழுப்ப ஆரம்பித்தனர். இதன் போதே அனைத்து பல்கலைக்கழக மாணவர் கள் ஒன்றியத்தின் ஒருங்கி ணைப்பாளர் லகிரு மேற் கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார். (இ-7)



---

# கமநல அபிவிருத்தித் திணைக்களம்-வவுனியா

## சுத்திகரிக்கும் தொழிலாளி தேவை

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட காரியா லயத்திற்கு சிறந்த ஒழுக்கமுடைய வினைத்திறனான சுத்திகரிக்கும் தொழிலாளி ஒருவர் தேவையாக உள்ளது. எனவே 2018.07.16 இல் வெளியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி இல.2080/22 இன் பிரகாரம் சுத்திகரிப்பாளருக்கான சாதாரண வேலை நாள் ஒன்றிற்கான சம்பளம் ரூபா.600/= உடன் வரவு-செலவு திட்டத்தின் பிரகாரம் நாள் ஒன்றிற்கான மேலதிக கொடுப்பனவு ரூ.140/= என்பதற்பமைவாக நாளொன்றிற்கு ரூ.740/= கொடுப்பனவு அமையும். தொழில் தருநர் எனும் ரீதியில் திணைக்களத்தின் சார்பில் EPF 12% மற்றும் ETF 3% என்பன வழங்கப்படும். அத்தோடு பணியாளரின் வரவுக்கமைய கொடுக்கப்படும் மாதாந்தக் கொடுப்பனவிலிருந்து 8% EPF இன் பணியாளர் சார்பான பங்களிப்பிற்காக மாதாந்தம் கழிக்கப் படும். சுத்திகரிப்பாளர் காரியாலயத்தில் உள், வெளி சுத்தப்படுத்தல், மலசல கூடம் மற்றும் மேசைகள், ஜன்னல்கள் என்பனவற்றினை சுத்தப்படுத்த வேண்டும் என்பதுடன் மாவட்ட உதவி ஆணையாளரினால் பணிக்கப்படும் வேறு சுத்திகரிப்பு சார் வேலைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தினை (தொலைபேசி இலக்கம், முகவரி உள்ளடங்கலாக) 26 ஆம் திகதிக்கு முன்னராக எமது காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கவும்.

பொருத்தமான நபர் நேர்முகத்தேர்வின் மூலம் தெரிவு செய்யப்படுவார். நபர் வதியும் இடத்திற்கும் காரியாலயத்திற்குமான தூரம், முன் அனுபவம் என்பவற்றிற்கு முன்னிலை வழங்கப்படும். ஒவ்வொரு 3 மாதங்களிற்கும் ஒரு முறை நியமனம் புதுப்பிக்கப்படும் . அத்துடன் இது நிரந்தரப் பதவி இல்லை என்பதுடன் இவ் வேலை ஓய்வூதிய உரித்து அற்றதும் ஆகும்.

அனுப்ப வேண்டிய முகவரி:
கமநல அபிவிருத்தி திணைக்களம்
புகையிரத நிலைய வீதி வவுனியா.
தொலைபேசி இலக்கம்: 024 222 2362

(சி-3838)

---

# மரண அறிவித்தல்

## திருமதி.பொன்னுத்துரை இர்ராசம்மா



யாழ். சங்கானை ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இராசம்மா அவர்கள் 09-09-2018 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் மாரிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், விஜயறதி (லண்டன்), விஜயசீலன் (கனடா), விஜயபவன் (கனடா), விஜயசந்தர் (கனடா), விஜயகுகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும்,

காலஞ்சென்ற சுப்ரமணியம் (ஆசிரியர்- நடேஸ்வராக் கல்லூரி, காங்கேசன்துறை), நடராசா(கனடா), காலஞ்சென்ற கார்த்திகேசு(கனடா), கதிரவேலு(கனடா), தனவதி (இந்திரா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற செல்வம், இராசமணி(கனடா), சித்திரா (கனடா), இந்திராணி(கனடா), குருமூர்த்தி, காலஞ்சென்ற மகேஸ்வரி , திருநாவுக்கரசு(கனடா) ஆகியோரின் மைத்துனியும், நேசரட்ணம்(லண்டன்), குமுதினி (கனடா), விஜயநந்தினி(கனடா), ரஞ்சிதமலர்(கனடா), சுஜேந்தி(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சஞ்சி(ஜேர்மனி), சபிதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும், ஜனாத், ஜெனீபா, விதுசன், துர்க்கா, தாரணி, ஜெனனி, புவனி, ஓவியா, இலக்கியா, மாசிலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், ரீனாதேவி, அபினயா, அர்வின் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 16.09.2018 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்று பூதவுடல் நண்பகல் 12.00- பிற்பகல் 12:30 மணியளவில் Highland Hills, 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada எனும் இடத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(5651)

சொரூபன் (கஜன்) பெறாமகன்
ஆஸ்பத்திரி வீதி, சங்கானை. 077 711 1022

தகவல்:
குடும்பத்தினர்.

---

# இராசி பலன்

14.09.2018
ஆவணி 29, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 06.37 மணிவரை
விசாகம் முழுவதும்
சுபநேரம் 06.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை

வளவன்

கிரகநிலை: ராகு; சூரி, புத; குரு, சுக், சந்; சனி; செவ், கேது

சந்திராஷ்டமம்: அச்சுவினி இரவு 12.01 மணிக்கு விருச்-சந்

**மீனம்:** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, பயணங்களின் போது கூடுதல் விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள்.

**மேடம்:** கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்:** நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திப்பீர்கள்.

**கும்பம்:** வீண்பழிகள் அகலும், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்:** மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாரம் குறையும், வாகன சுகமுண்டு, தூரதேசத்திலிருந்து சுப 'செய்திகள் வந்து சேரலாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்:** ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு:** பெரிய மனிதர்களின் சந்திப்பு கிடைத்து மகிழும் நாள், அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேர லாம், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்:** வீட்டுப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும், சேமிப்பு உயரும் நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சயனசுகக் குறைவான நாள்.

**துலாம்:** குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், பணப் பிரச்சினைகள் தீரும்.

**கன்னி:** வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், விவாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளம் காணும் நாள், வருமானம் வரும் வழியில் நாட்டம் அதிகரிக்கும்.



இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், 'கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்' என்ற தொனிப்பொருளில், நல்லூர்க் கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்திய கந்தபுராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் "கந்தபுராண எழுச்சி அருள்நெறி விழா- 2018" நிறைவு நாள் நிகழ்வுகள் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் அண்மையில் சிறப்புற இடம்பெற்றது.

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தினால் 2018/ 2019 ஆம் ஆண்டிற்குரிய பட்டமேற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன. இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவை, கல்வியியலா ளர் சேவை மற்றும் விரிவுரை யாளர்கள் இக்கற்கை நெறி க்கு விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்தாரிகள் www.ou.ac.lk என்ற இணையத்தள முகவரிஊடாக02.10.2018இற்கு முன்னராக விண்ணப்பிக்க முடியுமென யாழ்ப்பாணப் பிராந் திய நிலைய உதவிப் பணிப் பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிகவிபரங்களையாழ் ப்பாணப் பிராந்திய நிலையத் துடன் தொடர்பு கொண்டு பெற் றுக் கொள்ள முடியுமென அவர் மேலும் தெரிவித்துள் ளார். (இ)


இலங்கை திறந்த பல்க லைக்கழகத்தினால் ( Short course in Speech and Listening-English ) பேச்சு மொழி ஆங்கிலத்திற்கான குறுகிய காலக்கற்கை நெறி க்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. க.பொ.த. சாதா ரண தரத்தில் சித்தி பெற்ற அனைவரும் இக்கற்கை நெறி க்கு விண்ணப்பிக்க முடியும். இக்கற்கைநெறியானது மூன்று மாத காலங்களைக் கொண் டுள்ள நிலையில் இக் கற்கை நெறிக்குரிய விண்ணப்பப் படிவங்களை நாளை 15.09. 2018 வரை பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந் துள்ள யாழ்.பிராந்திய நிலை யத்தில் பெற்றுக்கொள்ளலா மெனவும் மேலதிக விபரங்க ளுக்கு யாழ்.பிராந்திய நிலை யத்திற்கு வருகை தருவதன் மூலமோ அல்லது 021 222 3374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்வதன் மூலமோ பெற் றுக் கொள்ள முடியும் எனவும் உதவிப்பணிப்பாளர் அறி வித்துள்ளார். (இ)

# சமகால அரசியல் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

சமகால அரசியலும் வடக்கு மாகாண சபையின் எதிர் காலமும் எனும் தலைப்பில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு D.M.I.தனியார் கல்வி நிறு வனத்தில் சொ.சிவபாலன் தலைமையில் கலந்துரையாடல் இடம்பெறும். இதில் ஆர்வமுள்ளவர்கள் சமுகம் தரவும் என யாழ்ப்பாணம் சர்வதேச மார்க்சிய குழு அறிவித்துள்ளது.(இ)

# கட்டடம் திறக்கப்படவில்லை வியாபாரிகள் கடும் விசனம்



(கரணவாய்)

நெல்லியடி மீன் சந்தை க்கு என அமைக்கப்பட்ட கட்டடம் வேலைகள் பூர்த்தி யாகியும் இன்னும் திறக்கப்ப டாமல் இருப்பதாக வியாபாரி கள் கடும் விசனம் வெளியிட் டுள்ளனர்.

கரவெட்டி பிரதேச சபை யினால் மாபிள்கள் பதிக்கப் பட்டு அமைக்கப்பட்டுள்ள இக் கட்டடம் இதுவரை திறக்கப் படாமல் பூட்டப்பட்டு காணப்ப டுகிறது. (இ-60)

# யாழில் சிங்கள தினமும் வருடாந்த பரிசளிப்பும்

(யாழ்ப்பாணம்)

சிங்கள அக்கடமியின் ஏற்பாட்டில் சிங்கள தினமும் வருடாந்த பரிசளிப்பும் நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கி ழமை பிற்பகல் 2 மணிக்கு கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழகத் தில் இடம்பெறும்.

இதில் பிரதம விருந்தி னராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கலந்து கொள் வார். (இ-7)

# அடையாள அட்டை இல்லாததால் உறுப்பினர்களுக்குப் பிரச்சினை

## தவிசாளரிடம் குகானந்தன் கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் 31 பேருக்கும் உடனடியாக பிரதேச சபை உறுப்பினர்கள் என்ற அடை யாள அட்டை வழங்கப்பட வேண்டும் என சாவகச் சேரி பிரதேச சபை உறுப்பி னர் குகானந்தன் தவிசாளரி டம் கோரிக்கை விடுத்துள் ளார்.

பிரதேச சபையில் இடம் பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இந்தக் கோரி க்கையை முன்வைத்திருந் தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ்.மாநகர சபை உறுப் பினர்களுக்கு அவர்களுக் குரிய அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் உறுப்பினர் களை மக்கள் இனங்கண்டு கொள்வது இலகு. எமது தென் மராட்சி பிரதேச சபை பாரிய நிலப்பரப்பைக் கொண்ட ஒரு பிரதேசம். நாம் மக்களு டைய குறை நிறைகளை பார்வையிடச் செல்லும் போது அடையாள அட்டை இல்லா மையால் பாரிய சவால்களை எதிர்நோக்க வேண்டி உள் ளது. ஆகவே உடனடியாக சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அடை யாள அட்டைகள் வழங்க வேண்டும். இதற்கு தவிசாளர் நடவடிக்கை எடுக்க வேண் டும் எனக் கேட்டுக் கொண் டார். (இ-30)




# அபிவிருத்தித் திட்டங்களுக்கு ரூ.16.6 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பிர தேச சபையின் 21 ஆம் வட்டாரமான ஜே/212 கிராம உத்தியோகத்தர் பிரிவின் அபிவிருத்தி வேலைத்திட் டங்களுக்கு சுமார் 16.6 மில்லியன் ரூபாவினை உறுப் பினர் சொ.சபேசன் அமைச் சர் மனோ கணேசனிடம் இருந்து பெற்றுக்கொண்டுள் ளார்.

கடந்த மாத இறுதியில் வலி.வடக்கின் அபிவிருத்தி தேவைகள் சம்பந்தமான கோரிக்கைகளுடன் உறுப்பி னர் சொ.சபேசன் அமைச்சர் மனோ கணேசனைச் சந்தி த்து வேண்டுகோள் முன் வைத்திருந்தார். இதையடு த்து வலி.வடக்கு பிரதேச சபையின் நிலைமைகளை ஆராய்ந்த அமைச்சர் முதற் கட்டமாக உறுப்பினர் சொ. சபேசனின் 21 ஆம் வட்டா ரமான ஜே/ 212 கிராம உத்தி யோகத்தர் பிரிவின் வீதி விளக்கு பொருத்துவதற்கு ஒரு மில்லியன் ரூபாவினை யும் வீதிகள் அமைப்பதற்கு சுமார் 15.6 மில்லியன் ரூபா என மொத்தம் 16.6 மில்லி யன் ரூபா நிதியினை முதற் கட்டமாக விடுவித்துள்ளார். இதையடுத்து அடுத்தமாத முற்பகுதியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஆரம் பிக்கப்படும் என வலி.வடக்கு உறுப்பினர் சொ.சபேசன் தெரிவித்துள்ளார். (இ-89)

# கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(கோப்பாய்)

கோப்பாய் பிரதேச தேசோ தய சபையினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோ ருக்கு 3 ஆம் கட்ட கல்வி கற் றல் உபகரணங்கள் வழங்கல் நிகழ்வு கோப்பாய் பிரதேச தேசோதய தலைவர் இ.மயில் வாகனம் தலைமையில் கோப் பாய் தேசோதய அலுவலங் கத்தில் நடைபெற்றது.

யாழ்.ஸ்ரீராம் ரெக்ஸ் உரி மையாளர் த.தவனேஸ்வர னின் நிதி அனுசரணையு டன் நடைபெற்ற இந்நிகழ் வில் ஸ்ரீராம் ரெக்ஸ் உரிமை யாளர் மாணவி ஒருவருக்கு கல்வி கற்றல் உபகரணங் களை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் பிரதம விருந்தின ராகக் கலந்து கொண்ட யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ். யுகேந்திரா மற்றும் யாழ். மாவட்ட தேசோதய தலைவர் தனேந்திரன் மற்றும் தேசோ தய பிரமுகர்களையும் படத் தில் காணலாம். (இ-134)

# திணைக்களங்கள் சபைகளை முடக்காமல் மக்கள் சேவைக்கு வழிவிட வேண்டும்

## தவிசாளர் வாமதேவன் சுட்டிக்காட்டு

(சாவகச்சேரி)

உள்ளூராட்சி நிறுவனங் களுக்கு அதிகாரப்பகிர்வு என்பது வெறும் வாய்ச் சொல் லாகவே காணப்படுகிறது. திணைக்களங்கள் சபை களை தமது கட்டுப்பாட்டுக் குள் வைத்துள்ளனவா? எனச் சிந்திக்க தூண்டுகிறது என சாவகச்சேரி பிரதேசசபை தவிசாளர் க.வாமதேவன் தெரிவித்துள்ளார். சாவகச் சேரி பிரதேச சபையில் இடம் பெற்ற சபை அமர்வின் போது தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வீதி மின் விளக்கு பொரு த்துவது தொடர்பாக இரண் டாவது சபை அமர்வின் போதே தீர்மானம் கொண்டு வந்த போதிலும் இன்றுவரை அதற் கான நிதியினை எம்மால் விடுவிக்க முடியவில்லை. உள்ளூராட்சி நிறுவனங்க ளுக்கு அதிகாரப்பகிர்வு என்பது வெறும் வாய்ச் சொல் லாகவே காணப்படுகிறது. திணைக்களங்கள் சபை களை தமது கட்டுப்பாட்டுக் குள் வைத்துள்ளனவா? என்று எண்ணத் தோன்றுகிறது. முக்கியமான நடவடிக்கை கள் திணைக்களம் சார் நட வடிக்கைகளால் முடங்கிக் காணப்படுகிறது.மக்களுக்கு எதுவும் செய்ய முடியாத நிலை யில் தான் நாம் இருக்கி றோம். பழுதடைந்த விளக்கு களைக் கூட திருத்த முடியாத நிலையில் நிதி விடயத்தில் முடக்கப்பட்டுள்ளோம். இதற் கான தீர்வு எப்போது கிடை க்கும் என்று தெரியவில்லை. திணைக்களங்களை குறை சொல்வது எமது விருப்பம் அல்ல: மக்கள் விருப்பங் களை நிறைவேற்ற முடியாத வகையில் திணைக்களங்கள் தடை போடுவது தான் ஏற் றுக்கொள்ள முடியாதுள்ளது.

திணைக்களங்கள் எம க்கு உரிய பதிலைக் கூறி மக்கள் சேவைக்கு வழி விட வேண்டும் எனத் தெரிவித்தி ருந்தார். (இ-30)



தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு முன்பாகவுள்ள வாய்க்கால் சேறும் சகதியுமாய் காணப்பட்டது. இந்நிலையில் பிரதேச சபையினரால் துப்புரவுப் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை விதாதா வள நிலையத்தில் NVQ - 02 தரத்திலான ஆங்கிலம் மற்றும் கணனிப் பாடநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப் பயிற்சி நெறிகள் 3 மாத காலம் நடத்தப்படுவதுடன் இப் பயிற்சியின் இறுதியில் கைத்தொழில் அதிகார சபையினால் பரீட்சை நடத்தப்பட்டு சித்தியடைந்தவர்களுக்குNVQ - 02 தரத்திலான சான்றிதழ்கள் வழங்கப்படும். இச் சான்றிதழுடன் தொழில்நுட்பக் கல்லூரி உட்பட பல அரச நிறுவனங்களில் NVQ-03 உட்பட ஏனைய NVQ மட்டங்களை அடைய வாய்ப்பு ஏற்படும்.

இக் கற்கை நெறிகளைத் தொடர்வதற்கு வயதெல்லை இல்லை. இக்கற்கை நெறியை கற்க விரும்பும் அனைவரும் கலந்துகொள்ள முடியும். க.பொ.த.சாதாரணதரத்தில் சித்தியடையாதவர்கள் இக்கற்கை நெறியைத் தொடர்ந்து NVQ -07 ஆம் மட்டத்தைப் பூர்த்தி செய்வதன் மூலம் பட்டதாரியாக முடியும்.

இப் பயிற்சி நெறிகளை பின்பற்ற விரும்புபவர்கள் எமது பிரதேச செயலக நிர்வாகப் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். (இ)

# விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

பிணைமுறி மோசடி தொடர்பில் கைது செய்யப்பட்ட பேர்பெச்சுவல் ட்ரஷரிஸ் நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் அதன் பிரதான நிறைவேற்று அதிகாரி கசுன் பலிசேன இம்மாதம் 27 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதனுடன் தொடர்புடைய வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (7)


## காயத்திரி திருமாங்கல்ய சேவை

திருமணம், பொருத்தம் பார்த்தல், நிச்சயித்தல், குறிப்பு எழுதுதல், காண்டம் பார்த்தல் போன்ற சேவைகளை மிகவும் திருப்திகரமாக செய்து வருகின்றோம். எமது சேவையினூடாக உங்கள் பிள்ளைகளின் மணவாழ்வினை மாங்கல வாழ்வாக்கிக் கொள்ளுங்கள்.

பதிவுகள் இலவசம்.

தொடர்புகளுக்கு:- 076 835 1932, 021 223 2222 உரும்பிராய்.

(5663)


## அடிக்கல் நாட்டும் நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி-வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலய சப்த தள இராஜகோபுர அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 6.21 தொடக்கம் 8.07 வரை இடம்பெறும். (7-30)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலத்தின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பிரதான மண்டத்தில் வித்தியாலய அதிபர் திருமதி லூட்விகா மகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வித்துறை துணை இயக்குநர் (திட்டமிடல்) இராசரத்தினம் ஜெனால்ட் அன்ரனி கலந்து கொள்வார்.(7)




ஸ்ரீராம ஜெயம்

## இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய வருடாந்த பிரமோற்சவ தினம்- 2018

13.09.2018 முதல் 22.09.2018 வரை

14.09.2018 இன்று வெள்ளிக்கிழமை

இரண்டாம் நாள் நாராயணர் திருக்கோலம்

**இசை அர்ப்பணம்:**

பாட்டு- திரு.க.ரஜீவன்

வயலின்- திரு.ப.சியாம்கிருஷ்ணா

மிருதங்கம்- திரு.சி.செந்தூரன்

கெஞ்சிரா- செல்வன் அ.சண்முகப்பிரியன்

021 224 2300

ஆலயதர்மகர்த்தா ச.கணேசலிங்கம்





# சேவை நலன் பாராட்டு

## திரு. பொன்னையா திருப்பதி (spe.trained primary)

Congratulations

**சேவை விபரம்**

26.01.1998-02.03.1999- யாழ். கெற்பேலி அ.த.க.பாடசாலை
03.03.1999- 14.01.2001- யா/ கோப்பாய் ஆசிரிய பயிற்சிகலாசாலை
15.01.2001-14.02.2010- யா/ கெற்பேலி அ.த.க. பாடசாலை
15.02.2010-06.09.2011- யா/ உசன் இராமநாதன் ம.வி.
07.09.2011-14.09.2018- யா/ போக்கட்டி அ.த.க.பாடசாலை

எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.பொ.திருப்பதி அவர்கள் அகவை அறுபது கண்டு ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ள இந்நாளில் சகல சௌபாக்கியங்களும் பெற்று அவரது ஓய்வுக்காலம் இனிதே சிறக்க வாழ்த்துகின்றோம்.

(அ-3837)

**பாடசாலைச் சமூகம், யா/ போக்கட்டி அ.த.க.பாடசாலை , கொடிகாமம்.**



LONDON METROPOLITAN UNIVERSITY

Pearson

The Management of
**ESOFT METRO CAMPUS - JAFFNA**
**Cordially Invites you for**

The GranD OPENING of

**ESOFT DEGREE DIVISION**

**Venue :** ESOFT METRO CAMPUS -JAFFNA
No.137, K.K.S Road, Jaffna

**Date :** 15th of Sep 2018 (Saturday)

**Time :** 10.33am Onwards

(அ-3834)

ESOFT
Shaping Lives, Creating Futures.

**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna | Hotline : 021 222 4142

40 Branches Island-wide | Sri Lanka's Largest Private Sector Higher Education Network



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூராடம் செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்:O/L/குவைத்<br>தொ.இ: B/8884 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 20<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: அரசதொழில் லண்டன்<br>தொ.இ: G/1141 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 31சூரிசெவ் 1 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/லண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/8885 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 22 உயரம்: 5'<br>தகைமை/தொழில்:MBBS/கனடா<br>தொ.இ: G/1167 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 24<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/கட்டார்<br>தொ.இ: B/8886 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 49 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:MSc/கனடா<br>தொ.இ: G/1168 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>கி.பா: 17செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/சுவிஸ் PR<br>தொ.இ: B/8887 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 27செவ் 12 இல்<br>உயரம்: 4'3"<br>தகைமை/தொழில்:ஆசிரியர்/தனியார்<br>தொ.இ: G/1174 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.





வரலாற்றுச்சிறப்புமிக்க புதூர் நாகதம்பிரான் ஆலயத்திற்கு, 108 அடி நவதள இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டல் நேற்றுக் காலை 9.30 மணியளவில் ஆலய பிரதம குருக்களின் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது 108 சங்குகள் வைத்து சங்குத்தான நிகழ்வும் விசேட பூஜையும் இடம்பெற்று அடிக்கல் நாட்டப்பட்டது. சுமார் 400 ஆண்டுகள் பழைமைவாய்ந்த புதூர் நாகதம்பிரான் கோயில் பல சிறப்புக்களைக் கொண்டதாகும். வவுனியா மாவட்டத்தில் அதிக உயரமுள்ள இராஜகோபுரமாக நாகதம்பிரான் ஆலயத்தின் இராஜகோபுரம் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# வடக்கு-கிழக்கு விவசாய மீள் எழுச்சிக்கு மூன்று மில்லியன் ரூபாய் கோரியுள்ளேன்

## விவசாய பிரதி அமைச்சர் தெரிவிப்பு




(குருமன்காடு)

விவசாயத்தை எழுச்சிபெறச் செசய்வதன் மூலமே மீண்டும் வடக்கு-கிழக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும். அதன் அடிப்படையில் வடக்கு-கிழக்கு விவசாய மீள் எழுச்சிக்காக மூன்று மில்லியன் ரூபாய் நிதியை கோரியுள்ளேன் என விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்று முன்தினம் விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன், வவுனியா மாவட்ட செயலகத்தில் பிரதி விவசாய பணிப்பாளர் இ.விஜயகுமார் தலைமையில்கலந்துரையாடல்ஒன்றை மேற் கொண்டிருந்தார்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள். நீர்ப்பாசனக் குளங்கள் புனரமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் விவசாயிகளுக்கான மானியங்களை பெற்றுக் கொடுத்தல் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

அத்துடன் விவசாய நிலங்கள் பல வனஇலாகா அதிகாரிகளால் கையகப்படுத்தப் பட்டுள்ளதாக தெரிவித்த விவசாயிகள் அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைத்ததுடன் விதை நெல் மற்றும் மேட்டுநிலப் பயிர்களுக்கான விதைகளை மானியமாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை முன்வைத்தனர்.

இதன்போது கருத்துத்தெரிவித்த விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன்,

விவசாயிகளின் வாழ்க்கை முறை, பொருளாதார முறை ஆகியவை முன்னேற்றமடையவில்லை. வடக்கு, கிழக்கு விவசாய மக்கள் மிகவும் கஷ்டப்பட்ட மக்கள். வடக்கு, கிழக்கு விவசாய .மக்களின் பிரச்சனைகளை ஆராய்ந்து அதனை தீர்ப்பதற்கு ஜனாதிபதி எனக்கு முழு ஆதரவு வழங்கியுள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கும் ஏனைய மாகாணங்களுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்தை இன்னும் முன்னேற்ற வேண்டியுள்ளது. அதன் அடிப்படையில் வடக்கு-கிழக்கு விவசாய மீள் எழுச்சிக்காக 3 மில்லியன் ரூபாய் நிதியை கோரியுள்ளேன். வடக்கு மாகாணம் விவசாயத்தின் மூலமே முன்னேற்றமடைந்திருந்தது. தற்போது விவசாயம் பின்தங்கிய நிலையில் உள்ளது. விவசாயத்தை எழுச்சி பெறச் செய்வதன் மூலமே மீண்டும் வடக்கு, கிழக்கில் அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

விவசாய அமைப்பு மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்களில் வெற்றிடங்களும் பல உள்ளன. அதனை நிவர்த்தி செய்வதன் மூலம் விவசாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனத் தெரிவித்தார்.

இதன்போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதிமொழி வழங்கியிருந்தார்.

இந்நிகழ்வில் அமைச்சரின் செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள், கமக்கார அமைப்பு உறுப்பினர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர்.(2-250)




# வேகக்கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மின்சாரக்கம்பத்துடன் மோதுண்டு விபத்து

## ஐந்து பேர் காயம்




(பனிக்கன்குளம்)

வவுனியா மாவட்டத்தில் கனகராயன்குளத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்துக்கொண்டிருந்த வான் ரக வாகனம் கனகராயன்குளம் மக்கள் வங்கிக்கு அருகே காணப்படும் வீதி வளைவில் சாரதியின் கட்டுப்பாட்டையிழந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் ஐவர் காயமடைந்த நிலையில் புளியங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

இந்த விபத்தின் காரணமாக சுமார் நான்கு மணித்தியாலயத்திற்கு மேலதிகமாக கனகராயன்குளம் பகுதியில் மின்சாரம் தடைப்பட்டிருந்மை குறிப்பிடத்தக்கது. (2-281)

# யூனியன்குளம் இணைப்பு வீதிக்கான பாலம் அமைப்பு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி கோணாவில் யூனியன்குளம் இணைப்பு வீதிக்கான பாலம் ஏழு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசத்திற்கு உட்பட்ட கோணாவில் மற்றும் யூனியன்குளம் கிராமங்களை இணைக்கின்ற இணைப்பு வீதியில் இதுவரை காலமும் பாலம் ஒன்று இன்மையால் மழை காலங்களில் குறித்த வீதியை வெள்ளம் குறுக்கறுத்துப் பாயும் போது போக்குவரத்துக்கள் பாதிக்கப்படுவதாகவும் இப்பகுதியில் பாலம் ஒன்றை அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் கரைச்சிப் பிரதேச சபையினால் சுமார் ஏழு இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் குறித்த இணைப்பு வீதிக்கான பாலம் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (2-315)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 91 பேருக்கு வவுனியாவில் இழப்பீடுகள் வழங்கி வைப்பு



(குருமன்காடு)

யுத்தத்தால் பாதிப்படைந்தவர்களுக்கான இழப்பீடு வழங்கும் நிகழ்வு வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

மீள்குடியேற்ற மற்றும் வடக்கின் அபிவிருத்தி பிரதி அமைச்சர் கே.கே.மஸ்தான் யுத்த இழப்பீட்டுக்கான கசோலைகளை வழங்கி வைத்தார்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற யுத்தம் காரணமாக வவுனியா மாவட்டத்தில் பாதிப்படைந்த 2 மதத்தலங்களுக்கான இழப்பீடாக 5 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாவும் மரணம் மற்றும் காயமடைந்தமைக்காக 8 பேருக்கு 2 இலட்சத்து 92 ஆயிரத்து 465 ரூபாவும், மக்களுடைய உடைமைகள் மற்றும் சொத்தழிவுகளுக்காக 81 பேருக்கு 25 இலட்சத்து 24 ஆயிரத்து 323 ரூபாவுமாக மொத்தம் 91 பேருக்கு 33 இலட்சத்து 94 ஆயிரத்து 788 ரூபாய் இழப்பீட்டுத் தொகைக்கான காசோலைகள்வழங்கப்பட்டன. (2-250)

# பயணப்பையினுள் கேரளக்கஞ்சா

## நொச்சிமோட்டை பாலத்தில் சம்பவம்

(குருமன்காடு)

கேரளக் கஞ்சாவுடன் இ.போ.சபை பேருந்தில் பயணித்த நபர் வவுனியாவில் கைது செய்யப்பட்டார்.

வவுனியா நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகே இ.போ.சபை பேருந்தை சோதனை செய்ததில் கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை 4.30 மணியளவில் இடம்பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த இ.போ.சபை பேருந்தை வவுனியா நொச்சிமோட்டை பாலத்திற்கு அருகே மறித்த பொலிஸார் திடீர் சோதனையில் ஈடுபட்டிருந்த சமயத்தில் பயணப் பையில் கேரளக் கஞ்சாவை வைத்திருந்த சந்தேக நபரொருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் இரணைமடு சந்தியிலிருந்து பேருந்தில் பயணித்ததாகவும் இவரிடமிருந்து மீட்கப்பட்ட கேரளக் கஞ்சாவின் நிறை மற்றும் பெறுமதி பின்னரே தெரிவிக்க முடியுமென பொலிஸார் தெரிவித்தனர்.

இதன் காரணமாக சுமார் 30 நிமிடங்களுக்கு மேலாக பேருந்து பாலத்தடியில் தரித்து நின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250-281)

# உரத்தை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கு வசதியில்லாத நிலை

## கிளிநொச்சி மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தில் காலபோக செய்கையின் போது விவசாயிகளுக்கு வழங்குவதற்கு எண்ணாயிரம் மெற்றிக்தொன் உரம் தேவைப்படுகின்றது. இவற்றை களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய களஞ்சிய வசதியில்லாத நிலை காணப்படுவதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் வே.ஆயகுலன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சி மாவட்டத்தில் வருடாந்தம் காலபோகத்தின் போது பாரிய மற்றும் நடுத்தர சிறுகுளங்கள் மானாவாரிப் பயிர் செய்கை நிலங்கள் உள்ளடங்கலாக சுமார் 59 ஆயிரம் முதல் 60 ஆயிரம் ஏக்கர் வரையான நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் பயிர்ச் செய்கையின் போது விவசாயிகளுக்கான மானிய உரம் கமநலசேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இதன் பிரகாரம் மாவட்டத்திற்கு தேவையான உரத்தை களஞ்சியப்படுத்தி வைக்கக்கூடிய போதிய களஞ்சிய வசதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் காலபோகத்தின் போது விவசாயிகளுக்கு வழங்குவதற்கு எண்ணாயிரம் மெற்றிக் தொன் உரம் தேவைப்படுகின்றது.

இவ்வாறு தேவையான உரத்தை களஞ்சியப்படுத்தக்கூடிய போதிய களஞ்சிய வசதிகள் இல்லை.

960 மெற்றிக்தொன் உரத்தினை களஞ்சியப்படுத்தக் கூடிய களஞ்சிய வசதிகள் மட்டுமே உள்ளதாகவும் மேலதிக உரத்தை களஞ்சியப்படுத்தக்கூடிய களஞ்சிய வசதிகள் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)




# நந்திக்கடல், நாயாற்றை ஆழமாக்குவதற்கு திணைக்களத்தின் அனுமதி பெறவேண்டும்

## முல்லை.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கண்டாவளை)



நந்திக்கடல்மற்றும்நாயாற்று சிறுகடல் பகுதிகளை ஆழப்படுத்துவதற்கு திணைக்களங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு ஆழமாக்கும் திட்டத்தை செயற்படுத்த வேண்டியுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வரட்சியினால் ஏற்பட்ட அதிக வெப்பம் காரணமாகவே நந்திக்கடல் பகுதியில் கடந்த வருடம் போன்று மீன்கள் உயிரிழந்துள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதியில் நேற்று முன்தினம் பெருமளவான மீன்கள் இறந்து கரையொதுங்கியுள்ளதுடன், இப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த மாவட்ட அரசாங்க அதிபர், நந்திக்கடல் மற்றும் நாயாற்று சிறுகடல் பகுதிகளை ஆழப்படுத்துவதற்கு இந்த வருட வரவு- செலவுத்திட்டத்தின் கீழ் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனை ஆழப்படுத்துவதற்கு சில தடைகள் காணப்படுகின்றன.

அதாவது, வனஜீவராசிகள் திணைக்களத்தினால் நாயாறு மற்றும் நந்திக்கடல் ஆகிய பிரதேசங்கள் தேசிய பாதுகாப்பிற்குரிய பிரதேசங்களாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதனால் அந்த திணைக்களங்களின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டு இத்திட்டத்தை செயற்படுத்த வேண்டியுள்ளது.

இது தொடர்பான கடந்த மாதத்தில் கூட்டம் ஒன்றை கூடி உரிய திணைக்களங்களுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுத்துள்ளோம்.

மீளவும் இதனை எதுவிதமாக செயற்படுத்தலாம் என்பது தொடர்பில் ஆராய்ந்து இந்த வருடத்தில் இதனை செய்வதற்கு எண்ணியிருக்கின்றோம் அல்லது அடுத்த வருடத்தில் இந்தப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக் கூடியதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-315)

# அனுமதிக்கப்பட்ட சுருக்குவலைத் தொழிலை நடைமுறைப்படுத்தக்கோரி மீனவர்கள் ஆர்ப்பாட்டம்

## அனுமதி கிடைக்காவிடின் உயிரை மாய்க்கவும் தயங்கோம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்திற்குட்பட்ட மாத்தளன் பகுதி மீனவ குடும்பங்கள் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரியின் வாகனத்தை வெளியில்செல்லவிடாது தடுத்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை முன்னெடுத்துள்ளார்கள்.

மாத்தளன் பகுதி மீனவர்கள் தங்களுக்கு அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலையைப் பயன்படுத்தி தொழில் செய்ய அனுமதிகோரி இந்தக் கவனயீர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளார்கள்.

இதேவேளை தங்கள் கடலில் சுருக்குவலையின் அனுமதியுடன் வெளி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் வந்து மீன்பிடித்து வருவதாகவும் சுருக்குவலைக்கான அனுமதி தங்களிடம் இருந்து மாத்தளன் கடலில் உள்ள மீனினை பிடிக்கமுடியாத நிலையில் தாங்கள் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்கள்.

மாத்தளன்பகுதிக்கு நேற்று முன்தினம் கடற்றொழில் நடவடிக்கையைக்கண்காணிக்க சென்ற கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் வாகனத்தையும் அதிகாரிகளையும் மாத்தளன் பிரதேச மீனவர்கள், பெண்கள் உள்ளிட்டவர்கள் மறித்து மண்ணெண்ணெய்க் கானுடன் தங்களுக்கான முடிவை அதிகாரிகள் தெரிவிக்காவிட்டால் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக தெரிவித்து கவனயீர்ப்பு ஒன்றினை மேற்கொண்டனர்.

இதன்போது குறித்த அதிகாரிகள் வழிமறித்த மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்கள்.

கடந்த ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு கடற்றொழில் நீரியல்வள அமைச்சர் வந்து சுருக்குவலை தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என அறிவித்து விட்டு சென்றுள்ள நிலையில் இன்றுவரை ஒன்றரை மாதங்களாக சுருக்கு வலைக்கான அனுமதி வைத்திருந்தும் தாங்கள் தொழில் செய்யமுடியாத நிலையில் இருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இலங்கையில் எல்லா மாவட்டங்களுக்கும் ஒரே சட்டம்தான். ஆனால் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மட்டும் இச்சட்டம் விதி விலக்கா என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

திருகோணமலை, யாழ்ப்பாணம் மாவட்டங்களை சேர்ந்த தொழிலாளர்கள் சுருக்குவலையை பயன்படுத்தி முல்லைத்தீவு கடலில் தொழில் செய்கின்றார்கள். எங்கள் கடலில் நாங்கள் தொழில் செய்யமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் மாத்தளன் பகுதி மக்களின் பிரச்சினைக்கு விரைவில் உயர் அதிகாரிகளுடன் கதைத்து முடிவு பெற்றுக் கொடுப்பதாக போராட்டம் நடத்திய மக்களுக்கு தெரிவித்துள்ளதைத் தொடர்ந்து அவர்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளார்கள்.

தொடர்ந்தும் சுருக்கு வலைக்கான அனுமதி இருந்தும் தொழில் செய்வதற்கான அனுமதி கிடைக்காவிடின் உயிரை மாய்க்கவும் தாங்கள் தயங்கமாட்டோம் என குடும்பப் பெண்கள் தெரிவித்துள்ளார்கள். (2-281)

# கிளிநொச்சி பொதுச்சந்தையை நவீன சந்தையாக அமைப்போம்

## கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் தெரிவிப்பு




(கண்டாவளை)

நல்லாட்சி இரண்டு வருடங்களில் கவிழ்ந்து விடும், அதன்பின்னர் நாங்கள் ஆட்சியமைத்து கிளிநொச்சி பொதுச் சந்தையை நவீன சந்தையாக அமைப்போம் என்று கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சிக்கான தனியான தீயணைப்புப் பிரிவின் அலுவலகமும் வாகனங்கள் கையளிப்பு நிகழ்வும் கடந்த 11ஆம் திகதி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய தவிசாளர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு நூலகம் இல்லாத நிலை காணப்படுகின்றது. பல்கலைக்கழகத்தின் இரண்டு பீடங்கள் இங்கே இயங்குகின்றன. தொழில்நுட்ப கல்லூரிகள் இயங்குகின்றன. தேசிய பாடசாலைகள் உள்ளன.

பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இங்கே கல்வி கற்றுவருகின்றனர். எமது மாவட்டத்தைச்சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் வெளியிடங்களில் பல்கலைக்கழக உயர் கல்வியை கற்று வருகின்றனர்.

ஆனால் இங்கு நூலக வசதி இல்லாத நிலை காணப்படுகின்றது. நவீன வசதி கொண்ட நூலகம் ஒன்றை அமைத்துத்தரவேண்டும் என்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம் சுவாமிநாதனிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

கிளிநொச்சி நகரத்தின் பொதுச்சந்தையை நவீன வசதிகொண்ட நவீன திட்டமிடலுக்கு அமைவாக மூன்று மாடிகொண்ட சந்தைக் கட்டடத்தொகுதியினை சுமார் 765 மில்லியன் ரூபா செலவில் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளது எனத் தெரிவித்துள்ளார். (2-315)

# கட்டடத்தின் மேல் பகுதியில் உடைவு; அச்சத்துடன் செல்லும் மக்கள்

## வவுனியா நகர சபையினர் கவனத்தில் எடுப்பார்களா?



(பனிக்கன்குளம்)

வவுனியா பழைய பேருந்து நிலையத்திலுள்ள வியாபார நிலையங்கள் அமைந்துள்ள கட்டடத்தில் மேலுள்ள பகுதிகளிலிருந்து சில பகுதிகள் மக்கள் போக்குவரத்துச் செய்யும் பகுதிகளில் உடைந்து தலைமேல் வீழ்ந்து வருகின்றன.

இதனால் அப்பகுதிகளில் செல்லும் மக்கள் அச்ச நிலையில் பயணிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னரும் ஒருவருக்கு மேல் சிறிய பகுதி உடைந்து வீழ்ந்துள்ளது. எனினும் அதனால் அவருக்கு பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

இது தொடர்பாக வவுனியா நகரசபையினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அத்துடன் அதனைச் சென்று பார்வையிடவும் இல்லை என்றும் அப்பகுதியிலுள்ள வர்த்தக நிலைய உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (2-281)



நானாட்டான் பிரதேசத்திற்குட்பட்ட பரிகாரிகண்டல் மெதடிஸ்த திருச்சபை ஏற்பாட்டில் அமரர் ரூபன் அடிகளாரின் நினைவாக குருதிக் கொடை நிகழ்வு அண்மையில் திருச்சபை ஆலயத்தில் நடைபெற்ற போது...

# கூட்டுப் புதைகுழிகளை ஞாபகார்த்த அமைவிடமாக பேணிப் பாதுகாக்க வேண்டும்

## இடைக்கால அறிக்கையில் பரிந்துரை



### அவசரமான பரிந்துரைகள்

காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் பிரதான நோக்கம் ஏற்புடைய அதிகாரிகளுக்கு பரிந்துரைகளை சமர்ப்பிப்பதும் காணாமல் போதல் பற்றிய சம்பவங்களின எண்ணிக்கையைக் குறைப்பதும் பாதிக்கப்பட்டோரினதும் குடும்பங்களினதும் உச்ச நன்மையை மையப்படுத்திய நிவாரணம் வழங்கும் வழிமுறையை அறிமுகப்படுத்துவதுமாகும். குறிப்பாக காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நினைவு கூரல் இழப்பீடுகள் மற்றும் மீள் நிகழாமையைய பொறுப்பேற்கிறது. அதேசமயம் சட்ட ரீதியான மறுசீரமைப்புக்கள் தொடர்பாக பரிந்துரைகளை முன்வைப்பதற்கும் அதிகாரம் கொண்டுள்ளது.மேலும் காணாமற்போனோர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற்போனோரின் குடும்பங்களுக்கான இடைக்கால நிவாரணம் மற்றும் நலன்புரி வழிமுறைகளை முன்மொழிவதற்கும் காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகச் சட்டத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காணாமற் போனோரினதும் கண்டுபிடிக்க முடியாதவர்களின்தும் குடும்பங்களினதும் தற்போதைய சமூகப் பொருளாதார நிலைமை மிகவும் கவலைக்கிடமானது. இறுதியான இழப்பீடு பற்றிய வழிமுறையை ஆரம்பிக்கும் வரையும் அவர்களால் எவ்வகையிலும் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையேயுள்ளது. காணாமலாக்கப்பட்டோர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற்போனோரின் குடும்பங்களுக்காக அவசரமான மற்றும் அண்மித்த நிவாரணங்களாக இடைக்கால நிவாரணங்களை வழங்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

மேலதிகமாக வலிந்து மேற்கொள்ளப்பட்ட காணாமலாக்கப்படுதல் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிப்பது பற்றி கவனிக்காது இருக்க முடியாத கோரிக்கை நிலவுகிறது. இவை கடந்த காலத்தில இடம்பெற்ற குற்றவியல் குற்றங்கள் அல்ல. காணாமற்போனோர், வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற் போன குடும்ப உறவுகளுக்கு காணாமற்போனோர் பற்றி ஏதாவது தகவல்கள் வழங்கும் வரை தொடர்ச்சியாக நிலவும் குற்றவியல் குற்றங்களாகும். எனவே அரசு போதிய சட்ட வரம்பை சிருஷ்டிக்கும் குறித்துரைக்கப்பட்ட அரச செயற்பாட்டாளர்களை விசாரணை நடவடிக்கைகளுக்காக வழக்குத்தொடர்ந்து பராமரிப்பதற்கு சக்தியூட்ட வேண்டிய அவசர தேவையுள்ளது.

### இடைக்கால நிவாரண முன்மொழிவுகள்

காணாமற் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் நிவாரணங்களையும் இழப்பீடுகளையும் பற்றிய மாற்றம் தொடர்பாக வலியுறுத்துகிறது. நிவாரணம் என்பது ஒடுக்குமுறைக்கு உட்பட்டோர் பொருளாதார, சமூக மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் ஏனைய பொறுப்புக்களில் இருந்து விடுவித்து அவர்களை அமைதிப்படுத்துவதற்கு வழங்கும் அவசர உதவிகளாகும். இவை எந்த வகையிலும் இழப்பீட்டுக்கான உரிமைகளுக்கு தடையாகவோ அல்லது இழப்பை யதார்த்த நிலைக்குக் கொண்டு வருவதற்கான மேற்படி உரிமைகளை இல்லாதொழிப்பதற்கான காரணியாகவோ அமைவதில்லை.

நிவாரணங்களை வழங்குவது உரிய போதுமான பயனுறுதி வாய்ந்த இழப்பீட்டிற்கான உரிமையை எந்த வகையிலும் இல்லாதொழிக்காததோடு நீதிமன்ற நடவடிக்கை மூலம் வகைப் பொறுப்புக்கு உட்படுத்துவதற்குரிய உரிமைக்கு எதுவிதமான மட்டுப்பாட்டையும் ஏற்படுத்தமாட்டாது. முன்னைய நட்டஈடு வழங்கும் நடவடிக்கை மூலம் பாதிக்கப்பட்டோருக்கிடையே நம்பிக்கையீனம் ஏற்படுவதற்கும் உண்மை மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கும் அரசுக்குள்ள விருப்பம் தொடர்பாக சந்தேகமும் உருவாகியுள்ளது.

நாம் முன்வைக்கும் பிரேரணைகள் சார்பில் ஏற்புடைய அரச் கொள்கைகளை உடனடியாகத் தயாரிப்பதைக் கவனததில் எடுத்து காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பின்வரும் பரிந்துரைகளைச் சமர்ப்பிக்கின்றது

நிதி உதவி வேலைத்திட்டம்: நிதி உதவி வேலைத் திட்டத்தைத் தயாரித்து நிரந்தரமான வருமான மார்க்கம் இல்லாத காணாமற்போனோர்.வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் இராணுவ நடவடிக்கையின்போது காணாமற்போனோரின்உயிர்வாழும்மனைவி, பிள்ளைகள் மற்றும் உயிர் வாழும் பெற்றோரில் ஒருவருக்கு மாதாந்த வாழ்க்கைக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்தல். இது இடைக்கால நிவாரணமாக வழங்கப்படுவதோடு இறுதியாக இழப்பீடு வழங்கப்பட்ட பின்பு இது நிறுத்தப்படும்.

கடன் நிவாரண வேலைத் திட்டம்: காணாமற்போன கண்டுபிடிக்க முடியாதவர்களின் குடும்பங்களை தனியான ஒரு பிரிவின் கீழ் உள்ளடக்கி நிதியமைச்சு தீர்மானிப்பதற்கேற்ப கடன் கட்டுப்பாட்டில் இருந்து நீக்குதல் உதாரணமாக தேறிய நிதிக்கடன்.

பொருளாதார நிலையான தன்மை மற்றும் சுயதொழில் முயற்சியின் மேம்பாட்டிற்காக நிதியமைச்சின் கீழ் செயற்படும் என்டபிரைஸ் ஸ்ரீலங்கா கடன் முன்மொழிவு மூலம் கடன் வழங்குதல்.

வீடமைப்பை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்: காணாமற்போன மற்றும் கண்டு பிடிக்க முடியாதோரின் குடும்பங்கள் தனியான பிரிவின் கீழ் உட்படுத்தி வீடமைப்பு அமைச்சின் கீழ் வீடமைப்புக் கருத்திட்டத்திற்கமைய வீடுகளை வழங்குதல் அல்லது பகுதி பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை முழுமையாகப்பூர்த்தி செய்வதற்கு நிதி உதவி வழங்குதல்.

கல்விக்கான ஒத்துழைப்பு வழங்கும் வேலைத்திட்டம்: காணாமற்போன மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகளுக்காக அவர்களின் ஆரம்ப மற்றும் இரண்டாம் நிலைக் கல்வியைப் பூரணப்படுத்துவதற்கு அத்தியாவசியமான செலவுகளுக்காக கல்வியமைச்சின் கீழ் புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தை உருவாக்கி மாதாந்தம் 2 ஆயிரம் ரூபாய் நிதி உதவி வழங்குதல்.

தொழிற்பயிற்சி மற்றும் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்தும் வேலைத்திட்டம்: தொழில் செய்யும் போதே பயிற்சியும் உள்ளடக்கப்பட்ட தொழிற்நுட்ப பயிற்சிப் பாடநெறியை அறிமுகப்படுத்துதல்.

தொழில் வாய்ப்புக்கான ஒதுக்கீடு: விசேட தொழில்வாய்ப்பை வழங்குவதற்கு ஒரு வீதத்தை ஒதுக்கி அவசியமான தேர்ச்சியுடன் கூடிய காணாமற்போன, வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கான அரச துறையின் தொழில் வாய்ப்புக்களை ஒதுக்குதல்.

இந்த நிவாரணங்களுக்காக காணாமலாக்கப்பட்டோர் பற்றிய அலுவலகச் சட்டத்தின் பொருள் கோடலுக்கமைய காணாமற்போன, வலிந்து காணாமலாக்கப்பட்ட குடும்பங்களுக்கு மாத்திரம் அல்லாது போருக்குப் பின்னர் காணாமற்போன சிவில் குழப்பங்களின் போது காணாமற்போனோரும் உள்ளடக்கப்படுவர். இந்த நிவாரணங்கள் அநேகமாக அழுத்தங்களுக்கு உள்ளான ஒரு பிரதான குடியிருப்பாளர் மாத்திரம் இருக்கும் குடும்பங்கள், பிள்ளைகள் உள்ள குடும்பங்கள், தங்கி வாழ்வோர் உள்ள குடும்பங்கள், விசேட தேவைக்குட்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள், வயோதிபர்கள் உள்ள குடும்பங்கள் மற்றும் பாலியல் வன்முறைகளுக்கு உட் படுத்தப்பட்டவர்கள் உள்ள குடும்பங்கள் ஆகியோருக்கான விசேட கவனிப்பைக் குறிக்கோளாகக் கொண்டு பரிந்துரைக்கப்படுகிறது.

### நீதிக்கான பரிந்துரைகள்

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்கள் தொடர்பான நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அவசரத் தேவைகளைப் புரிந்து கொண்டு தகுதியானதும் பயனுறுதிவாய்ந்ததுமான விசாரணைகள் மற்றும் வழக்குத் தொடரும் செயல் முறையை உறுதிப்படுத்துவதற்கு காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் பின்வரும் பரிந்துரைகளைப பரிந்துரைக்கின்றது.

### வலிந்து காணாமலாக் கப்பட்டமை தொடர்பான சட்டத்தை வலுவாக்கம் பெறச் செய்தல்

வலிந்து காணாமலாக்கப்படுதல்களின் தொடர்ச்சியை அடையாளம் காண்பதும் குற்றவியல் குற்றச் சட்டம் அமுலாவதற்கு முன்னர் இடம் பெற்ற சம்பவங்களின் உள்ளடக்கங்களை சேர்த்தலும்.

சட்டத்தின் மூன்றாவது வாசகத்தைத் திருத்தி அனைத்து வகை குற்றவியல் குற்றவாளிகளையும் உள்ளடக்கக் கூடிய வகையிலும் வலிந்து காணாமலாக்கப்படுதலை உள்ளடக்கக்கூடிய வகையிலும் சட்டத்தைத் திருத்துதல்.

வலிந்து காணாமலாக்கப்படுதலை மனிதத்துவத்திற்கு எதிரான குற்றமாக அடையாளம் காணுதல் சட்டத்தின் 3 வாசகத்தை திருத்தி சகலவிதமான கட்டளையிடும் பொறுப்புக்களை உள்ளடக்குவதுடன் குறிப்பாக வலிந்து காணாமலாக்கப்படும் கட்டளைகளை உள்ளடக்குதல்.

சட்டத்தின் 15 (3) வாசகத்தைத் திருத்தி காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மனித உரிமைகள் ஆணைக்குழுவுடனும் ஏனைய சட்டங்களை அமுலாக்கும் நிறுவனங்களுடனும் இணைந்து தனிநபர் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் அமைவிடங்களுக்கு பிரவேசிப்பதற்கான உரிமையை வழங்குதல்.

சட்டத்தின் 15 ஆவது வாசகத்தைத் திருத்தி தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பெயர்களை உத்தியோகபூர்வப் பதிவேட்டில் சேர்த்துக் கொள்வதற்கான திட்டவட்டமான கால எல்லையை நிர்ணயித்தல். வேண்டுமென்றே இதனை செய்யாமல் இருத்தல் அல்லது மேற்படி பதிவேட்டில் பெயர்களைச் சேர்ப்பதனை தடைசெய்தல் என்பவற்றிற்கு ஏற்புடைய தண்டனைகளை உட்சேர்த்தல்.

சட்டத்தின் 20 (3)வது வாசகத்தைத் திருத்தி மேல் நீதிமன்றத்திற்கும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கும் காணாமற்போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திற்கும் மனுக்களை அனுப்புவதற்கு வாய்ப்பளித்தல்.

சட்டத்தின் 6 ஆவது வாசகத்தைத் திருத்தி கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்டுள்ள பிரத்தியேக நியாயாதிக்க அதிகாரத்தை நீக்கி குற்றவியல் குற்றம்புரியப்பட்ட பிரதேசத்திற்குரிய மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரத்தை வழங்குதல்.

### விசாரணைகளும் வழக்குத் தொடருதலும்

வலிந்து காணாமலாக்கப்படுதலுக்கு ஏற்புடைய வழக்குத் தொடுத்தல்களை துரிதமாக நிறைவேற்றுவதற்கும் வழக்குகளை பராமரிப்பதற்கும் முக்கியத்துவம் வழங்குதல்.

சகலவிதமான நியாயமற்ற கைதுகளையும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துதலையும் கைது செய்யப்பட்டிருக்கும்போது நிகழும் உயிரிழப்புக்களின் போதும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏதாவது ஓர் வழக்கின் குற்றம் சுமத்தப்பட்டவர் அல்லது சந்தேக நபராக பெயர் குறிப்பிடப்பட்டவர் அரச உத்தியோகத்தராகவோ ஆயுதப்படைகளின் அல்லது பொலிஸ் படை உறுப்பினராகவோ இருப்பின் குறிப்பிட்ட வழக்கு விசாரித்து முடியும்வரை அந்நபரை அவரது சேவையிலிருந்து இடைநிறுத்துதல். ஆயுதப்படை அல்லது பொலிஸ்படை உறுப்பினரை சேவை நிலையத்தில் இருந்து இடமாற்றம் செய்தல், பதவி உயர்வு வழங்குதல் அல்லது வேறு பதவி வழங்குதல் என்பன அவரது வழக்கு விசாரணை முடிவு செய்யப்படும்வரை மேற்கொள்ளப்படக்கூடாது.

மனித எழும்புக்கூடுகள் சரியாக அடையாளம் காணப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக தற்போது மரண விசாரணை பற்றிய சட்ட அமைப்புக்களை திருத்த எடுக்கப்பட்டுள்ள முயற்சிகளை துரிதப்படுத்தவும் தேடுதல் மீளப்பெறுதல் அடையாளம் காணுதல் தொடர்பான முயற்சிகளுக்கு பொறுப்பான நிறுவனங்களுக்கிடையில் இணைப்பாக்கத்தை ஏற்படுத்துதலும்.

சட்டத்தை அமுலாக்கும் உத்தியோகத்தர்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு, நீதிமன்றத்திற்கு காணாமலாக்கப்படுதல் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கும் வழக்குத் தொடுப்பதற்கும் தண்டனைகளுக்கும் போதிய பௌதீக வளங்களும் மனித வளங்களும் வழங்கப்பட வேண்டும்.

எலும்புக்கூடுகள் மற்றும் மனித அவயவங்கள் பற்றி அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான தேவைகளை ஏற்படுத்துதல்.

### தடுப்பு

ஆட்கள் கைது செய்யப்படும் போதும் தடுத்து வைக்கப்படும் போதும் உரிய செயல்முறைகளைப் பேணுதல்.

தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் தடுத்துவைக்கப்படும் மத்திய நிலையங்களின் முழுமையான பட்டியல் ஒன்று பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்.

நீதிமன்ற மீளாய்வு இன்றி சந்தேக நபர்களும் குற்றம் சுமத்தப்பட்டவர்களும் நீண்டகாலமாக தடுத்து வைக்கக்கூடிய பயங்கரவாத தடைச்சட்டத்தின் ஏற்பாடுகளை நீக்குதல் அல்லது சீர்திருத்துதல்.

### நினைவுகூறுவதற்கான அவசரமான பரிந்துரைகள்

காணாமற்போனோர் மற்றும் இராணுவ நடவடிக்கைகளின் போது காணாமற்போன தமது அன்பார்ந்தவர்களைப் பற்றிய ஞாபகத்தோடு நீண்டகாலமாக தனிமையில் வேதனையுடன் இருந்த குடும்பங்களின் தேவைகளைப் புரிந்து கொண்டு பல தசாப்தங்களாக அனைத்து இனங்களுக்கும் உரித்தானவர்கள் காணாமற் போயுள்ளமையை ஏற்றுக்கொள்வது இலங்கை மக்களின் தேவையாகுமெனவும் அது தகுதியானது எனவும் நாம் அடையாளம் கண்டுள்ளோம். இதற்கமைய காணாமற்போனோருக்கான நினைவு தினம் ஒன்றைக் குறிப்பிடுதல்.

பத்தரமுல்ல பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னமான அஹிம்சக்க ஆராமய என்ற ஞாபகார்த்த மண்டபத்தை மீள ஸ்தாபித்தல்.

அகழ்வு நடவடிக்கைகளின் பின்னர் கூட்டுப் புதைகுழிகள் ஞாபகார்த்த அமைவிடங்களாகப் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும்.



# பண்ணாகம் விசவத்தனை அருள்மிகு ஸ்ரீ முருகமூர்த்தி கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பக்ஷ

# மஹா கும்பாபிஷேக சிறப்பிதழ்

## 14.09.2018 வெள்ளிக்கிழமை

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் விசவத்தனையான்.

பண்ணாகம் விசவத்தனைப் பதியினில் பன்னெடுங்காலமாக வீற்றிருந்து திருவருள் பாலிக்கும் கலியுகவரதன் முருகப்பெருமானின் மஹா கும்பாபிஷேகம் இன்று பக்தி பூர்வமாக நிகழப் பெறவுள்ளது.

பெரும் நிதி மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்ட கோவில் திருப்பணி வேலைகள் கடந்த இரண்டு வருடங்களாக நடை பெற்று நிறைவுற்று இன்று மஹா கும்பாபிஷேகம் நிகழப் பெறவுள்ளமை சிறப்பிற்குரியது. முருகப் பெருமானின் திருவருள் கைகூடிவர பாரெல்லாம் பரந்து வாழும் பண்ணாக உறவுகள் தாராள மனதுடன் அள்ளி வழங்கிய திருப்பணி நிதியின் பங்களிப்புடன் இப்பாரிய புனர்நிர்மாண வேலைகள் பரிபாலன சபையினராகிய நாம் செய்திட முடிந்தது.

பண்ணாகத்தின் அடையாளமாக, கண்ணாக, பொக்கிஷமாக திகழும் எம்பெருமானின் திருத்தலத்தில் இன்று மகோன்னதமான மஹா கும்பாபிஷேகம் நிகழப் பெறுகின்றமை சிறப்பிற்குரியது. முத்தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகப் பெருமானுக்கு இன்று ஆறாவது மஹா கும்பாபிஷேகம் நிகழவுள்ளது.

1912 இல் முதலாவது மஹா கும்பாபிஷேகமும் தொடர்ந்து 1928 இல் இரண்டாவதும் 1954 இல் மூன்றாவதும் 04.06.1982 இல் நான்காவதும் 18.03.1998 இல் ஐந்தாவதாகவும் நிகழப்பெற்ற மஹா கும்பாபிஷேகம் இன்று 14.09.2018 வெள்ளிக்கிழமை ஆறாவது மஹா கும்பாபிஷேகமாக நிகழப் பெறவுள்ளது.

வேண்டுவார்க்கு வேண்டுவனவற்றை வாரி வழங்கும் முருகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் மெய்யடியார்களுக்கும் பாரெங்கும் பரந்து வாழும் முருகப் பெருமானின் அடியார்களுக்கும் எம்பெருமானின் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்க முருகப் பெருமானின் தாள் பணிகின்றோம். எம்பெருமானின் திருத்தலத்தில் இன்னும் பல திருப்பணி வேலைகள் நடைபெற இருக்கின்றன. அடியவர்கள் தங்களால் முடிந்த திருப்பணி நிதியினை வழங்கி திருப்பணி வேலைகள் யாவும் நிறைவடைய உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"குகனுண்டு குறையில்லை"

தொகுப்பு:-மு.பாபுஜி
செயலாளர்
பண்ணாகம் விசவத்தனை
முருகமூர்த்தி கோவில்
பரிபாலன சபை.

### பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசியுரை

கிராமங்களின் உயிர்நாடியாக விளங்குபவை ஆலயங்களே. சைவத்தமிழ் மக்களின் பண்பாட்டு நடைமுறைகள் யாவும் ஆலயங்களை ஆதாரமாகக் கொண்டே அமைகின்றன. ஆதலால்தான் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என நம் முன்னோர் கூறிச் சென்றனர். அந்த வகையில் பண்ணாகம் விசவத்தனை அருள்மிகு ஸ்ரீமுருகமூர்த்தி கோவிலும் அப்பகுதி மக்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்ததாக நீண்டகாலம் விளங்கி வருகிறது.

சிவாகம முறைப்படி நித்திய, நைமித்தியங்கள் நடைபெறும் இவ்வாலயத்தில் இன்று புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. புதுப்பொலிவுடன் விளங்கும் அழகுமிகு ஆலயத்தில் முருகப்பெருமான் அருட்பொலிவுடன் வீற்றிருந்து அடியார்கள் அனைவருக்கும் நல்லருள் பாலித்து சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை வழங்க வேண்டுமெனப் பிரார்த்தித்து நல்லாசி கூறுகிறோம்.

சிவஸ்ரீ ஸ்ரீவத்ஸ வரதராஜ
இராஜேஸ்வரக்குருக்கள்
பிரதிஷ்டா பிரதமகுரு.

### வடமாகாண சபை உறுப்பினரின் வாழ்த்துரை

பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமானின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற வேண்டுகின்றேன்.

எமது கிராமத்தின் பாதுகாப்பையும் மக்களின் விருப்புக்களையும் வழங்கி அருள்பாலித்துக்கொண்டு வேல் கொண்டு வினை தீர்க்கும் குமரனாய் எழுந்தருளி உள்ள விசவத்தனை முருகனுக்கு கும்பாபிஷேகம் நடைபெறுவது மிக்க மகிழ்ச்சி. எமது முருகன் அடியவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றி வைப்பார். எல்லா மக்களுக்கும் முருகன் அருள் கிடைக்க இந்த பொன்னாளில் வேண் டுகின்றேன்.

சபா.குகதாஸ்
வடமாகாண சபை
உறுப்பினர்.

### பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

இன்றைய தினத்தில் பண்ணாகம் விசவத்தனை முருகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது மகிழ்ச்சியைத் தருகிறது. பண்ணாகம் மக்களின் குலதெய்வமாக விளங்கும் முருகப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழப்பெற எம்பெருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றேன்.


நா.க.கிருஸ்ணமூர்த்தி
தலைவர் பண்ணாகம்
விசவத்தனை முருகமூர்த்தி கோவில்
பரிபாலன சபை.

(5660)

# பாரதம்


## ராஜீவ் கொலை விவகாரம்

# ஏழு தமிழர்களையும் மனிதாபிமான முறையில் விடுவிக்க வேண்டும் - வைகோ வலியுறுத்து


▲ முருகன்


▲ சாந்தன்


▲ பேரறிவாளன்


▲ நளினி


▲ ரவிச்சந்திரன்


▲ ராபர்ட் பயஸ்


▲ ஜெயகுமார்

(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் சிறையில் இருக்கும் ஏழு பேரையும் மனிதாபிமானத்தின் அடிப்படையில் விடுவிக்க வேண்டுமென, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

கோவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை செய்தியாளர்கள் சந்திப்பின் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்,

பேரறிவாளன் உள்ளிட்ட ஏழு பேரும் கடந்த 27 ஆண்டுகளாக சிறை வாழ்வை அனுபவித்து வரும் நிலையில். அவர்களின் இளமை வாழ்வே அழிந்துவிட்டது.


எனவே அவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதே அனைவரது விருப்பமாகவும் உள்ளதென்பதை கருத்தில் கொண்டு அவர்களை விடுவிக்க வேண்டும்.



அத்தோடு. அவர்களை சிறையிலிருந்து விடுதலை செய்வதாக அமைச்சரவையும் தீர்மானம் எடுத்துவிட்டது.

எனவே ஆளுநரின் அனுமதியுடன் அவர்கள் வெளியே வருவார்கள் என நம்புகிறேன் என வைகோ மேலும் தெரிவித்துள்ளார். (7)

# கொதிகலன் வெடிப்பு ஆறு பேர் உயிரிழப்பு



(பிஜ்னோர்)

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் பிஜ்னோர் மாவட்டத்தில் அமைந்துள்ள பெற்றோலிய இரசாயன தொழிற்சாலையில் நேற்று கொதிகலன் வெடித்த விபத்தில் 6 பணியாளர்கள் உயிரிழந்தனர்.

உத்தரப்பிரதேசம் மாநிலம், பிஜ்னோர் மாவட்டத்துக்குட்பட்ட நகினா சாலையில் மேர்ஹறித் பெட்ரோ கெமிக்கல் இரசாயன தொழிற்சாலை இயங்கி வருகிறது. இந்த தொழிற்சாலையில் உள்ள ஒரு கொதிகலன் (பொய்லர்) கடந்த 5 நாட்களாக இயங்கவில்லை.

நேற்று பழுதுநீக்கும் பணிகள் நடைபெற்ற போது. ஒரு பகுதியை வெல்டிங் செய்த போது எதிர்பாராதவிதமாக அந்த கொதிகலன் தீப்பிழம்பாக மாறி வெடித்து சிதறியது.

இந்த விபத்தில் காயமடைந்த 6 பணியாளர்கள் உயிரிழந்ததோடு ஆபத்தான நிலையில் இருவர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து பற்றிய செய்தி வெளியானதும் இறந்தவர்களின் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துள்ள உ.பி. முதலமைச்சர் யோகி ஆதித்யாநாத். இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். (7)

# அ.தி.மு.கவின் மனுவை நிராகரித்த டில்லி உயர்நீதிமன்றம்

## ஈ.பி.எஸ், ஓ.பி.எஸ் பதிலளிக்க உத்தரவு

(டில்லி)

அ.தி.மு.கவின் சட்டவிதிகளில் செய்யப்பட்ட திருத்தங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற வழக்கை விசாரித்த நீதிமன்றம், ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ்பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

அ.தி.மு.கவின் பொதுச் செயலாளராக இருந்த ஜெயலலிதா இறந்த பிறகு, அக்கட்சியில் இனி பொதுச்செயலாளர் பதவி இல்லை எனவும், ஒருங்கிணைப்பாளர், துணை ஒருங்கிணைப்பாளர் பதவி மட்டுமே உள்ளது எனவும் கட்சி முடிவு செய்தது. மேலும், அ.தி.மு.க. சட்டதிட்டங்களில் சில திருத்தங்களும் செய்யப்பட்டன.

இதை எதிர்த்து கே.சி. பழனிச்சாமி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கை விசாரிக்கும் பொறுப்பு தலைமை தேர்தல் ஆணையத்துக்கு மாற்றப்பட்டது. இந்த மாற்றத்தை எதிர்த்து, எடப்பாடி பழனிச்சாமி, பன்னீர் செல்வம் ஆகியோர் டில்லி உயர் நீதிமன்றத்தில் மனு அளித்து இருந்தனர்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. இதையடுத்து, அ.தி.மு.கவில் சட்டவிதிகளில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற மனுவுக்கு எடப்பாடிபழனிச்சாமி, ஓபன்னீர செல்வம், மற்றும் சசிகலா உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் 3 வார காலத்துக்குள் பதிலளிக்க வேண்டும் என உத்தரவிட்டுள்ளது. (7)

# மோடி அரசாங்கம் மக்களு




(டில்லி)

பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தினால் மக்களுக்கு வழங்கப்பட்ட எவ்வித வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை. இந்த அரசாங்கம் கோடீஸ்வரர்களுக்கானது என தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் சஞ்சய்தத் குற்றம் சாட்டியுள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் ஊழல்கள் மற்றும் எரிபொருள் விலை உயர்வு ஆகியவற்றை கண்டித்து நெல்லை மாவட்ட காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் நெல்லையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த அவர், ரபேல் போர் விமானம் வாங்குவதற்கு முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தினால் ஒரு விமானம் 560 கோடி ரூபாய் என இந்திய அரசுக்கு சொந்தமான இந்துஸ்தான் ஏரோ நாட்டிக் நிறுவனம் மூலம் வாங்க ஒப்பந்தம்

செய்யப்பட்டது
அரசாங்கம் ஒ
அம்பானி நி
செய்துள்ளது.
நடந்துள்ளது.
இந்த பண
மோடி அரசா
சாங்கமல்ல.
அரசாகவே க
இவர்களது
பின்னடைவு
அத்தியாவ
கட்டுப்படுத்து
பேன் என வா
அரசாங்கத்தின
எனவே, மக்க
டுக்கு அனுப்ப

# மியன்மாரில் சிறைத்தண்ட

## ஊடகவியலாளர்கள் மேன்முறை

(ரங்கூன்)

மியன்மாரில் 7 வருட கடூழிய சிறைத்தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் இருவரும் வழக்கினை மேன்முறையீடு செய்யமுடியுமென்று மியன்மார் அரசின் தேசிய ஆலோசகரும்நோபல் பரிசு பெற்றவருமான ஆங் சான் சூகி தெரிவித்துள்ளார்.

வியட்நாமின் தலைநகர் ஹனோயில் இடம்பெற்று வரும் ASEAN பொருளாதார மாநாட்டில் கலந்து கொண்டுள்ள அவர், நேற்று வியாழக்கிழமை இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், குறித்த இருவரும் ஊடகவியலாளர்கள் என்ற காரணத்திற்காக சிறைத்தண்டனை வழங்கப்படவில்லை.

## ஆங் ச

மாறாக மி
அவர்கள் இ
மன்றம் அவ
தண்ட னைவ
எனினும்.
முறையீடு செ
கொண்டுள்ள
எனினும்,
தாயின், ஏற்க
களை அவர்க
சூகி மேலும் தெ

# மக்கள் கூட்டத்தில் க
# 9 பேர் பலி; 46 பேர்



(பீஜிங்)

சீனாவில் மக்கள் கூட்டத்தில் காரை மோதச் செய்ததுடன் கத்தியால் குத்தி 9 பேரை கொன்ற கொடூர குற்றவாளியை பொலிஸார் கைது செய்தனர். சீன நாட்டின் ஹூனான் மாகாணத்தில் மக்கள் அதிகம் கூடியிருந்த பகுதியில் நேற்று முன்தினம் ஒரு

அந்த நபரை
விசாரணையி
என்றும், பல்
சிறை சென்ற
தொடர்ந்து, அ
வருகின்ற னர்

# ...ஹக்கானதல்ல!



...டது. ஆனால், அதனை இரத்து செய்த மோடி ... ஒரு விமானத்தை 1680 கோடி ரூபாய்க்கு ... நிறுவனம் மூலம் வாங்க ஒப்பந்தம் ...து. இதன் மூலம் பாரிய அளவில் ஊழல் ...து.

...ணத்திற்கு மக்கள் வரி செலுத்துகின்றனர். ...சாங்கம் சாதாரண மக்களுக்கான அர... அம்பானி போன்ற கோடீஸ்வரர்களின் ... காணப்படுகிறது.

...ளது அரசாங்கத்தின் ஆட்சியில் நாட்டிற்கு ...வு மாத்திரமே சாத்தியமாகியுள்ளது.

...ாவசியப் பொருட்களின் விலை உயர்வை ...துவேன். எரிபொருள் விலையை குறைப் ...வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிக்கு வந்த ...தினால் மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. ...க்கள் விரோத மோடி அரசாங்கத்தை வீட் ...ப்ப வேண்டும்" எனத் தெரிவித்தார். (7)

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு ஐவர் உயிரிழப்பு

(நியூயோர்க்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் துப்பாக்கிதாரியொருவர் 5 பேரை சுட்டுக்கொன்றுள்ளார்.

குறித்த துப்பாக்கிதாரி ஐந்து பேரைச் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து தன்னையும் மாய்த்துக் கொண்டதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. தனது மனைவி உள்ளிட்ட ஐவரையே அவர் கொலை செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்க நேரப்படி நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5.30இற்கு இத்துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது. துப்பாக்கிச்சூடு நடத்திய பின்



னர் அங்கிருந்த காரொன்றை கடத்திச் சென்ற துப்பாக்கிதாரி, தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவ்வாறான ஒரு சம்பவம் இடம்பெற்றமை புதுமையாக உள்ளதென குறிப்பிட்டுள்ள பொலிஸார், வீட்டு வன்முறை காரணமாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று சந்தேகிக்கின்றனர்.

எனினும், மனைவியை தவிர ஏனைய நால்வர் கொல்லப்பட்டமைக்கான காரணம் மர்மமாக உள்ளதென குறிப்பிட்டுள்ளதோடு, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (7)

# ...னை வழங்கப்பட்ட ...றையீடு செய்யலாம்

## ... சான் சூகி அறிவிப்பு

... மியன்மார் சட்டதிட்டங்களுக்கு எதிராக ...இருவரும் செயற்பட்டதாகக் கூறியே நீதி ...அவர்களுக்கு 7 வருட கடூழியச் சிறைத் ...னையை வழங்கியுள்ளது.

...ம். அவர்கள் இருவரும் வழக்கை மேன் ... செய்வதற்கான பூரண சுதந்திரத்தை ...ளனர்.

...ம். அவ்வாறு மேன்முறையீடு செய்வ ...ற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பிலுள்ள பிழை ...ரகள் சுட்டிக்காட்ட வேண்டுமென ஆங் சான் ... தெரிவித்துள்ளார். (7)

# கோபி அனானின் மறைவிற்கு ஓவியம் மூலம் இரங்கல்

(ஜெனிவா)

மறைந்த ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் செயலாளர் கோபி அனானை தனது ஓவியம்மூலம்நினைவுபடுத்தியுள்ளார் கலைஞர் ஒருவர்.

கானாவைச் சேர்ந்த டெர்ரிக் பாஹ் என்கின்ற இந்த கலைஞர், தன்நாட்டை சேர்ந்த உலக அமைதிக்காக உழைத்த உத்தமர் கோபி அனானின் மறைவுக்கு தன் ஓவி யம் மூலமாக இரங்கல் தெரிவித்துள்ளார்.


இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் அனைத்து வகை ஓவியத்தையும் உருவாக்கக் கூடிய கலைஞனாக உள்ளேன். பல ஆண்டுகளாக ஓவியம் வரைந்து வருகிறேன்.

அவ்வாறே கோபி அனானை வரைவதற்கு தீர்மானித்தேன். ஏனெனில் கோபி அனான் அற்புதமான மனிதர். ஒவ்வொரு தலைவர்களுக்கும் அவர் எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

குறிப்பாக ஆபிரிக்க தலைவர்கள் அவரது அரிச்சுவடுகளை பின்பற்ற வேண்டும். ஒரு கலைஞனாக என்னுடைய பங்களிப்பை செய்வதற்கு கோபி அனானை கௌரவிக்க விரும்பினேன். அதுவே இந்த ஓவியம்என்றார்.

ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் பொதுச்



செயலாளராக 10 ஆண்டுகள் பணியாற்றிய கோபி அனான் கடந்த ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி காலமானார்.

ஒரு சிறந்த ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் அமைதியான உலகத்திற்காக உழைத்த கோபி அனான் அமைதிக்கான நோபல் பரிசையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# ...கத்திக்குத்து ...ர் படுகாயம்



கார் வேக மாக வந்தது. அந்த கார் மக்கள் கூட்டத்தின் மீது மோதியதில் பலர் படுகாயம் அடைந்தனர்.

அதைத்தொடர்ந்து, காரில் இருந்து இறங்கிய ஒருவர் அங்கிருந்த மக்கள் மீது கத்தியால் சரமாரியாக குத்தி தாக்குதல் நடத்தினார்.


இதில் 9 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும், 46 பேர் படுகாயம் அடைந்தனர். அந்த பகுதியில் இருந்த பொலிஸார் ...ர சுற்றிவளைத்துப் பிடித்து விசாரித்தனர். ...ையில் அவர் யாங் ஜான்யுன் (வயது54) ...பல்வேறு குற்ற வழக்குகளில் பலமுறை ...ற குற்றவாளி என்பதும் தெரியவந்தது. ... அவரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி ...னர். (7)

# ஜப்பான் இளவரசர் பிரான்ஸ் விஜயம்!

(டோக்கியோ)

ஜப்பானின் முடிக்குரிய இளவரசர் நருஹிடோவின் பிரான்ஸிற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இதனைச் சிறப்பிக்கும் முகமாக நேற்று வியாழக்கிழமை இரவு ஈபிள் கோபுரத்தில் விஷேட வாணவேடிக்கைக் காட்சியொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிரான்ஸை சென்றடைந்த ஜப்



பானின் முடிக்குரிய இளவரசரை பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் அரச மரியாதையுடன் வரவேற்றார். பிரான்ஸின் 14 ஆவது சுன் கிங் லவுஸ் மன்னனின் அரண்மனையான வேர்சைலீஸ் மாளிகையில் குறித்த வரவேற்பு நிகழ்வு இடம்பெற்றது.

17ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட குறித்த மாளிகையில் இருதரப்பு கலந்துரையாடல், மேடை நிகழ்வுகள். இரவுநேர விருந்துபசாரம் என நேற்றிரவு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

ஜப்பான்-பிரான்ஸ் நாடுகளுக்கிடையிலான உறவானது 160 ஆண்டுகளுக்கு முற்பட்டது. இந்நிலையில், ஒவ்வொரு வருடமும் இரு நாடுகளும் இணைந்து இவ்வாறான சந்திப்பு மற்றும் விசேட நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கு இந்தியா பங்களிப்பு வழங்க வேண்டும்

## மோடியிடம் டக்ளஸ் நேரில் கோரிக்கை



(டில்லி)

மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக யுத்த அழிவுகளுக்கு முகம் கொடுத்த தமிழ் மக்கள் பாதுகாப்புடனும், அரசியல் உரிமைகளுடனும் கௌரவமாக வாழ்வதற்கு இந்திய அரசு உதவ வேண்டும் என்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் நேரடியாக வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய நாடாளுமன்றக் குழுவினருக்கும்.இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையில் டில்லியில் நடைபெற்ற உயர்மட்ட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

இலங்கை அரசு கொண்டு வருவதாகக் கூறும் புதிய அரசியலமைப்பு ஒரு நிச்சயமற்ற தன்மையாகவே இருப்பதால் அதை உறுதிப்படுத்துவதற்கு காலதாமதம் ஆகலாம்.

ஆகவே தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை அடைந்து கொள்வதற்கு இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பயனாக அமையப்பெற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதிலிருந்து முன்னோக்கிச் செல்வதே நடைமுறைச் சாத்தியமாக அமையும்.மாகாணசபை முறைமையானது ஏற்கனவே இலங்கையின் அரசியல் யாப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாலும் அதை முழுமையாக அமுலபடுத்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்களிப்பை பெறுவது அவசியமில்லை என்ப தாலும், தென்னிலங்கை மக்கள் ஒவ்வொருவரும் இன்று மாகாணசபை முறைமையை அச்சங்களற்று அனுபவிக்கின்றார்கள் என்பதாலும் இதுவே இலங்கையின் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வழிமுறையாகும் என்று எடுத்துரைத்தார்.

அத்துடன் 2010 ஆம் ஆண்டு இதுபோன்று உத்தியோகபூர்வ பயணமாக இந்தியா வந்திருந்தபோது, இந்திய அரசிடம் எமது மக்களுக்கு 50 ஆயிரம் வீடுகளை கட்டித்தருமாறும், இன்னும் பல உதவிக் கோரிக்கைகளையும் விடுத்திருந்தேன்.

அதை நிறைவேற்றித் தந்த இந்திய அரசுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அதுபோல் தற்போது வடக்கு- கிழக்கில் எஞ்சியிருக்கும் மீள்குடியேற்றங்களை செய்வதற்கும், பாதுகாப்பான வீட்டுவசதிகள் கிடைக்காமல் இருப்போருக்குமாக சுமார் ஒரு இலட்சம் கல்வீடுகள் எமக்கு தேவையாக இருக்கின்றன.

அந்தத் தேவையை நிறைவேற்ற இந்திய அரசு எமக்கு உதவ வேண்டும் என்று எமது மக்கள் சார்பாக கோரிக்கை விடுக்கின்றேன். யுத்தத்தால் அழிந்த வடக்கு- கிழக்கு மாகாணங்களை மீளக் கட்டியெழுப்பும் பிரதான திட்டமாகவும், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தி எமது இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவும் பலாலி விமானத் தளத்தையும், காங்கேசன் துறை துறைமுகத்தையும் சர்வதேச தரத்திற்கு இந்திய அரசு புனரமைத்துத்தர வேண்டும்.

அவ்வாறு பலாலி விமான தளமும், காங்கேசன்துறை துறைமுகமும் நிறைவான சேவையை வழங்குமாக இருந்தால், அது வடக்கு- கிழக்கு மக்களுக்கு மட்டுமல்லாமல், தென்னிலங்கை மக்களுக்கும் கூடுதல் நன்மைகளை பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமையும் என்றும் சுட்டிக் காட்டினார்.

தொடர்ந்தும் உரையாற்றிய செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா,

தமிழ்நாட்டில் அகதிகளாக நீண்டகாலம் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழ் மக்கள் மீண்டும் தமது தாயகம் திரும்பி வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்கு வசதியாக வெளியேறும் அனுமதியை பெற்றுக்கொளவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றார்கள்.

எனவே அந்த மக்களுக்கு வெளியேறும் அனுமதியை இலகுவாகப் பெற்றுக் கொள்ளவும் அவர்களின் வளமான எதிர்காலத்திற்கும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்திய அரசும் செயற்பட வழிவகை செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதுடன், யுத்தத்தால் எல்லா வழிகளிலும் பின்னடைவு கண்டுள்ள வடக்கு- கிழக்கு மாகாணத்தையும், அங்கு பெரும் துயரங்களுடன் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களினது வாழ்வியலையும் எதிர்காலம் மீதான நம்பிக்கையுடன் மீளக் கட்டியெழுப்புவதற்கு நாம் முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு, இந்திய அரசு தேவையான உதவியையும், பங்களிப்பையும் செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (இ-7)

# பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழு பேர் விரைவில் விடுதலை

## இராதா கிருஸ்ணன் தகவல்

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பில் தமிழக அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது என இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் கொலையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன், நளினி உள்ளிட்ட ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டுமென தமிழக அரசாங்கம் பரிந்துரை செய்திருந்தது.

குறித்த ஏழு பேரையும் விடுதலை செய்யுமாறு தமிழக அரசு பரிந்துரை செய்தமையை தாம் வரவேற்பதாக அவர் தெரிவித்துள்ளார். சென்னை ஊடக மையத்தில் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசாங்கத்தின் இந்த தீர்மானத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவித்தார். தண்டனை அனுபவிப்போரில் இலங்கையர்களும் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலக்கியத் துறையை வளப்படுத்த பங்களித்தவர்களுக்கு சாகித்திய விருது





(கொழும்பு)

இலங்கையின் இலக்கியத் துறையை வளப்படுத்துவதற்கு பங்களித்த எழுத்தாளர்களுக்கு அரச சாகித்திய விருது ஜனாதிபதியால் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த 11ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## சந்தேகம் கேட்டால் கோபம் வரலாமா?

“சேர் சேது ரயிலுக்குத்தானே டிக்கெட் எடுக்கணும்”

“யோவ்! எத்தனை தடவைய்யா சொல்றது உனக்கு? காது என்ன செவிடா?”

“ஏங்க! 3 செட் டிரஸ்தானே உங்க பெட்டியில எடுத்து வைக்கணும்?”

‘‘என்னமோ வச்சுத்தொலை! உன்னோட பெரிய தொல்லையாப்போச்சு,”

“ சேர்! எங்கு சென்றானில் “ச்” வருமா வராதா சேர்?”

“இதுகூடத் தெரியாம +2 பரீட்சை எழுதற கட்டத்துக்கு வந்திட்டியா? மடையா?

இப்படி நிறைய உதாரணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். பதில் அனைத்திலும் எரிச்சல்; சலிப்பு; வெறுப்பு; வேதனை! இவை தேவையா? இதில் வேடிக்கை என்னவென்றால் ஒருவருக்கும் கேட்ட கேள்விக்கான விடை கிடைக்கவில்லை என்பது தான்.

சரிவரக் கேட்டுக் கொள்ளாததாலோ, சரிவர நாம் தெளிவுபடுத்திச் சொல்லாததாலோ, மீண்டும் ஒரு தடவை உறுதிப்படுத்திக்கொள்ளும் நல்ல பழக்கம் காரணமாகவே மற்றவர்கள் மீண்டும் கேள்வி கேட்டால் அதற்குக் கோபம் கொள்வது எந்த வகையில் சரி?

நமக்கேகூட இரண்டாவது கருத்து உண்டாகலாம். சூழ்நிலைகள் அடியோடு மாறியிருக்கலாம். நாம் சொன்ன விடயத்தில் ஏதும் தவறு இருக்கலாம்.

இந்நிலையில் நம் பதில் கள் மாறலாம் அல்லவா! இப்படி முடிவு எடுக்கிறவர் இல்லையே அவர்! எதற்கும் திரும்பக் கேட்டுக் கொள்வோம் என்று முன் வருகிறவருக்கு நாம் தரக்கூடிய வெகுமதி திட்டுவது தானோ? அது நியாயமற்ற பரிசல்லவா!

சில நேரங்களில் நாம் சில மக்குகளைச் சுற்றி வாழ வேண்டியிருக்கும்.

இத்தகையவர்களோடு சரிசரி என்று போக வேண்டியது தான். இவர்கள் இரண்டாம் முறையல்ல நான்கு முறை கேட்டாலும் பொறுமையுடன் பதில் சொல்லத் தான் வேண்டும். வேறு வழி?

இதற்கெல்லாம் கோபப்பட்டுக்கொண்டிருந்தால் இந்த ஆள் திட்டுவார்; எனவே பேசாமல் நமக்குத் தோன்றியபடி செய்வோம் என்று செயலில் இறங்கி அவர்கள் ஒரு சொதப்பு சொதப்பிவிட்டால் அதன் விளைவுகளை யார் சமாளிப்பதாம்?

மீண்டும் சந்தேகம் கேட்கிறவர்கள் நமக்கு நன்மை செய்கிறவர்களே என்று நாம் மனப்பூர்வமாக நம்பினால் இவர்கள் மீது கோபமே வராது!

**லேனா தமிழ்வாணன்**



"கருமத்திருதி" கலந்துரையாடலும் கருத்துப்பரிமாற்றமும் வாசிப்புமாத சிறப்பு நிகழ்வும் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி கலையரங்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது. (படங்கள்:சக்தி)

# போதைப்பொருள் வர்த்தகரான மொஹமட் சித்தீக் விடுதலை

(கொழும்பு)

பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரான மொஹமட் சித்தீக் நிபந்தனையற்ற முறையில் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று இவ் உத்தரவை பிறப்பித்துள்ளது.

அவருடன் சேர்த்து சம்பந்தப்பட்ட மேலும் நால்வரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

8.1 கிராம் நிறையுடைய ஹெரோயின்போதைப்பொருள் வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டு பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு இடம்பெற்று வந்தமை கூறத்தக்கது.

மாபெரும் போதைபொருள் வர்த்தகராக அறியப்பட்ட இவர் பாகிஸ்தானில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (7)

# சரிவடைந்த நிலையில் கம்பங்கள் மின்சார சபை மீது மக்கள் விசனம்



(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் சில கிராமங்களில் உள்ள மின்கம்பங்கள் சரிந்த நிலையில் காணப்படுகின்றன.

இலங்கை மின்சார சபையினரால் மின்பாவனைக்காக நிறுவப்பட்ட மின்கம்பங்களில் ஒரு சில சரிவடைந்து விழும் நிலையிலுள்ளன.

இவ்வாறு வெற்றிலைக்கேணி பிள்ளையார் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள மின்கம்பம் ஒன்று நீண்ட நாட்களாக சரிந்து காணப்படுகின்றது. இதனைவிட வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா பாடசாலையின்உள்ளே உள்ள மின்கம்பமும் சரிந்த நிலையிலேயே உள்ளது.

இம் மின் கம்பங்கள் நீண்ட நாட்களாக சரிவடைந்த நிலையில் இருந்தும் இதனை சீர் செய்ய இதுவரைக்கும் மின்சார சபையினர் எவ்வித மான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லையென மக்கள் விசனம் வெளியிட்டுள்ள னர். எனவே வடமராட்சிகிழக்கு டன் தொடர்புள்ள மின்சார சபையினர் இவ்வாறான பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-64)

# கடற்கரை வீதி புனரமைப்பு



(முன்னர்)



(இப்போது)

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட உதய சூரியன் கிராமத்திலுள்ள கடற்கரை வீதி மக்கள் பயன்பாட்டிற்கு உதவாத நிலையில் கட்டட இடிபாடுகளுடன் குண்டும் குழியுமாகக் காணப்பட்டது. இது தொடர்பில் கவனம் செலுத்திய சாவகச்சேரி நகர சபை உறுப்பினர்கள் மாரி காலத்திற்கு முன்னராக உதய சூரியன் கடற்கரை வீதியை செப்பனிட வேண்டும் என சபையில் விடாப்பிடியாக நின்றனர்.

இதன் காரணமாக நகர சபை வசம் காணப்பட்ட கிரவல், நகரசபையின் வாகனங்கள் மற்றும் நகரசபை தொழிலாளர்களின் ஒத்துழைப்புடன் வீதி விரைவாக சீராக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-30)

# ஜனாதிபதி மக்கள் சேவை

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு பிரதேச செயலகத்தினால் நாளை 15 ஆம் திகதி தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் காலை 7 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை வலி.வடக்கு பிரதேசமக்களுக்கான உத்தியோக பூர்வ பணி (நிலமெஹவர) ஜனாதிபதி மக்கள் சேவை நடைபெறும். வலி.வடக்கு பிரதேச மக்கள் அனைவரையும் இச்சேவையில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார்.

இதில்

- பிறப்பு, இறப்பு, விவாக, சான்றிதழ்கள் மற்றும் தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளல் தொடர்பான சேவைகள்.
- பதிவு செய்யப்படாத பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப் பதிவுகள்.
- வாகன அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்களத்தின்ஏனையசேவைகள்.
- ஓய்வூதியத் திணைக்களத்தினால் வழங்கப்படும் ஏனைய சேவைகள்
- வீட்டுக் கடன் வசதி பெற்றுக் கொள்ளல்.
- முதியோர் அடையாள அட்டைகளைப்பெற்றுக்கொள்ளல்.
- வங்கிக் கடன் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல்.
- பொதுவான வைத்திய சேவைகளையும் கண் சிகிச்சை சேவைகளையும் பெற்றுக் கொள்ளல்.
- சமுர்த்தி, முதியோர் கொடுப்பனவு, ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பான சேவைகள்.
- காணி உரிமை சம்பந்தமான பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல்.
- மதத் தலங்களைப் புத்துயிரூட்டுவதற்கான திட்டங்கள்.

தனியார் துறையில் தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டல்களையும் விண்ணப்பங்களையும் பெற்றுக் கொள்ளல்.

- வெவ்வேறு துறைகளில் பயிற்சிகள் பெறுவது தொடர்பாக இளைஞர், யுவதிகளுக்கான அறிவுரைகள்.
- சிறுதொழில் தொடங்குவது தொடர்பாக அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் பெற்றுக் கொள்ளல்.
- அபிவிருத்தித் திட்டங்களுக்கு தேவையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- விவசாயம், கல்வி, சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளல்.

இவ்விடயம் தொடர்பான மேலதிக தகவல்களை உரிய கிராமஉத்தியோகத்தரிடம்பெற்றுக் கொள்ளலாம் எனவும் அவர் அறிவித்துள்ளார். (இ-7)

# பிரமோற்சவ கால நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

இணுவில் திருப்பதி வேங்கடேஸ்வரர் ஆலய வருடாந்த பிரமோற்சவம் நேற்று ஆரம்பமானது. எதிர்வரும் 22 ஆம் திகதி வரை திருவிழா இடம்பெறும்.

இதில் இன்று மாலை 6.45 மணியளவில் இசை அர்ப்பணம் இடம்பெறும். பாட்டு க.றஜீவன், வயலின் பா.சியாம்கிருஷ்ணா. மிருதங்கம் சி.செந்தூரன், கெஞ்சிரா அ.சண்முகப்பிரியன் ஆகியோர் வழங்குவர்.

நாளை 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 6.45 மணியளவில் இசை அர்ப்பணம் இடம்றெும். பாட்டு திருமதி தமிழினி-மயூரன், வயலின் -அ.ஜெயராமன், மிருதங்கம் கு.ரவிசங்கர், முகர்சிங் -சி. செந்தூரன். கெஞ்சிரா. பா.ஞானவேல், நாளை மறுதினம் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணியளவில் இசை அர்ப்பணம் இடம்பெறும். இதில் பாட்டு பொன். வாமதேவன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் சி.துரைராசா, கெஞ்சிரா அ.சண்முகப்பிரியன் ஆகியோர் வழங்குவர். எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட் கிழமை மாலை 6.45 மணியளவில் வயலின் இசை ஆராதனை இடம்பெறும். வயலின் சு.கோபிதாஸ், சு.துவாரகி, மிருதங்கம் ம.லோகேந்திரன், கடம் கு.ரவிசங்கர், தபேலா பா.கபிலன், முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோர் வழங்குவர்.

18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.45 மணியளவில் இசை அர்ப்பணம் இடம்பெறும். பாட்டு திருமதி சுகன்யா அரவிந்தன், வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் வ.ரமணா, கெஞ்சிரா நா.சிவசுந்தர சர்மா, முகர்சிங் சி.செந்தூரன், கடம் கு.ரவிசங்கர் ஆகியோர் வழங்குவர்.

19 ஆம் திகதி புதன்கிழமை மாலை 6.45 மணியளவில் வயலின் இசை ஆராதனை இடம்பெறும். வயலின் ப.சியாம் கிருஷ்ணா. மிருதங்கம் நா.சிவசுந்தர சர்மா. முகர்சிங் சி.செந்தூரன், கடம் கு.ரவிசங்கர் ஆகியோர் வழங்குவர். 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவம் நடைபெறும். இதில் மாலை 6.45 மணியளவில் புல்லாங்குழல் இசை இடம்பெறும். புல்லாங்குழல் க.தேசிகன், வயலின் ப.சியாம்கிருஷ்ணா, மிருதங்கம் ச.பிரணவன், கெஞ்சிரா ப.ஞானவேல், கடம் தி.அரன்ராஜ் ஆகியோர் வழங்குவர்.

21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மகா விஷ்ணு திருக் கோலம் தீர்த்தோற்சவம் இடம்பெறும்.

இதில் மாலை 6.45 மணியளவில் இசை அர்ப்பணம் இடம்பெறும். வயலின் அ.ஜெயராமன், மிருதங்கம் க.கஜன், கெஞ்சிரா நா.சிவசுந்தரசர்மா, முகர்சிங் சி.செந்தூரன் ஆகியோர் வழங்குவர்.

22 ஆம் திகதி சனிக் கிழமை திருக்கல்யாணம் இடம்பெறும். இதில் மாலை 6.45 மணயளவில் விசேட நாதஸ்வரக்கச்சேரி இடம் பெறும். (இ)



கொடிகாமம் பொதுச் சந்தையில் வியாபாரிகளின் நன்மை கருதி மரக்கறி விற்பனைப் பகுதிக்கு புதிதாக மேடைத் தளம் அமைத்து நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த சில வாரமாக வேறு பகுதியில் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், புதிதாக அமைக்கப்பட்ட மேடைத் தளத்தில் மரக்கறி வியாபாரத்தினை மேற்கொள்ளவுள்ளனர். சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் மயூரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் தவிசாளர் வாமதேவன் மேடைத்தளத்தை திறந்துவைத்தார். (படங்கள்:- விஜயவாசன்)

# சம்பள அதிகரிப்புச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

## அரசிடம் கூட்டு எதிரணி கோரிக்கை

(கொழும்பு)

எரிபொருள் சூத்திரத்திற்கு சமாந்தரமாக அரச மற்றும் தனியார் துறைகளுக்கான சம்பள அதிகரிப்பு சூத்திரம் ஒன்றை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டும். அத்துடன் சமுர்த்தி உள்ளடங்கலாக ஏனைய கொடுப்பனவுகளுக்கும் சூத்திரம் அறிமுகப்படுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யாமல் போனால் மக்களின் பொருளாதார நிலை சீரகுலைவதைத் தவிர்க்க முடியாதென கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சி ஏற் பாடு செய்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் பொறளை என்.எம்.பெரேரா நிலையத்தில் நடைபெற்றது. இதில் கூட்டு எதிரணி தேசிய அமைப்பாளர் டளஸ் அழகப்பெரும எம்.பி. கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

விலைச் சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மூன்று தடவைகள் எரி பொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பினால் சகல பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை அதிகரிப்பது வழமை. மேலும் எரிபொருள் விலைச் சூத்திரம் பற்றி பொதுமக்களுக்குத் தெரியாது. அதேபோல் பெற்றோலிய தொழிற்சங்க பிரதிநிதிகள், பெற்றோலியத் துறைக்குப் பொறுப்பான அமைச்சர் மற்றும் ஜனாதிபதிக்கும் அது குறித்து தெரியாது.

தகவல் அறியும் சட்டத்தினூடாக எரிபொருள் சூத்திரம் தொடர்பில் கோரிய போதும் அத்தகவலை வழங்க முடியாதென உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் மூன்று தடவை எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் அச்சூத்திரம் பற்றி அரசாங்கம் தெழிவுபடுத்தாமை மக்களை ஏமாற்றும் செயற்பாடாகவே கருத வேண்டியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பாறையினுள் சிக்குண்டு 3 பிள்ளைகளின் தந்தை பலி

(திம்புள்ள)

திம்புள்ள பத்தனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டகலை கொமர்ஷல் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் கூலி வேளையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் கருங்கல் ஒன்றில் சிக்குண்டு பரிதாபமாக உரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கினிகத்தேனை பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட 33 வயது மதிக்கதக்கவர் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

குறித்த நபர் கல் உடைக்கும் தொழிலில் ஈடுபடுபவர் என்றும் இவர் கல் உடைக்கும் போது அவர் வேலை செய்து கொண்டிருந்த இடத்திற்கு மலைப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்த கற்கள் புரண்டுள்ளன.

இதில் பாரிய கல் ஒன்று புரண்டு குறித்த நபரின் மீது வீழ்ந்ததில் உயிரிழந்ததாக பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது. (இ-7)

# உருளைக்கிழங்கு இறக்குமதியை தடைசெய்யுமாறு கோரிக்கை

(பதுளை)

உருளைக்கிழங்கு இறக்குமதியை முற்றுமுழுதாகத் தடைசெய்யுமாறு கோரியுள்ள வெலிமடை - ஊவா பரணகம கூட்டுறவு விவசாயிகள் சங்கத்தின் பிரதிநிதிகள், உள்ளூர் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்குமாறும் வலியுறுத்தியுள்ளனர்.

மேற்படி அமைப்பின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர், பதுளை மாவட்ட செயலகத்துக்கு நேற்றுமுன்தினம் சென்றதுடன், பதுளை மாவட்ட செயலாளர் தமயந்தி பரணகமவைச் சந்தித்து, இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

உருளைக்கிழங்கு இறக்குமதியைத் தடைசெய்வதுடன், உள்ளூர் உருளைக்கிழங்கு கிலோகிராம் ஒன்றுக்கு, 100 ரூபாய் நிர்ணய விலையை வழங்குமாறும் கோரி, மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள், வெலிமடை நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் அடுத்தகட்ட நகர்வாகவே, மேற்படி அமைப்பினர், பதுளை மாவட்ட செயலாளரைச் சந்தித்து, இக்கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இதற்குப் பதிலளித்த மாவட்ட செயலாளர், இவ்விடயத்தைச் சம்பந்தப்பட்ட அமைச்சின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக உறுதிமொழி வழங்கியுள்ளார். (இ-7)

# விடுதி வீட்டைவிட்டு வெளியேறுமாறு மூதாட்டிக்கு நிர்ப்பந்தம்; நிர்க்கதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையில் சுகாதாரத் தொழிலாளியாக கடமையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற மூதாட்டி ஒருவரை அவருக்கான ஓய்வூதியப் பணம் கிடைக்கப் பெறாத நிலையில் நகரசபையின் விடுதி வீட்டில் இருந்து வெளியேறுமாறு நகரசபை நிர்வாகம் தன்னை நிர்ப்பந்தித்து வருவதாக மூதாட்டி ஒருவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக மூதாட்டி நகரசபை உறுப்பினர்களிடம் தெரிவிக்கையில்,

வருடக்கணக்கில் சாவகச்சேரி நகரசபையில் தொழிலாளியாகக் கடமையாற்றிய நான் கடந்த மூன்று வருடங்க ளாக உதயசூரியன் கிராமத்தில் உள்ள நகரசபையின் விடுதி வீட்டில் தங்கியிருந்த நிலையில் அண்மையில் ஓய்வு பெற்றுக் கொண்டேன். இந்நிலையில் எனக்கான ஓய்வூதியப் பணம் கிடைக்கப் பெறாத நிலையில் குறித்த விடுதி வீட்டை விட்டு வெளியேறச் சொல்வதால் என்னுடைய காணி ஒன்றில் தன்னந்தனியாக குடிசை ஒன்றை சரிசெய்து வருவதாக தெரிவித்தார்.

அத்துடன் ஓய்வூதியப் பணம் கிடைக்கும் வரைக்கும் தன்னை விடுதி வீட்டில் இருந்து வெளியேற்ற வேண்டாம் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார். கணவன் இறந்த நிலையில் குறித்த மூதாட்டி தனிமையில் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மூதாட்டியின் நிலைமையைப் பார்வையிட்ட நகரசபை உறுப்பினர்களான நடன தேவன், கஜிதன், தர்சன் ஆகியோர் தமது சொந்தப் பணத்தில் மூதாட்டி அமைக்கும் குடிசைக்கு நிலம் போட சீமெந்து தருவதாக உறுதியளித்துள்ளனர். (இ-30)

# பிறந்த எண்களின் அதிர்ஷ்ட இரகசியம்


## எண் 6 (சுக்கிரன்)

## (சுகபோகவான்கள்)

போர் வீரர்கள் போன்ற உடல்வாகு இருக்கும். சுகபோக வாழ்க்கை வாழ்வார்கள். உயர்ந்த இலட்சியக் குறிக்கோள் எதுவும் இருக்காது. குறிக்கோள் இன்றி வாழ்வார்கள். உண்பது, உறங்குவது, உல்லாசமாகவே இருப்பது என்று வீணான வாழ்க்கை வாழ்வார்கள். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சிகள், புகழ்ச்சிகளில் நாட்டமிருக்கும். செல்வம் சேர்ப்பதிலேயே முழு நேரத்தையும் செலவழிப்பார்கள். அதற்கேற்ப அதிர்ஷ்டமும் பெற்று வாழ்வார்கள். இலட்சுமி கடாட்சம் பெற்று வாழ்பவர்கள் என்று பேசுமளவிற்கு செல்வ வளம் மிக்கவர்கள். ஆண்கள் நல்ல அந்தஸ்தான மனைவியையும் பெண்கள் அந்தஸ்தான, கௌரவமான கணவனையும் அடைவார்கள். இந்த எண்ணில் பிறந்த பெண்கள் சதாபோக பாக்கியங்களை அனுபவித்த வண்ணமிருப்பார்கள். பெரிய அந்தஸ்தான பதவியில் இருப்பவர்களது தொடர்புகள் அமையும். இது ஒரு சுக்கிரதோச விபரீத அமைப்பாகும். மேலான அந்தஸ்துடையவர்கள் காதல் வயப்படுகிறார்கள். அந்தஸ்தை அடைய தனது அழகைப் பயன்படுத்துகிறார்கள் என்பதில் ஐயமில்லை.

சுக்கிர தோசமுடைய நபர்கள் வாக்கு சாமர்த்தியசாலிகள். பிறரைத் தன்னுடைய வசீகரமான வார்த்தைகள் மூலம் கவர்ந்து சமூகத்தையே தவறான வழிக்குக் கொண்டு சென்று விடுவார்கள். தேசத்தையும் சமூகத்தையும் துன்பத்தில் ஆழ்த்தி விடுவார்கள். எவரையும் எளிதில் வசப்படுத்தும் ஆற்றலுடைய இவர்கள் பிரசங்க சக்தி படைத்தவர்கள். இவர்களிடம் ஏமாறுகின்றோம் என்று தெரிந்தே பலபேர் இவர்களிடம் ஏமாறுவார்கள். சூது, பேராசை, வஞ்சகம், பெருத்த மோசடி குணங்கள், நண்பர்களிடம் விசுவாசமில்லாமை, அதிகமான காம இச்சை, தீவிரமான பண நாட்டம் முதலியவை இவர்களைக் காட்டிக் கொடுக்கும். மேன்மையான சுக்கிர ஆதிக்க நபர்கள் அற்புதம் பல புரிவார்கள். அதிசயம் நிகழ்த்துவார்கள். தெய்வ சக்தி வாழ்வில் வெற்றியடைய உறுதுணை புரியும். அன்றாட வாழ்க்கையை அன்போடும் சுகத்தோடும் அனுபவிப்பார்கள். கீழ்த்தரமானவர்கள். அற்புதமான காரியம் செய்வதாகக் கூறி பரிகாரங்கள், ஜோதிடம், மருத்துவம், மந்திரம் முதலான சாஸ்திரங்களைச் சொல்லி மக்கள் மோசடி செய்து வளமாக, சுகமாக வாழ்வார்கள். 6 ஆம் எண்காரர்கள் எல்லோரையும் தன் வசப்படுத்தி அனைத்தையும் ஆண்டு அனுபவிக்கும் தன்மையுடன் இயற்கை இவர்களுக்கு பொருளையும் ஆளும் திறனையும் பிறப்பிலேயே கொடுத்திருக்கின்றது.

சந்தோசமாக வாழ்வதே இவர்களின் இலட்சியம். அறிவாளிகளாகவும் கற்பனா சக்தி படைத்தவராகவும் சீர்திருத்தவாதியாகவும் மோக சக்தி படைத்தவராகவும் உழைப்பாளியாகவும் அனைவரையும் தன்வசப்படுத்தி அனுபவித்து சல்லாபம் உல்லாசம் எல்லாமும் அடையும் அதிர்ஷ்டம் படைத்தவர்கள் இவர்கள். இவர்கள் ஏதாவது தியாகம் செய்வது போல தோன்றினாலும் அது இவர்கள் எதிர்பார்க்கும் ஏதோவொன்றை அடையச் செய்யும் செலவு என்றே கூறலாம். நிச்சயமாக அவர்கள் அடைய நினைக்கும் ஒன்றை அடையச் செய்யும் செலவாகத்தான் தியாக நடவடிக்கைகள் இருக்கும்.




யோசிக்காமல் எந்த முடிவுக்கும் வரமாட்டார்கள். அப்படி எடுக்கும் எந்த முடிவும் அவர்களின் சுயலாபத்திற்காகவே இருக்கும். ஒரு தோல்வி ஏற்பட்டால் சோர்ந்து விடாமல் அசுரத் தன்மையுடன் மேலும் முயற்சி செய்து வெற்றி பெறுவார்கள். நித்திய வாழ்க்கையில் தினமும் ஒரு பதவியை அடைய முயற்சி செய்து வெற்றி பெறுவார்கள். நல்ல பாக்கியம், விடா முயற்சி தன் காரியத்திலேயே கண்ணாயிருந்து வெற்றி பெற்று அதிர்ஷ்டசாலிகள் ஆகின்றார்கள். செல் வாக்கும் சொல்வாக்கும் பிரசித்தியடையும். உல்லா சமான சூழ்நிலையிலேயே வாழப் பிரியப்படுவார்கள். நகை ஆபரணங்கள் அணிய ஆர்வமிருக்கும். நண்பர்களிடம் நிதானமாகப் பழகுவார்கள். அன்பு, தயை, இரக்கம் கூட தனக்கு விருப்பமான நபர்கள் மீதுதான் இருக்கும். இவ்வெண்ணில் பிறந்தவர்கள் புலன் இன்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

உலகம் ஒரு உல்லாசபுரி என்று நினைப்பவர்கள். இவர்களின் அலங்காரப் பேச்சுக்கு மயங்கி ஏமாந்தவர்கள் ஏராளம். காரியத்தை முடிக்க இடைவிடாது முயற்சி செய்த வண்ணமிருப்பார்கள். எள்ளளவும் ஐயப்பாடின்றி இவர்களை அதிர்ஷ்டசா லிகள் என்று கூறலாம். கலைத்திறனாலேயே மக்கள் செல்வாக்கைப் பெறுவார்கள். நன்றி மறப்பதில் இவர்களுக்கு நிகர் இவர்களே. தனக்குக் கீழ் பணியாட்கள் இல்லை யென்றால் சலிப்படைந்து விடுவார்கள். வாழ்வில் உணவு, உடை, உறைவிடத்திற்கு எந்தக் குறையும் வராது. சிறந்த பேச்சாற்றல் உடையவர்களாகவும் நடிப்புத்திறன் உடையவர்க ளாகவும் வலம் வருகிறார்கள்.


(தொடரும்....)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

43



மன்னார் கட்டுக்கரைக்குளம்

சோழர் ஆதிக்கம் இலங்கையில் முடிவடைந்த கி.பி. பதினொராம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் இப் படைப்பிரிவுகளில் உள்ளவர்கள் எல்லோருமே நாட்டைவிட்டுப் போயிருப்பார்கள் என்று கூற முடியாது.

சோழராட்சிக் காலத்தில் நன்னிலையில் காணப்பட்ட சமய, கலை, கலாசார, வர்த்தக செயற்பாடுகள் யாவும் தமிழ்மொழியினையே பிரதான மொழியாகக் கொண்டு வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் நிகழ்ந்திருக்கின்றன என்பதனை அக் காலத்துக்குரிய கல்வெட்டுகள் காட்டுகின்றன.

எனவே வேளைக்காரப் படைப்பிரிவினரும் மேற்கூறப்பட்ட ஏனைய படைப்பிரிவினரும் தமிழ்மொழி பேசுகின்றவர்களாகத்தான் இருந்திருப்பார்கள். இந்நிலையில் சோழராட்சி இலங்கையில் முடிவடைந்து மேற்கூறப்பட்ட ஏனைய படை முதலாம் விஜயபாகு, பொலநறுவையில் மீண்டும் சிங்கள வம்ச ஆட்சியை ஆரம்பிக்கும் வேளையில், இவ்வாறான படைகளில் இருந்த பலர், விஜயபாகு மன்னனுக்கும் தொடர்ந்து ஆட்சி புரிந்த மன்னர்களுக்கும் உதவியிருக்கின்றார்கள்.

இதைவிட, விஜயபாகு சோழருக்கு எதிராகப் படையெடுத்த வேளையிலுங்கூட, தமிழ்ப் படையினர் விஜயபாகுவிற்கு உதவியிருக்கின்றார்கள். விஜயபாகு சோழருக்கு எதிராக மேற்கொண்ட படையெடுப்புக்கு, தமிழ்த் தளபதி ஒருவன் தலைமை தாங்கியிருக்கின்றான். உதாரணமாக, வீரராஜேந்திரன் படைகளுக்கு எதிராக விஜயபாகு போராடியபோது, அவனது படைத் தளபதியான குருகுலத்தரையன் உயிரிழந்தான் என 1067 இல் பொறிக்கப்பட்ட சோழக் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

வரலாற்று ஆதாரங்களின்படி, விஜயபாகு அதிகமாகத் தமிழ்ப் படைகளில் தங்கியிருந்தான் என்பதனை அறிய முடிகின்றது. குறிப்பாக, நம்பிக்கைக்குரிய வேளைக்காரப் படையினர் விஜயபாகுவின் போர்களில் பெரும் பங்களிப்புச் செய்தனர். அத்தோடு, தந்ததாது கோவிலைப் பாதுகாப்பதற்கும் வேளைக்காரப் படையினர் அமர்த்தப் பட்டனர்.

மேலும், கஜபாகு, பராக்கிரமபாகு ஆகியோரின் ஆட்சிக் காலத்திலும் வேளைக்காரப் படையினர் பெரிதும் உதவியிருக்கின்றனர். உதாரணமாக, பராக்கிரமபாகு நடத்திய பல போர்களுக்கு வேளைக்காரப் படையினரையே நம்பியிருக்கின்றான். சுருங்கக்கூறின் தமிழ்ப் படைப் பிரிவினராகிய வேளைக்காரப் படையினர் பொலநறுவை ஆட்சிக்காலத்தில் மிகவும் வலுவுள்ளவர்களாகவும் தேவை ஏற்படும்போது அவர்கள் அரசை எதிர்க்கத் தயங்காதவர்களாகவும் இருந்துள்ளனர்.

எனவே, மேற்படி நிலைமைகளின் பின்னணியை நோக்கும் போது, தமிழ்ப் படையினர் வலுவுள்ளவர்களாக இருந்திருக்கின்றார்கள் என்பது புலனாகிறது. அத்தோடு, பொலநறுவை ஆட்சிக்காலத்தில் விஜயபாகுவினால் சோழருக்கு

> அத்தோடு வேளைக்காரப் படைப்பிரிவினரும் இவ்வாறான பாரிய வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப் பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் உலகிலேயே இரண்டாவது இடத்தைப் பெறும் மிகப்பெரிய இரு செயற்கைக் குளங்களான பராக்கிரம சமுத்திரம், Giants Tank என அழைக்கப்படும் மன்னாரிலுள்ள கட்டுக்கரைக்குளம் ஆகியவற்றை மேற்படி காலகட்டத்தில் இலங்கை மக்களால் தனித்துக் கட்டியிருக்கமுடியாது. மேலும், அதே காலப்பகுதியில் தமிழ்நாட்டில் சோழராட்சியின் போது வீராணம்குளம் என அழைக்கப்படும் பாரிய குளமும் தமிழ்நாட்டில் கட்டப்பட்டிருக்கின்றது

## சோழர் ஆக்கிரமிப்பும் அதன் விளைவுகளும் (கி.பி. 900-கி.பி. 1200)

எதிராகத் தொடுக்கப்பட்ட போர், தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட ஒரு போராகவே கொள்ள முடியாது.

அது சோழ ஆதிக்கத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போராகவே கொள்ள வேண்டும். எனவே, தமிழ்ப் படைகள் விஜயபாகு போன்றோருக்கு உதவிய நிகழ்வுகளின் அடிப்படையில் நோக்கும்போது பொலநறுவை ஆட்சிக்காலம் தமிழரும் சிங்களவரும் சேர்ந்து நடத்திய ஆட்சிக்காலம் என்பது வரலாற்று ஆசிரியர் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மையாகும்.

மேலும், கி.பி. பதினொராம், பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில், நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் மிகவும் உச்சநிலையினை அடைந்திருக்கின்றது. ஏற்கனவே முன்னைய அத்தியாயத்தில் கூறப்பட்டதுபோல், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற்காக தென்னிந்தியாவிலிருந்து கூலியாட்கள் வருவிக்கப்பட்டனர். இவ்வாறு வருவிக்கப்பட்டவர்களும் இலங்கையில் இருந்தவர்களும் சேர்ந்து இக்கால நீர்ப்பாசன அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள் எனக் கொள்ளமுடிகிறது.

அத்தோடு வேளைக்காரப் படைப் பிரிவினரும், இவ்வாறான பாரிய வேலைத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் உலகிலேயே இரண்டாவது இடத்தைப் பெறும் மிகப்பெரிய இரு செயற்கைக் குளங்களான பராக்கிரம சமுத்திரம், Giants Tank என அழைக்கப்படும் மன்னாரிலுள்ள கட்டுக்கரைக்குளம் ஆகியவற்றை மேற்படி காலகட்டத்தில் இலங்கை மக்களால் தனித்துக் கட்டியிருக்க முடியாது.

மேலும், அதே காலப்பகுதியிற் தமிழ்நாட்டில் சோழராட்சியின் போது வீராணம்குளம் என அழைக்கப்படும் பாரிய குளமும் தமிழ்நாட்டில் கட்டப்பட்டிருக்கின்றது. உலகிலே உள்ள பாரிய செயற்கைக் குளங்கள் என்ற வரிசையில் பராக்கிரம சமுத்திரமும், கட்டுக்கரைக் குளமும் இரண்டாவது இடத்தையும் பெறுமளவிற்கு அமைக்கப் பட்டிருக்கின்றன.

இவ்வாறான பாரிய குளங்களை அமைக்க எவ்வளவு மனிதபலம் தேவைப் பட்டிருக்கும், எவ்வாறான தொழில் நுட்பம் தேவைப்பட்டிருக்கும் என்பது புலனாகின்றது. எனவே, இவ்வாறான பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் அமைக்கப்பட்ட விடயத்தில் தென்னிந்தியாவும் இலங்கையும் ஒன்றாக இணைந்துதான் வெற்றியீட்டியிருக்க முடியும். அந்த வகையில், சோழராட்சிக் காலம் இலங்கையில் நீர்ப்பாசன தொழில்நுட்ப, விவசாய அபிவிருத்திகளுக்கு அளப்பரிய பங்கை ஆற்றியிருக்கின்றது என்று கொள்ளலாம்.

தென்னிந்திய வரலாற்றின் பொற்காலம் என வர்ணிக்கப்படும் சோழராட்சியின் கி.பி 900-கி.பி 1200 வரையிலான காலப்பகுதியில் சைவசமயம், தமிழ்மொழி, தமிழ்க் கலாசாரம், கட்டட சிற்பக் கலைகள், இசை, நடனம், நாடகக் கலைகள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம், விவசாயம், தொழில்நுட்பம் போன்ற துறைகள் பாரிய முன்னேற்றம் அடைந்தன.

இலங்கையிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களில் சைவசமயம், பௌத்த மதம் சார்ந்து பல கோவில்கள் கட்டப்பட்டு, அவை வழிபாட்டுத் தலங்களாகவும், கலாசார மையங்களாகவும் விளங்கின. மேற்கொண்டு அவை பற்றிச் சுருக்கமாக நோக்குவதன்மூலம், மேற்குறிப்பிட்ட காலப்பகுதியில் தமிழர்கள் மத்தியில் சிறப்பாக சைவமும் பொதுவாக பௌத்தமும் எவ்வாறு செல்வாக்குப் பெற்ற மதங்களாகக் காணப்பட்டன என்பதனையும் கட்டடம், சிற்பம், இசை, நடனம், நாடகம் போன்ற கலைத் துறைகளின் அபிவிருத்தியையும் அறியக்கூடியதாகவுள்ளது.

இலங்கையின் வரலாற்றுக் காலத்திலிருந்தே பிரசித்தி பெற்ற சிவதலங்களாக மாதோட்டத்தில் திருக்கேதீஸ்வரமும் திருகோணமலையில் கோணஸ்வரமும் யாழ்ப்பாணத்தில் நகுலேஸ்வரமும் தெவிநுவரவில் உள்ள தொண்டேஸ்வரமும் சோழர் காலத்தில் தமிழ் மக்களின் பெரும் ஆதரவையும், செல்வாக்கையும் பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆனால் போர்த்துக்கீசர், கி.பி பதினாறாம் நூற்றாண்டில் இலங்கையைக் கைப்பற்றிய வேளையில் இப்புராதன சிவத்தலங்களை முற்றாக அழித்து, அத் தலங்களின் கற்களை அவர்களது கோட்டைகளைக் கட்டப் பயன்படுத்தியிருக்கின்றனர். போர்த்துக்கீசரின் பல்வேறுபட்ட ஆவணங்களில் இக் கோயில்கள் அழிக்கப்பட்ட செய்திகளைக் காணமுடிகிறது.

இதன் விளைவாக அக் கோவில்கள் பற்றிய பூரண விபரங்களை அறிந்து கொள்வதில் சிரமங்கள் உள்ளன. இருந்தும் அவர்கள் கட்டிய கோட்டைகளில் உள்ள கற்களிலிருந்து சில கல்வெட்டுக்களையும் தகவல்களையும் பெறமுடிகிறது.

மேற்கூறப்பட்ட சிவத்தலங்களை விட மேலும் பல புராதன சைவ ஆலயங்களும் சோழர் ஆட்சிக் காலத்தில் இருந்ததற்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. மாதோட்டத்தில் ராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் என்ற இரு கோவில்கள் சோழர் மன்னரின் பெயர்களைத் தாங்கியவையாக உள்ளன. ராஜராஜேஸ்வரம், தாழிகுமரன் என்ற சோழ அதிகாரியினால் கட்டப்பட்டதென அறியமுடிகிறது.

இக்கோவில்களில் விழாக்களும் கிரியைகளும் ஒழுங்காக நடைபெற்றிருக்கின்றன. ராஜராஜேஸ்வரத்தில் வைகாசி விசாகத்தின் போது, ஏழுநாட்கள் விழா எடுத்துத் தீர்த்தமும் ஆடப்பட்டதாக அறியமுடிகிறது.

(தொடரும்)

# உறுப்பினர்கள் தமக்குள் முரண்படாமல் மக்கள் சேவையைத் தொடர வேண்டும்

## நகர சபைச் செயலாளர் அறிவுரை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் 265 மின் குமிழ்கள் பொருத்தப்பட வுள்ளன. அதில் முதற்கட் டமாக 95 மின்குமிழ்கள் எதிர்வரும் தினங்களில் பொருத்தப்படும் என சாவ கச்சேரி நகரசபை செயலா ளர் கா.சண்முகதாசன் தெரி வித்துள்ளார். சாவகச்சேரி நகரசபையில் கடந்த வெள் ளிக்கிழமை இடம்பெற்ற விசேட கூட்டத்தின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கிடைக்கப்பெற்ற மின் குமிழ்களை அந்தந்த வட் டார உறுப்பினர்கள் தவிசா ளருடன் கலந்தாலோசித்து பொருத்த முடியும். 11 வட்டா ரத்திற்கும் 8 மின்குமிழ்கள் வீதம் முதற்கட்டமாக வழங் கப்படவுள்ளன. இம்முறை மின்குமிழ்கள் தாராளமாக கிடைக்கும். ஆகவே உறுப் பினர்கள் தமக்குள் முரண் படாமல் மக்கள் சேவை யைத் தொடர வேண்டும். அத்துடன் கோவிற் குடியி ருப்பு உதயசூரியன் கிரா மத்தில் உள்ள கடற்கரை வீதியை 60 இலட்சம் ரூபாய் நிதியில் அமைக்க தென் மராட்சி பிரதேச செயலகத் தால் மத்திய அரசிடம் கோரி க்கை விடுக்கப்பட்டுள்ளது. அது எந்தளவில் கிடைக் கப்பெறும் என்று தெரியாத காரணத்தால் உடனடி நிவா ரணமாக தற்காலிகமாக பயணிக்கக் கூடிய வகையில் உதயசூரியன் கடற்கரை வீதியை அமைத்துக் கொடுப் போம் என மேலும் அவர் தெரிவித்தார். (இ-30)

# குளக் களிமண்ணைப் பயன்படுத்தி மணல் வீதிகளைப் புனரமையுங்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட மணல் வீதி களுக்கு உள்ளூர் குளக்களி மண்ணைப் பயன்படுத்தி சீர் செய்து கொடுக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு சபையில் பிரேரணை முன் வைத்துள்ளார். இது தொடர் பாக அவர் மேலும் தெரிவிக் கையில்,

சாவகச்சேரி பிரதேச சபைக் குட்பட்ட பல கிராமப்புற வீதி கள் மணல் வீதிகளாகக் காட்சி யளிக்கின்றன. இவ் வீதிகள் இன்றுவரை போதிய நிதி வசதிகள் இல்லாமை கார ணமாக பிரதேச சபையினால் புனரமைக்கப்படவில்லை.இவ் வீதிகளை திருத்தம் செய்ய வேறுவகை நிதிகளும் அர சாங்கத்தினால் ஒதுக்கப்பட வில்லை.இதன் காரணமாக இம் மணல் வீதிகளில் மருத் துவ தேவை மற்றும் பல தேவைகளுக்கு வாகனங்க ளில் பிரயாணம் செய்ய முடி யாத நிலைமையிலேயே கிரா மப்புற மக்கள் இன்றும் வாழ் ந்து வருகின்றனர். இதற்கு தீர்வு காணும் வகையில் அந்தப்பகுதி கிராமத்தில் கிடைக்கும் உள்ளூர் களி மண்ணைப் பயன்படுத்தி கிராமப்புற வீதிகளை சீர் செய்ய 2019 ஆம் ஆண்டு பிரதேசசபை வரவு-செலவுத் திட்டத்தில் நிதியொதுக்கீடு செய்து மதிப்பீடுகளை செய்வ தன்மூலம்இவ் வீதிகள் ஊடான போக்குவரத்தினை மேம்படு த்த முடியும். உதாரணமாக உப பணிமனை 16 ஆம் வட்டாரம்மறவன்புலோஜே/298 மணற்காடு வீதியின் கிளை வீதிகள் மறவன்புலோ கிழக்கு பனங்காய்குளம், மறவன் புலோ வடக்கு சின்ன தூவில் குளம் என்பவற்றில் உள்ள களிமண்ணைப் மத்திய விவசாய அமைச்சு, பிரதேச செயலகம் மற்றும் கனியவளத் திணைக் களம் ஆகியவற்றின் விசேட அனுமதியைப் பெற்று சீர் செய்தல் சிறப்பான செயல் எனத்தெரிவித்துள்ளார்.(இ-30)

# விவசாய உற்பத்திப் பொருள் இறக்குமதியைக் குறைக்கவும்

## விவசாயிகள் கோரிக்கை





(சாவகச்சேரி)

தென்மராட்சி புத்தூர்ச் சந்தி கமநலத் திணைக் களத்திற்கு நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் விஜயம் செய்திருந்தார்.

இதன்போது கமக்கார அமைப்புக்கள் மற்றும் விவ சாயிகளின் குறை நிறை களைக் கேட்டறிந்து கொண் டார். தென்மராட்சி கரம்பகம், எழுதுமட்டுவாழ் மற்றும் நுணாவில் பகுதியி லுள்ள குளங்கள் மற்றும் வாய்க் கால்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும், சந்தை களில் விவசாயிகள் பாதிக் கும் வகையில் மரக்கறிகளை வியாபாரிகள் கொள்வனவு செய்து இரு மடங்கு இலாபம் வைத்து விற்பனை செய்வ தாகவும், கால்நடைகளுக் கான தண்ணீரைப் பெற்றுக் கொள்வதில் சிர மங்களை எதிர்நோக்குவதாகவும் அத்து டன் உள்ளூர் விவசாயிகளின் நன்மை கருதி விவசாய உற் பத்திப் பொருட்களை இறக்கு மதி செய்வதனை குறைக்க வேண்டும் எனவும் விவசாய பிரதி அமைச்சரிடம் கேட்டுக் கொண்டனர். இக் கலந்து ரையாடலில் நூற்றுக்கும் மேற்பட்ட கமக்கார அமை ப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ-30)

# ஊட்டச்சத்து உலர் உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பு கந்தையா கனகம்மா நிதியத்தினரால் நாவற்குழி பிரதேசத்தின் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களு க்கான ஊட்டச்சத்து உலர் உணவு வழங்கல் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கந்தையா கனக ம்மா நினைவாலயத்தில் இடம்பெறும். நிதிக்காப் பாளர் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் கைதடி அரச முதியோர் இல்ல அத்தி யட்சகர் த.கிருபாகரன், வட மாகாண சமூக சேவைகள் திணைகளப் பணிப்பாளர் வனஜா செல்வரத்தினம் மற் றும் நாவற்குழி பிரதேச்சபை உறுப்பினர்கள் தி.தங்க வேல், அ.நிமலரோஜன், மல்லிகா பாலச்சந்திரன், லூர்த்து மேரி கனகரத்தி னம் ஆகியோர் கலந்துகொள் வர். தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் அறிமுக அட்டை, அம்மாகாட் அறிமுக அட்டை ஆகியவற்றுடன் காலை 9 மணிக்குச் சமுகம் தந்து ஊட்டச்சத்து உலர் உண வைப் பெற்றுச் செல்லுமாறு கந்தையா கனகம்மா நிதி யத்தினர் அறிவித்துள்ள னர். (இ)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1505

### கமலி

பெற்றோருக்குப் பயந்து
காதலை விட்ட காலம்போய்



இப்போது பெற்றோலுக்குப் பயந்து
காதலை விடுகிறார்கள் இளைஞர்கள்

### காசி

ஏன்டா உங்க ஸ்கூல்ல ரன்னிங் ரேஸ்
இருக்குன்னு சொன்னியே என்னாச்சு?



அதையேன் கேட்கிறீங்க அப்பா,
எனக்கு பயந்து எல்லாப் பசங்களும்
எனக்கு முன்னாடியே ஓடிப் போயிட்டாங்க

### காளி

பெத்தவங்க உசுரோட இருக்கும் போது சரியா
சாப்பாடு போடமாட்டானுங்க



செத்ததுக்கப்புறம் மொட்ட மாடியில
சாப்பாடு வைச்சு என்ன வா... வான்னு
கூப்பிடுறானுங்க பாவிப்பயலுக!

### சிவா


என்ன மச்சான் நல்லா இருக்கியா,
ரொம்ப நாளா போனையே காணோம்



மாப்ள சத்தியமா நான் எடுக்கலடா,
நல்லா தேடிப் பாருடா

### சிவகாமி

வாழ்க்கைல பல அடிகள் கொடுத்து
நகர விடாமல் செய்தாலும்



முன்னோக்கி சில அடிகள் எடுத்து வைக்க
முயற்சிப்பவனே வெற்றி பெறுவான்

### சிற்பி

தனி மனைவியை ராணிபோல் வைத்து
வாழ்க்கை நடத்துபவன்



ஒரு மகாராணியால் வளர்க்கப்பட்டவன்
என்பதை நிரூபிக்கின்றான்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# போலி முகவர் நிலையங்களைக் கண்டுபிடிக்க நாடுமுழுவதும் விசேட சுற்றிவளைப்பு-ஹரின்



(கொழும்பு)

நாடு முழுவதும் இயங்கும் வெளிநாட்டு முகவர் நிலையங்கள் தொடர்பில் 2014 ஆம் ஆண்டுக்குப் பின்னர் எவ்வித சுற்றிவளைப்பும்முன்னெடுக்கப்படவில்லை. வெகுவிரைவில் போலி முகவர் நிலையங்களுக்கு எதிராக கடும் சுற்றிவளைப்புகள் முன்னெடுக்கப்படுமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அத்துடன் 16 வயதுக்கும் குறைந்த கிண்ணியாவைச் சேர்ந்த சிறுமியை பணிப்பெண்ணாக அனுப்பிய இரண்டு இலங்கைப் பெண்களையும் கைது செய்து டுபாய் மற்றும் ஓமானிலுள்ள இரகசிய பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும்அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை பாதிக்கப்பட்டுள்ள சிறுமி அடுத்த வாரம் இலங்கைக்கு அழைத்து வரப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தின் அதிகாரிகள் பக்கச்சார்புடனேயே செயற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது வெளிநாடு செல்வோருக்காக நடைமுறையிலிருக்கும் குடும்பப் பின்னணி அறிக்கையின் காரணமாகவே பல மோசடிகள் இடம்பெற்று வருவதனால் அதனை இரத்துச் செய்யாமல் அதில் சில மாற்றங்களை மட்டும் ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் உருவாகியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதற்கமைய இது தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அமைச்சரவை உபகுழுவை எதிர்வரும் 27 ஆம் திகதி சந்தித்து காரணங்களை முன்வைக்க விருப்பதாக தெரிவித்த அமைச்சர் ஹரீன் சட்டவிரோதமாக வெளிநாடு செல்வோருக்கு எதிரான சட்டங்களை கடுமையாக்குவது தொடர்பில் பாராளுமன்றத்தில் கலந்துரையாடவிருப்பதாகவும் கூறினார்.

அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ பத்தரமுல்லையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு நேற்று முன்தினம் திடீர் கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டார். அங்கிருந்த ஊழியர்களுடன் குறை நிறைகளைக் கேட்டறிந்ததன் பின்னர் ஊடகவியலாளர்களுடன் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இவ்வாறு விளக்கமளித்தார்.

ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தையையுடைய தாய் எந்தவொரு தொழில் நிமித்தமும் வெளிநாடு செல்வதற்கு அரசாங்கம் தடை விதித்துள்ளது. எனினும் பணிப்பெண்ணாக வெளிநாடு செல்வோருக்கு வழங்கப்படும் குடும்பப் பின்னணி அறிக்கையில் இடம்பெற்று வரும் மோசடி காரணமாகவே இன்று நாம் பாரிய சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

குடும்பப் பின்னணி அறிக்கையிலிருந்து தப்புவதற்காக இன்று பலர் சுற்றுலா விசாவில் சென்று தொழில் செய்கின்றனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவு செய்யப்படாத நிலையில் அவர்கள் சுகயீனமடைந்தாலோ அல்லது ஏதேனும் பிரச்சினைக்கு முகம்கொடுத்தாலோ எம்மால் அவர்களுக்கு உதவ முடியாமலுள்ளது.

பணியகத்தில் பதிவு செய்யப்படாமல் சென்று உயிரிழப்போர் வெளிநாடொன்றில் மரணித்தால் அவர்களது சடலத்தைக்கூட எம்மால் நாட்டுக்கு கொண்டு வரமுடியாத இக்கட்டான நிலை உருவாகியுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

"இலங்கை பணிப்பெண்கள் 300 அமெரிக்க டொலர் பணத்துக்காக வேறு நாடுகளுக்கு பணிப்பெண்ணாக செல்வதில் எனக்கு தனிப்பட்ட முறையில் உடன்பாடு இல்லை. இந்த மனநிலையை பாடசாலை காலத்திலிருந்தே மாற்ற வேண்டும். மாறாக இஸ்ரேல், ஜப்பான், கொரியா ஆகிய நாடுகளுக்கு பயிற்றுவிக்கப்பட்ட பராமரிப்பாளர்களை அனுப்ப வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்காகவே அமைச்சின் கீழ் நாம் பல முயற்சிகளை முன்னெடுத்துள்ளோம்.

வேலை நிமித்தம் வெளிநாடு செல்பவர்கள் தமது தேவையை நிறைவு செய்வதற்காக பல இடங்களுக்கு அலைந்து திரிய வேண்டியிருப்பதனால் வேலைகளை இலகுவாக்கும் பொருட்டு அனைத்து செயன்முறைகளையும் தொழில்நுட்பம் அடிப்படையில் ஒரே வலையமைப்பின் கீழ் கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் வருடாந்தம் அதிக அந்நிய செலாவணியை நாட்டுக்கு பெற்றுத் தரும் ஒரு இடமாக இருக்கின்றபோதிலும் இதன் செயற்பாடுகள் ஒழுங்கின்றி முன்னெடுக்கப்படுவது கவலைக்குரிய விடயமாகும்.

அதிகாரிகளை பல தடவைகள் எச்சரித்தும் இதன் செயற்பாடுகள் மாற்றியமைக்கப்படவில்லை. எனவே தான் இன்று எவ்வித முன்னறிவித்தலுமின்றி நான் பணியகத்துக்கு திடீர் மேற்பார்வை விஜயமொன்றை முன்னெடுத்தேன். அமைச்சின் தீர்மானத்துக்கு இணங்க செயற்படாதவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# இனியும் நம்பி வீண்போக முடியாது 23ம் திகதி மலையகம் ஸ்தம்பிக்கும்

(ஹற்றன்)

கூட்டு ஒப்பந்தம் எனச் சொல்லி முதலாளிமார் சம்மேளனம்,பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் தொழிற் சங்கங்கள் மலையக மக்களை ஏமாற்றி வருகின்றன. இனி மேலும் நம்பி வீண்போக முடியாது.

ஆகவே எதிர்வரும் 23 ஆம் திகதி மலையகம் முழுவதும் ஸ்தம்பிக்கும் எனவும் அன்றையதினம் மலையக பிரதேசங்கள் முழுவதும் அடையாளப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் பெருந்தோட்ட உழைப்புரிமை ஒன்றியம் அறிவித்துள்ளது.

பெருந்தோட்ட மக்களின் பிரச்சினைகள் தொடர்பான கூட்டு ஒப்பந்தம் தொடர்பான கலந்துரையாடல் இணக்கப்பாடின்றி முடிவடைந்தென்பதே கூட்டு ஒப்பந்தத்தில் ஈடுபடும் தொழிற்சங்கங்களின் பதிலாக காணப்படுகின்றது.

ஆனால் தொழிற்சங்கங்களின் இந்தப் பதிலை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேபோன்று ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி புதிய கூட்டு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் தொடர் அழுத்தங்களை சந்திக்க நேரிடும் என்றும் 23 மூன்றாம் திகதி ஆர்ப்பாட்டத்துக்கு அனைத்து சங்கங்கள் மற்றும் மக்களையும் கலந்துகொள்ளுமாறும் மக்கள் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி இளையதம்பி தம்பையா கோரிக்கை விடுத்துள்ளார். (இ-7)

# இரண்டு மாடிக் கட்டடத்தில் தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு-02, பாக் வீதிப் பகுதியில் உள்ள இரண்டு மாடிக் கட்டடமொன்றில் நேற்றுக்காலை ஏற்பட்ட தீ விபத்தில் கட்டடத்தின் மேல் மாடி முழுமையாக தீக்கிரையாகியுள்ளதாக தீயணைப்பு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 6 மணியளவிலேயே இந்த தீ விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.



இதனையடுத்து குறித்த பகு திக்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

அத்துடன் தீ விபத்து ஏற்பட்டதற்கான காரணம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# செய்தித்துளிகள்

## அலங்கார உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் அலங்கார உ ற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 28 ஆம் திகதி வரை 15 நாட்கள் நடைபெறும். (இ)

## பாடசாலை நுழைவாயில் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் வாமதேவன் பத்மாவதி ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள பாடசாலை நுழைவாயில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் திறந்து வைக்கப்படும் என பாடசாலை அதிபர் ச.திருநாவுக்கரசு அறிவித்துள்ளார். (இ)

## இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு விசம் கலந்த பால் பக்கெற்

(கொழும்பு)

கூட்டு எதிர்க்கட்சியின் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வருகை தந்தவர்களுக்கு இனந்தெரியாதோரினால் வழங்கப்பட்ட விசம் கலந்ததாக கூறப்படும் பால் பக்கெற் பரிசோதனைக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்புக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களால் வாக்குமூலம் வழங்கும் போது பொலிஸில் ஒப்படைக்கப்பட்ட பால் பக்கெற் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. இந்த விசப்பால் பக்கெற் தொடர்பில் பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் குறித்த பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-7)

## ஓய்வூதியர் சங்கத்தின் தலைவராக சுப்பிரமணியம் தெரிவானார்

(கொழும்பு)

அகில இலங்கை அரசசேவை ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் வவுனியா மாவட்ட ஓய்வூதியர் சங்கத்தின் தலைவர் எஸ்.சுப்பிரமணியம் அகில இலங்கை ஓய்வூதியர் சங்கத்தின் துணைத் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். தாய்ச் சங்கத்தின் ஒரே ஒரு தமிழரான இவர் வடமாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களுக்கு வருகை தந்து ஓய்வூதியர்களின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ந்து தலைமைச் சங்கத்துக்கு சமர்ப்பிக்க மாவட்டச் சங்கங்களோடு கலந்துரையாடலை மேற்கொண்டுள்ளார். (இ-84)

## புகையிரதத்துடன் மோதி சிறுவன் பலி

(கொழும்பு)

அங்குலானை பிரதேசத்தில் புகையிரதத்தில் மோதி 8 வயது சிறுவர் ஒருவன் உயிரிழந்துள்ளான். அங்குலானை, சயுரபுர மாடி வீட்டுத் தொகுதிக்கு முன்னால் உள்ள புகையிரத வீதிக்கு குறுக்கால் சென்ற குறித்த சிறுவன் மருதானையில் இருந்து ஹிக்கடுவ நோக்கி சென்ற புகையிரதத்துடன் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (7)

## முந்திரிப் பருப்பு ஒப்பந்தம் ரத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் தனக்குப் பரிமாறப்பட்ட முந்திரிப் பருப்புக்கள் நாய் கூட உண்ண முடியாதவை என அம்பாந்தோட்டையில் அண்மையில் விவசாயிகள் மத்தியில் உரையாற்றும் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்திருந்தார்.

அதன் பிரகாரம் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் கொள்வனவு செய்த முந்திரிப் பருப்புக்களை நீக்கி விட்டதோடு முந்திரிப் பருப்பு கொள்வனவிற்காக டுபாய் நிறுவனத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை இரத்து செய்து விட்டு வேறுநிறுவனத்தோடு ஒப்பந்தத்தை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது. (இ-7)

## துப்பாக்கி ரவைகள் கண்டெடுப்பு

(ஹற்றன்)

ஹற்றன் - டன்பார் பகுதியில் ரி-56 ரக துப்பாக்கிக்கு பயன்படுத்தும் 6 ரவைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். குறித்த பகுதியில் உள்ள பூந்தோட்டமொன்றில் இருந்து இவை நேற்று முன்தினம் புதன்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளன. பொதுமக்களால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து இவை பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (இ-7)

# சிறுவர் அரங்கம்

## சிங்கராஜாவும் மூன்று நண்பர்களும்



அந்தக் காட்டில் காகம், நரி, சிறுத்தை மூன்றும் நண்பர்களாக இருந்தன. மூன்றுமே முழுச் சோம்பேறிகள். வேட்டைக்குப் போகாமலேயே இரை கிடைக்க வேண்டும். கிடைக்கிற இரையைத் தின்றுவிட்டுத் தூங்க வேண்டும். இதை மட்டுமே மூன்றும் செய்துவந்தன.

நாளாக நாளாகக் காட்டில் இரை கிடைப்பதில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது. உட்கார்ந்த இடத்திலேயே இரை கிடைப்பதில்லையே என்ன செய்யலாம் என மூன்றும் குழப்பத்தில் திண்டாடின.

அப்போது காகம் ஒரு யோசனை சொன்னது.

"காட்டு ராஜாவான சிங்கத்துக்கு மட்டும் தினமும் நல்ல இரை கிடைத்து விடுகிறது. நாம் மூவரும் சிங்கராஜாவிடம் வேலை கேட்டுப் போகலாமா...?"

"ஐயோ... நம்மளால வேலை எதுவும் செய்ய முடியாது..." என்று அவசரமாக மறுத்தது சிறுத்தை.

"உன்னை யாரு வேல்லை செய்யச் சொன்னது...? வேலை செய்யிற மாதிரி நடிச்சா போதும்" என்றது நரியும்.

மூன்றும் யோசித்து ஒரு திட்டம் தீட்டின.

அடுத்த நாள்...

சிங்கராஜாவின் குகையருகே பதுங்கிப் பதுங்கிப் போனது நரி. இதைப் பார்த்த சிங்கராஜா, "என்ன நரியாரே... யாரைக் கண்டு பயந்து இப்படிப் பதுங்கிப் போறீங்க...?" என்றது.

"வேறு யாரைக் கண்டு...? நம்ம காகம், சிறுத்தையாரின் கண்களில் பட்டுவிடக் கூடாது என்பதற்காகத்தான்...!" என்றது நரி.

"நீ எவ்வளவு பெரிய புத்திசாலி நீ பேரய் காகத்துக்கும் சிறுத்தைக்கும் பயப்படலாமா...?" என்று சிங்கம் கேட்டது.

"சரியாகத்தான் கேட்டீர்கள், சிங்கராஜா. நீங்கள் நினைப்பதுபோல் அந்தச் சிறுத்தையும் காகமும் சாதாரணமானவை அல்ல. அவை இரண்டுக்கும் மிகப் பெரிய சக்தி ஒன்று உள்ளது..." என்றது நரி.

"அப்படியென்ன சக்தி...?" ஒன்றும் புரியாமல் கேட்டது சிங்கம்.

"என்ன சிங்க ராஜா, அப்படிக் கேட்டுட்டீங்க. அந்தக் காகம் உட்கார்ந்த இடத்திலேயே, காட்டில் எந்த மூலையில், எந்த விலங்கிருக்கிறது என்பதைத் தனது சின்ன அசைவிலேயே கண்டுபிடித்துவிடும். அதேபோல், அந்தச்சிறுத்தை லேசாய் ஒரு உறுமு உறுமினாலே போதும். எந்த விலங்கும் தப்பித்து ஓட முடியாமல் உணவாகி விடும்...!" என்றது நரி.

சிங்கராஜா இவற்றை உண்மையென்று நம்பிவிட்டது. 'ஆகா, இப்படிப்பட்ட இருவர் நம் அருகில் இருந்தால் நமக்கு மிகுந்த உதவியாக இருக்குமே!' என்று ஆசைப்பட்டது சிங்கம்.

சிங்கராஜாவின் மனவோட்டத்தைப் புரிந்துகொண்ட நரி, "சிங்க ராஜா, விருப்பம் இருந்தால், அவர்கள் இருவரையும் தங்களின் உதவியாளராக இருக்க சம்மதிக்க வைத்து விடுகிறேன்" என்றது.

"அப்படியே ஆகட்டும்" என்று தலையை ஆட்டியது சிங்கராஜா.

சொல்லிவிட்டுப் போன மறுநாள்...

தனது இரு நண்பர்களோடு வந்து சிங்கராஜாவின் குகையிலேயே தங்கி விட்டது நரியும்.

தூங்கி எழுந்ததும் காகம் இறக்கையைப் படபடவென அடித்தது. சோம்பல் முறித்தபடி சிறுத்தை உறுமியது. பிறகு இரண்டும் கண்களை மூடி அப்படியே படுத்துக் கொண்டன.

இதுதான் சமயமென்று நரியும், "சிங்கராஜா, வடக்கு மூலையிலே ஏதோ பெரிய விலங்கு உங்களுக்காகக் காத்திருக்கு. அதைத்தான் இருவரும் உங்களுக்குத் தனது செய்கையால் உணர்த்துகிறார்கள்" என்று சொன்னது.

சிங்கராஜாவும் வடக்கு மூலை நோக்கி பாய்ந்து சென்றது. ஒரு மானை வேட்டையாடி இழுத்து வந்தது.

'ஆகா, நாம ஏதோ சொல்லப் போக, அதுவும் பொருத்தமா ஏதோ ஒண்ணு மாட்டிக்கிட்டது!' என்று உள்ளூர சந்தோஷப்பட்டுக்கொண்டது நரி.

சிங்கராஜாவோடு சேர்ந்து மூன்றும் மானைத் தின்று முடித்தன. தினமும் வகைவகையான உணவு உட்கார்ந்த இடத்துக்கே தேடி வந்து கிடைத்தால்? காகம், நரி, சிறுத்தையின் சந்தோஷத்துக்கு அளவேயில்லை.

மூன்றுக்கும் ஒருநாள் ஒட்டகத்தின் கறி சாப்பிடும் ஆசை வந்தது. மேற்குத் திசையில்தான் ஒட்டகங்கள் இருக்கும். அந்தத் திசை பார்த்து சிறுத்தை உறுமியது. காகமும் இறக்கையைப் படபடவென அடித்தது.

"ம்... கிளம்புங்கள்... சிங்க ராஜா..." என்று நரி சிங்க ராஜாவை உசுப்பி விட்டது.

தூரத்தில் ஒட்டகங்கள் மேய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்த சிங்க ராஜா பாய்ந்தோடியது. போன வேகத்தில் ஒரு பள்ளமிருப்பது தெரியாமல் தடுமாறி விழுந்தது சிங்கராஜா.

"ஐயோ... கால் போச்சே..." என்ற சிங்கராஜாவின் அலறல் கேட்டு, ஒட்டகங்கள் பயந்தோடின. ஒரு ஒட்டகம் மட்டும் சிங்கத்தின் அருகே வந்தது.

காலில் அடிபட்டுத் துடித்துக் கொண்டிருந்த சிங்கராஜாவைப் பார்த்து வருத்தப்பட்டது, அந்த ஒட்டகம். நடக்க முடியாமல் அவதிப்பட்ட சிங்கராஜாவை, ஒட்டகம் தன் முதுகில் ஏற்றிக்கொண்டு, குகையை நோக்கி வந்தது.

'ஒட்டகத்தை இழுத்துக்கொண்டு சிங்கம் வரும்...' என்று எதிர்பார்த்துக் காத்திருந்த மூன்றுக்கும் பெருத்த ஏமாற்றம்.

குகையில் சிங்க ராஜாவை விட்டுச் சென்ற ஒட்டகம், காலில் அடிபட்ட இடத்தில் இலைதழைகளைப் பறித்து வந்து மருந்துபோட்டது. காயம்குணமாகும்வரை கூடவே இருந்து கவனித்துக் கொண்டது.

தனக்கு உதவி செய்த ஒட்டகத்தை, தனது நண்பனாகவே ஏற்றுக் கொண்டது சிங்கராஜா.

சிங்கராஜாவுக்கு உதவி ஏதும் செய்யாமல், 'ஐயோ, ஒட்டகக் கறி கிடைக்காமப் போச்சே...' என்று ஏங்கிக் கிடந்தன மூன்றும்.

நாட்கள் கடந்தன. சிங்கராஜாவுக்கோ அடிக்கடி உடம்பு சரியில்லாமல் போனது. முன்போல் அதனால் வேட்டைக்குச் செல்ல முடியவில்லை. இதுதான் சரியான சமயமென்று காகம், நரி, சிறுத்தை மூன்றும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டன.

மூன்றும் சிங்கராஜாவிடம் வந்தன.

"சிங்கராஜா, நீங்கள் வேட்டைக்குச் செல்ல முடியாமல் இப்படிப் பசியோடிருப்பதைப் பார்க்க வருத்தமாக இருக்கு. நீங்கள் என்னைத் தின்று பசியாறிக் கொள்ளுங்கள்..." என்றது காகம்.

"ஆமாம், சிங்கராஜா. எனக்கும் வருத்தமாக இருக்கு. காகத்தின் கறி உங்களுக்குப்பத்தாது. என்னைச் சாப்பிடுங்கள்" என்றது நரியும்.

"இருவரின் கறியும் உங்களுக்குப் போதாது. என்னைச் சாப்பிடுங்கள்" என்றது சிறுத்தை.

மூவர் சொல்வதையும் கேட்டுக் கொண்டிருந்த ஒட்டகம், "வேண்டாம். இந்த மூவரும் உங்களின் நீண்ட நாள் உதவியாளர்கள். என்னைச் சாப்பிடுங்கள். நீங்கள் நால்வருமே பசியாறலாம்" என்று சொன்னது.

ஒட்டகம் சொன்னதும், உடனே மற்ற மூன்றும், "ஆமாம், சிங்க ராஜா! அப்படியே செய்யலாம்...!" என்று ஒரே குரலில் ஆமோதித்தன.

இப்படிச் சொன்னதும் சிங்க ராஜாவுக்கு இவர்களின் திட்டம் புரிந்துபோனது.

"நீங்கள் மூவரும் என் மேல் வைத்திருக்கும் அளவில்லா அன்புக்கு மிக்க நன்றி. அனைவருடைய அன்பையும் ஏற்றுக்கொள்கிறேன். இனிமேல் என்னால் வேட்டையாட முடியாத நிலையில், நீங்கள் சொன்னது போல ஒவ்வொருவரையும் தினமும் தின்று நான் பசியைப் போக்கிக்கொள்கிறேன்!" என்று சிங்கராஜா சொன்னதுதான் தாமதம், தலைதெறிக்க ஓட்டமெடுத்தன நரியும் சிறுத்தையும். பறந்தோடி மறைந்தது காகம்.

ஒட்டகம் மட்டும் சிங்கராஜாவின் அருகிலேயே இருந்தது. அன்று முதல் சிங்கராஜாவும் ஒட்டகமும் நெருங்கிய நண்பர்களாக சேர்ந்து வாழ்ந்தன.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2018.09 **14**

❖1886-தட்டச்சுப் பொறியின் நாடா கண்டுபிடிக்கப்பட்டது.

❖1917-உருசியா அதிகாரபூர்வமாகக் குடியரசானது.

❖1954-சோவியத் ஒன்றியம் அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.

❖1959-சோவியத்தின் லூனா 2 விண்கலம் சந்திரனில் மோதியது. சந்திரனில் இறங்கிய மனிதனால் அமைக்கப்பட்ட முதலாவது விண்கலம் இதுவே.

❖1960-எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் கூட்டமைப்பு (ஒப்பெக்) உருவாக்கப்பட்டது.

❖1999-கிரிபட்டி, நௌரு, டொங்கா ஆகியன ஐ.நா. அவையில் இணைந்தன.

❖2005-நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிடக் கழகம் என்ற புதிய அரசியற் கட்சியை ஆரம்பித்தார்.

❖2008-உருசியாவின் ஏரோபுளொட் விமானம் பேர்ம் கரை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளாகியதில் அனைத்துப் 88 பயணிகளும் கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

❖1853-பொன்னம்பலம் அருணாசலம், இலங்கை அரசியல்வாதி (இ. 1924)

❖1914-சி.வி.வேலுப்பிள்ளை, இலங்கை மலையக எழுத்தாளர் (இ. 1984)

❖1922-கு.இராமலிங்கம், தமிழ்க் கவிஞர், எழுத்தாளர் (இ. 2002)

❖1923-ராம் ஜெத்மலானி, இந்திய வழக்கறிஞர், அரசியல்வாதி

❖1927-யூ.ஆர்.ஜீவரத்தினம், தமிழகத் திரைப்பட நடிகை, பாடகி (இ. 2000)

❖1932மா.க.ஈழவேந்தன், இலங்கைத் தமிழ் அரசியல்வாதி, தமிழறிஞர்

❖1939-சோ.பத்மநாதன், ஈழத்து எழுத்தாளர்

❖1951-தன்கன் ஆல்டேன், நோபல் பரிசு பெற்ற பிரித்தானிய இயற்பியலாளர்

❖1974-பிரியா ராமன், தமிழகத் திரைப்பட, தொலைக்காட்சி நடிகை

❖1989-லோகன் ஹென்டர்சன், அமெரிக்கப் பாடகர்

**இறப்புகள்**

❖2011-ருடால்ஃப் மாஸ்பவர், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி. 1929)

❖2015-கௌதம நீலாம்பரன், தமிழக எழுத்தாளர் (பி. 1948)

❖2015-இந்திக குணவர்தனா, இலங்கை இடதுசாரி அரசியல்வாதி (பி. 1943)

**சிறப்பு நாள்**

❖இந்தி மொழி நாள் (இந்தி பேசும் பகுதிகளில்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 120 | 90 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 180 | 100 | 70 | 120 | 60 |
| தக்காளி | 140 | 50 | 30 | 60 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 50 | 40 | 50 | 30 |
| கோவா | 80 | 140 | 60 | 160 | 160 |
| கரட் | 300 | 180 | 200 | 300 | 170 |
| பூசணி | 70 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 80 | 60 | 30 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 100 | 70 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 90 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 88 | 100 | 120 |
| பாகற்காய் | 150 | 110 | 100 | 120 | 200 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 40 | 80 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 80 | 55 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 90 | 80 | 160 | 100 |
| லீக்ஸ் | 120 | 100 | 90 | 120 | 100 |
| பீற்றூட் | 60 | 60 | 65 | 80 | 100 |
| கறிமிளகாய் | 140 | 100 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 60 | 60 | 80 | 40 |
| போஞ்சி | 200 | 140 | 110 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 60 | — | 60 | 120 | 50 |
| கீரை-1பிடி | 25 | 30 | 30 | 30 | 20 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 50 | 30-50 | 50 |
| இராசவள்ளி | 120 | 140 | 110 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 100 | 130 | 90 | 160 | 100 |
| முள்ளங்கி | 40 | 60 | 30 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 35 | 50 | 20 | 30 | 40 |
| வல்லாரை | 30 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 40 | 120 | 80 | 30 |

உனக்கும் பே பே
உன் அப்பனுக்கும் பே பே.

*- தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஏப்ரலுக்கு அடுத்தது - மே... ஜூனுக்கு முந்தியது - மே...

மன்னர் சபைக்கு ஒரு குடியானவன் வருகிறார். அவர் தன்னுடன் ஆடு ஒன்றையும் கொண்டு வருகிறார்.

மன்னரை வணங்கிய அந்தக் குடியானவன் மன்னர் பிரானே! இது எனது ஆடு. இதற்கு நன்கு பேசத் தெரியும் என்று கூறுகின்றார்.

இதனை ஆச்சரியத்துடன் கேட்ட மன்னன் எங்கே உனது ஆட்டைப் பேசச் சொல்லு பார்க்கலாம் என்றார்.

உடனே அந்தக் குடியானவன் தன் ஆட்டைப் பார்த்து ஆடாரே! ஏப்ரல் மாதத்துக்கு அடுத்த மாதம் என்ன? என்று கேட்க; அதற்கு ஆடு மே... என்றது.

ஆடாரே! ஜூன் மாதத்துக்கு முதல் மாதம் எது எனக் குடியானவன் கேட்க, அதற்கு ஆடு மே... என்றது.

மன்னர் பிரானே பார்த்தீர்களா எனது ஆடு பேசுகிறது என்றான் குடியானவன். இவற்றையெல்லாம் உற்று அவதானித்துக் கொண்டிருந்த மந்திரி குடியானவனைப் பார்த்து உன் ஆட்டிடம் நான் கேள்வி கேட்கிறேன் என்று கூறியபடி; ஆடாரே! ஜனவரிக்கு அடுத்த மாதம் எது என்று கேட்டார். உடனே ஆடு மே... என்றது. இப்போது ஆட்டின் இயல்பு தெரிந்தாயிற்று.

'இதை நாம் கூறும்போது அட பெரியதொரு கதையைக் கூறிவிட்டீராக்கும் என்று நீங்கள் முணுமுணுப்பதும் நமக்குத் தெரிகிறது.

எனினும் இந்தக் கதை புதியதோ பெரியதோ அல்ல. மாறாக இந்தக் கதைக்கும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் கருத்துக்கும் தொடர்பு உண்டு.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை இலங்கைத் தூதுக்குழு அண்மையில் சந்தித்திருந்தது.

இச்சந்திப்பின்போது இந்தியா எப்போதும் உங்களுடன் இருக்கும் என்று பிரதமர் நரேந்திர மோடி கூறியதாக அந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் தெரிவித்துள்ளார்.

இங்கு, எப்போதும் உங்களுடனேயே இருப்போம் என்று பிரதமர் மோடி கூறியது யாருக்கானது.

இலங்கைத் தூதுக்குழுவிடம்; எப்போதும் இந்தியா உங்களுடனேயே இருக்கும் என்றால், அது இலங்கை அரசுக்குச் சார்பானது என்று பொருள்படும்.

தவிர, பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஒருமுறை இலங்கைக்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார்.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி யாழ்ப்பாணப் பொது நூலக மண்டபத்தில் உரையாற்றும்போது, இந்தியா உங்களுடனேயே இருக்கும் என்றார்.

இது தமிழ் மக்கள் மற்றும் தமிழ்த் தலைவர்கள் முன்னிலையில் கூறியமையால் இது எங்களுக்குச் சாதகமானது என்று பொருள்படும்.

ஆக, ஏப்ரலுக்கு அடுத்தது மே என்பதும் ஜூனுக்கு முன்னையது மே என்பதுமான ஆட்டின் இயல்பும் "எப்போதும் உங்களுடன் நாங்கள் இருப்போம்" என்ற பிரதமர் மோடியின் வார்த்தை இயல்பும் ஒத்ததன்மை கொண்டவை என்பதை மட்டுமே இப்போதைக்கு நாம் கூறமுடியும்.

# போரினால் பாதிக்கப்பட்ட 303 பேருக்கு காசோலைகள்

## முல்லைத்தீவில் வழங்கி வைப்பு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நட்டஈடு வழங்கும் நிகழ்வு மாவட்ட செயலக மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. கடந்த காலத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 303 பேருக்கான காசோலைகள் வழங்கும் நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மீள் குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அபிவிருத்தி அமைச்சின் பிரதி தலைவர் கே.கே. மஸ்தான், மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன், மீள்குடியேற்ற புனர்வாழ்வு அமைச்சின் தலைவர் அன்னலிங்கம் மற்றும் கணக்காளர் பதுறுதீன், ஐக்கிய தேசியக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர் நிசாம் ஜெமால்டின் மற்றும் பிரதேச செயலாளர்கள், அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் உரை நிகழ்த்திய மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன்,

22 மில்லியன்ரூபாய் பெறுமதியான காசோலைகள் 303 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இது இந்த ஆண்டின் இரண்டாவது நிகழ்வாக காணப்படுகின்றது. மீள் குடியேற்ற அமைச்சின் இந்த செயற்றிட்டமானது கிடப்பில் கிடந்த பல பைல்கள் மீள் எடுக்கப்பட்டு அதற்கான கொடுப்பனவு வழங்குகின்ற ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளமை மக்களுக்கு கிடைத்துள்ள ஒரு ஆறுதலாக அமைந்துள்ளது.

இதில் 246 பொதுமக்களுக்கும் 46 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் இறந்த அல்லது காயமடைந்த 7 பேருக்கும் 4 சமயத் தலங்களுக்கும் இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இதுவரை அதிகம் பாதிக்கப்பட்ட மக்கள் ஆயிரத்து 866 பேருக்கு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது. ஆயிரத்து 55 காயம் அடைந்தவர்களுக்கும் 2 ஆயிரத்து 474 பொதுமக்களுக்கும் ஆயிரத்து 820 அரச உத்தியோகத்தர்களுக்கான இழப்பீட்டு கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இன்னும் முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த இழப்பீட்டு கொடுப்பனவுக்கான கோவைகள் அதிகம் காணப்படுகின்றது. இன்னும் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கோவைகள் மாவட்டத்தில் இருக்கின்றது.

முன்னர் நூறு அல்லது ஐம்பது நட்டஈடுகளைத்தான் ஓர் ஆண்டில் கொடுக்கக் கூடியதாக இருந்தது. ஆனால தற்போது இந்த ஆண்டு அதிகளவான நட்டஈட்டு கொடுப்பனவுகள் கொடுக்கப்பட்டுள்ளது. புனர்வாழ்வு அபிவிருத்தி அதிகாரசபைக்கும் மீள் குடியேற்ற அமைச்சிற்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (2-281)

# ரயில் மோதியதில் இரு ஆடுகள் பலி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் ரயில் மோதியதில் இரண்டு பெறுமதியான மறி ஆடுகள் பலியாகியுள்ளன.

தென்மராட்சிப் பகுதியில் தொடர்ச்சியாக கால்நடைகள விபத்துக்கு உள்ளாகுகின்ற போதிலும் கால்நடை வளர்ப்பவர்கள் கால்நடைகளைக் கட்டி வளர்க்கத்தவறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-30)

# ஒழுக்கத்துடன் வாழ்க...

- நல்ல பழக்கங்களைப் பழகவேண்டும். தவறான சிந்தனைகளால் மனதை வளர்க்கக் கூடாது.
- தீயவர்களின் பாதைகளைப் பின்பற்றக் கூடாது
- நல்ல மனிதர்களின் நட்பையும் அன்பையும் நாடிச்சென்று நட்புக் கொள்ளுதல் அவசியம்.
- நம்பிக்கையுடன் வாழும் இலட்சியவாதிகளிடமிருந்து ஒழுக்கங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும்.
- பொறாமையில்லா உள்ளங்களில்தான் ஒழுக்கங்கள் நிறைந்திருக்கும். தூய எண்ணங்களுடன் வாழ நல்ல ஒழுக்கத்தைக் கையாள வேண்டும். அன்பும், ஆன்மீகமும் நல்ல பழக்கத்துடன் கூடிய ஒழுக்கமும் நம்மோடு இருந்தால் வெற்றியை எளிதில் அடையலாம்.
- சந்தர்ப்பத்தால் வரும் பழக்கங்களைத் தவிர்த்தால் ஒழுக்கத்துடன் வளமாக வாழலாம்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8 மணியிலிருநது மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில ஊர்காவற்றுறை, கரம்பன், மெலிஞ்சி முனை, நாரந்தனை, ஊர்காவற்றுறை நீதிமன்றக் கட்டடத் தொகுதி ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில பட்டாணிச் சூரிலிருந்து பம்பைமடு வரை, வவுனியா தொழில் நுட்பக் கல்லூரி, வவுனியா பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழக விடுதி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில பறயனாலங்குளம் ஒருபகுதி பெரிய குஞ்சுக்குளம், மாதர் கிராமம், பெரியமுறிப்பு, தேக்கம் மடுசந்தி, கட்டையடம்பன், மாலவராயர் கட்டையடம்பன், தம்பானிக்குளம், பன்னிவெட்டுவான், தொழில் நுட்பககல்லூரி பன்னி வெட்டுவான், இசைமலைத் தாழ்வு கற்கடந்தகுளம், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன், முருங்கன்விதைபண்ணை, தேக்கம் நானாட்டான் பிரதேசசபை, திருக்கேதீச்சரப் பிரதேசம், மாந்தை சந்தி, நாகதாழ்வு அகதியாமோட்டை, கூறை, சேது விநாயகன் குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.(இ-9)



# அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

## மகாலட்சுமியை வழிபடுபவர்களுக்கு கிடைக்கும் பதினைந்து பேறுகள்!

மகாலட்சுமியை தினமும் அல்லது வெள்ளிக் கிழமைகளில் மனம் உருகி வழிபடுபவர்களுக்கு பதினைந்து பேறுகள் கிடைக்கும். அவை என்னவென்று விரிவாக பார்க்கலாம்.

உடல எபபொழுதும இளமையுடன அழகு பெறறு ஒளிமயமாகும்.

வட்டில பசுககளும, வேலைககாரரகளும கிடைபபார்கள்.

பிறர்மேல் உண்டான தீராத பகை அழிந்து மனதில் அமைதி உண்டாகும்.

படிபபில அதிகளவு ஈடுபாடு ஏறபடடு கலவி ஞானம பெருகும்.

விடுகளில் பலவிதமான ஐஸ்வரியங்கள் செழிக்கும் எனறும பணபபிரசசினை இனறி நிலைதத செல்வம் அமையும். *(தொடரும்)*



# ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

## நீங்கள் சிறப்புரிமையுடையவர்கள்

சூரிய மண்டலத்திலுள்ள கிரகங்கள் எல்லாவற்றுள்ளும் இந்தப் பூமிக்கிரகம் தான் பலவிதமான உயிர்களைப் பெற்றுள்ள சிறப்புரிமை கொண்டுள்ளது.

எல்லாவிதமான உயிரினங்களைவிட மனிதன் அதிகமான சிறப்புரிமையுடையவர். ஏனெனில் அவன் ஞானத்தைப் பெறமுடியும்.

அறிவுடையவர்களில்கூட நீங்கள் அதிகமான சிறப்புரிமையுடை யவன் எனத் தெரியுமா?

யார் தாம் சிறப்புரிமை பெற்றுள்ளதை உணராதவர்களோ அவர்கள் சிறப்புரிமை பெறாதவர்களாகிறார்கள். அவர்களும் பெற்றுள்ளார்கள் எதை? எதிர்மறையானவற்றை எல்லாம் பெற்றுள்ளார்கள்.

நஙகள அமைதி, நஙகள அனபு, நஙகள மகிழசசி மற்றும் படைப்பாளியை (இறைவனை) நீங்கள் பெற்றுள்ளீர்கள் என்பதைத் திரும்பத் திரும்ப நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் இவ்வாறாக உணரவில்லையென்றால் நீங்கள் ஒரு பேய் போன்று வாழ்கிறீர்கள்.

பறவைகள தஙகளுடைய கூடடிறகுத திருமபி வருவதைப் போன்று உங்களுடைய இறைவனிடம் (மூலத்தினிடம்) நீங்கள் திரும்பத் திரும்ப வந்துவிடுங்கள்; நீங்கள் இறைவனைப் பெற்றுள்ளீர்கள் என்பதை அங்கே மாத்திரம் தான் உணர முடியும்.

# இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

## உண்மையைப் பேசுங்கள்

✦ ஒருவன தனது குழநதைகளின அலலது தனது முதுமையான தாய, தநதையருககு உதவி செயவதறகாக செயல்புரியும் போது, அல்லாஹ்வின் பாதையில் இருக்கின்றான்.

✦ குற்றமற்ற பணியாளர்களின் மீது வீண்பழி சுமத்துபவன், மறுமை நாளில் சவுக்கால் அடிக்கப்படுவான்.

✦ கெடடவைகளைப பாரககாமல உஙகள கணகளை கடடுபபடுததுஙகள. கெடட செயலகளை விடடும உஙகள கைகளை கட்டுப்படுத்துங்கள். பொய்களை விட்டும் உண்மை பேசுவதில் முனையுங்கள்.

✦ குடுமபததினரை அலடசியம செயயாதர. சுகமான வாழ்வை இழந்து விடுவீர். அடுத்த வீட்டுக்காரரை அலட்சியம் செய்யாதீர். நற்பலனை இழந்துவிடுவீர்.


✦ கைப்பொருள் கைவிட்டுப் போவதற்கு முன், தான தர்மங்கள் கொடுப்பதில் விரைந்து கொள்ளுங்கள்.

✦ வயதும் காலமும் வீணாகும் முன், நன்மையான செயலகளைச செயவதில விரைநது கொளளுஙகள.







ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 45ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தும் கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெற்றது. இப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் மோதியது. (க)



வடமாகாண கராத்தே சம்மேளனத்தால் யா/மத்திய கல்லூரியில் இடம்பெற்ற மாகாண ம்ட்ட கராத்தே போட்டியில் கலந்து கொண்ட லவணன் கவின் 7 வயதுப்பிரிவு காட்டா போட்டியில் மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தை வென்றுள்ளார். (க)











வடமராட்சி குரும்பைகட்டி சனசமூக நிலையத்தின் 73 ஆம் ஆண்டு நிறைவையொட்டி விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மந்திகை அம்மன் கோவிலுக்கு முன்பாக இவ் விளையாட்டு போட்டிகள் நடத்தப்பட்டன.

குரும்பைகட்டி சனசமூக நிலையமும், உதயசூரியன் விளையாட்டு கழகமும் இணைந்து நடத்திய இவ் விழாவில் வடமாகாணசபை உறுப்பினர்களான கே.தர்மலிங்கம், வி.சிவயோகன், ச.சுகிர்தன், பா.கஜதீபன் மற்றும் பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர் ஸ்ரீகாந்தரூபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (க-60)

# வட்டக்கண்டல் படுகொலை நினைவுநாள் வெற்றிக்கிண்ணம் சென்.தோமஸ் வெற்றி



மன்னார் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டக்கடண்டல் கிராமத்தில் கடந்த 1985 ஆம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 35இற்கும் அதிகமான அப்பாவி பொது மக்களை நினைவு கூர்ந்து வட்டக்கண்டல் சுடரொளி விளையாட்டுக்கழகம் ஏற்பாடு செய்திருந்த அணிக்கு 9 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வட்டக்கண்டல் மைதானத்தில் இடம் பெற்றது.

இறுதிச் சுற்றிற்கு தெரிவான ஆண்டாங்குளம் சென்.தோமஸ் அணியினருக்கும், முத்தரிப்புத்துறை சென்.ஜோசப் அணியினருக்கும் இடையில் போட்டி நடைபெற்றது.

இதன் போது 2:0 என்ற அடிப்படையில் ஆண்டாங்குளம் சென். தோமஸ் விளையாட்டு அணியினர் வெற்றி பெற்று வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டனர். (க)

# குறிஞ்சிக் குமரனை வீழ்த்தியது பலாலி விண்மீன் அணி







பருத்தித்துறை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் யாழ்.மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கிடையிலான இறுதிச் சுற்றுப்போட்டி நேற்றுமுன்தினம் இடம்பெற்றிருந்தது.

விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் அனுசரணையில் வடமராட்சி உதயதாரகை கழகத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றிருந்த உதைபந்தாட்ட போட்டியின் இறுதிப்போட்டியில், பலாலி விண்மீன், மற்றும் குறிஞ்சிக் குமரன் ஆகிய அணிகள் மோதிக் கொண்டன.

போட்டியின் போது பலாலி விண்மீன் 2:1 என இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தது.

மூன்றாவது இடத்தினை றேஞ்சர்ஸ் அணி வெற்றி பெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சிறப்பு விருந்தினராக விவசாய பிரதி அமைச்சர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணி வீரர்களுக்கு வெற்றிக் கேடயங்களை வழங்கி வைத்தார். (க-60)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## விடுதலையை வலி...

எடுக்காதமையை கண்டித்து குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

மேலும் தமது விடுதலை குறித்து போதிய அக்கறை இன்றி செயற்படும் பிரதிநிதிகள் தமது விடுதலை தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுத்து தம்மை விடுவிக்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

தமக்கு அரசிடம் இருந்து சரியாக பதில் வரும் வரை தமது உணவு தவிர்ப்பு போராட்டத்தை தொடரவுள்ளதாக அறிவித்துள்ளனர். மேலும் குறித்த கைதிகள் ஏற்கெனவே உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ம-9)

## கோண்டாவிலில்...

ஒருவரை யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான புலனாய்வு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தலைமையிலான புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம் கோண்டாவில் பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்த நபரிடம் விசாரணை மேற்கொண்டதன் பின்னர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என யாழ்ப்பாணம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-101)

## இராணுவ சிப்பாய்...

பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றதோடு குறித்த சிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பில் தெரியவருவதாவது; குறித்த குடியிருப்புப் பகுதியிலுள்ள வீடொன்றுக்குள் நேற்று அதிகாலை 3 மணியளவில் இராணுவச் சிப்பாய் ஒருவர் புகுந்துள்ளார். இதனை வீட்டில் இருந்தவர்கள் அவதானித்து கூச்சலிட்டு கத்தியுள்ளனர்.

இத்னையடுத்து அங்கு திரண்ட அயலவர்கள் வீட்டுக்குள் புகுந்தவரை பிடித்து நையப்புடைத்துள்ளனர். இதன்போது கணேஷ் குடியிருப்புக்கு அண்மையில் உள்ள இராணுவ முகாமில் இருந்து தான் வந்ததாகவும், தான் ஒரு இராணுவச் சிப்பாய் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனையடுத்து முழங்காவில் பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் குறித்த இராணுவ சிப்பாயை கைதுசெய்துள்ளதோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, மக்கள் குடியிருப்புக்குள் இராணுவ முகாம் இருப்பதால் தாங்கள் பெரும் அசௌகரியங்களை சந்தித்துவருவதாக அப்பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.(ம-315)

## தியாகி திலீபனின்...

நினைவுகளை சுமந்து உணர்வுபூர்வமாகக் கடைப்பிடிக்க வேண்டும் என தாயக மற்றும் புலம்பெயர் உறவுகளையும் வேண்டி நிற்கின்றோம்.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தமிழர் தாயக அரசியல்பரப்பில் ஆட்சி அதிகாரத்தில் யார் ஆதிக்கம் செலுத்தும் சக்தி என்பதற்கான முனைப்புக்கள் தீவிரம்பெற்று வரும் இச்சூழலில். ஒடுக்கப்பட்ட ஓர் தேசிய இனத்தின் அரசியல் பொருளாதார சமூக விடுதலையினை நேசித்து அதற்கு வலுச்சேர்த்து எம் இனத்தின் நியாயப்பாடான அடிப்படை கோரிக்கைகளை முன்வைத்து நீராகாரம் கூட அருந்தாது உண்ணாநோன்பிருந்து நல்லூர் வீதியில் வளர்ந்த வேள்வித்தீயில் மூச்சடங்கிப்போனவன் எங்கள் தியாகி திலீபன்.

இற்றைவரை திலீபனின் ஒற்றைக்கோரிக்கை கூட நிறைவேறாத நிலையில் துன்பத்தின் நீட்சியில் தமிழினம் இடர்படும் இச்சூழலில் தியாகி திலீபன் அவர்களின் 31வது ஆரம்ப நினைவேந்தல் நிகழ்வுகள் (15.09) நாளை காலை 10.10 மணியளவில் நல்லூரில் அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் இடம்பெற இருக்கின்றது. ஆரம்ப நினைவேந்தல் நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புரிமையுடன் அழைத்து நிற்பதாக ஜனநாயகபோராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள செய்திகுறிப்பில் தெரிவித்துள்ளார்.

திலீபன் அவர்களது நினைவுநாட்கள் நடைபெறும் இக்காலங்களில் உறவுகள் கோரிக்கை களியாட்டங்களை தவிர்த்து திலீபனின் நினைவுகளைச்சுமந்து உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்குமாறு தாயக மற்றும் புலம்பெயர் உறவுகளையும் வேண்டிநிற்கின்றோம். திலீபன் எங்களோடு இல்லாமல் இருக்கலாம் திலீபனின் கனவு இன்னமும் சுவாசித்துக்கொண்டுதான் இருக்கிறது. (ம-9,281)

## மன்மோகன் சிங்...

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மன்மோகன் சிங் மற்றும் ராகுல் காந்தி ஆகியோரை நேற்று சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ மற்றும் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்களுள் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பினை ஏற்று டில்லி சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து கலந்துரையாடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## முல்லையில் சிங்கள...

மகாவலி திட்டத்தின் பேரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியில் இருந்து வேறு மக்களை கொண்டு வருவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

அதற்கு எங்களுடைய எதிர்ப்பு தொடர்ச்சியாக இருக்கும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலை-திரியாய் அருள்மிகு வரத விக்னேஸ்வரர் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்று நடைபெற்றது.

இந்த பெருவிழாவில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்து கொண்டிருந்தார்.

இதன்போது மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் பேரில் சிங்கள குடியேற்றம் இடம்பெறுவதை தடுத்து நிறுத்த கோரி அண்மையில் முல்லைத்தீவில் பொதுமக்கள் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தமை குறித்து வினவிய போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார். (ம)

## நீர்வேலி தெற்கில்...

னுள் உறங்கிக்கொண்டிருந்த மகள் அவதானித்து கூக்குரல் இட்டுள்ளார்

அப்போது வீட்டில் உள்ள அனைவரும் கூக்குரல் இட்டபோது அவர்களை கத்த வேண்டாம் என மிரட்டிய திருடர்கள் மகள் கழுத்தில் அணிந்திருந்த சங்கிலியை அறுத்தெடுத்துள்ளனர்.

பின்னர் வீட்டின் அனைத்து பகுதிகளையும் சல்லடை போட்டு தேடியதுடன் அறையில் இருந்த அலுமாரியை உடைத்து உள்ளே இருந்த தாலிக்கொடி சங்கிலி, காப்பு உட்பட கிட்டத்தட்ட 30 பவுண் நகைகளும் 15 ஆயிரம் ரூபா பணத்தினையும் எடுத்துச்சென்றுள்ளனர்.

குடும்பத் தலைவர் கொழும்பு சென்றதை அவதானித்தே இந்த திருட்டு இடம் பெற்றிருக்கலாம் என வீட்டார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக உடனடியாக கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்திய நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-9)

## யுத்தத்தில் புலிகளை...

விராட் ஹிந்துஸ்தான்' சங்கம் சார்பில் டெல்லியில் 'இந்தியா-இலங்கை உறவுகள் அதை முன்னோக்கி எடுத்துச்செல்வதற்கான பாதை என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது.

நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இக்கருத்தரங்கில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பங்கேற்ற மகிந்த ராஜபக்ஷ செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் கூறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தத்தை ஒரு போதும் இன ரீதியிலான யுத்தமாக கருதக்கூடாது. தமிழ் மக்களுக்கெதிராக இலங்கை இராணுவம் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

விடுதலைப்புலிகளின் செயற்பாடானது இலங்கை எல்லையுடன் மட்டும் நிற்கவில்லை. இந்தியா வரை நீண்டது. இந்திய மண்ணில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி மற்றும் பலரை அவர்கள் படுகொலை செய்தனர். இதை எப்போதும் மறக்க கூடாது.

தீவிரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவது என்பது ஒரு இனத்தினருக்கு பயன் தரும நடவடிக்கையாக பார்க்க கூடாது. அதனால் ஒட்டுமொத்த நாட்டிற்கும் நன்மை என்பதையே நோக்கவேண்டும்.

விடுதலைப்புலிகளுக்கெதிரான யுத்தம் தீவிரமாக நடைபெற்ற வேளையில் பிரிட்டன் வெளியுறவுத் துறை செயலாளரும் பிரான்ஸ் வெளியுறவுத்துறை அமைச்சரும் என்னைத் தொடர்பு கொண்டு உடனடியாக யுத்தத்தை நிறுத்தும்படி வலியுறுத்தினர்.

ஆனால் அதை நிராகரித்து விட்டேன். அப்படி செய்தால் எதிர்கால சந்ததியினருக்கு செய்யும் நம்பிக்கை துரோகம் என நான் பதிலளித்தேன். இந்தியாவுடன் இணக்கமான நட்புறவை வைத்துக்கொள்வது மற்றும் இரு நாடுகளும் பரஸ்பரம் முழுவதும் புரிந்து கொள்வது ஆகியவையே எனது எதிர்கால வெளியுறவுக் கொள்கையின் ஒரு பகுதியாகும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ம)

## காணாமல்போன...

வினை மறுத்துள்ளது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட காணாமல் போனவர்களின் உறவினர்களின் சங்க தலைவி ம.ஈஸ்வரி அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக போராட்டம் நடத்திவரும் காணாமல் போனவர்கள் 39ஆவது ஜெனிவா கூட்டத்தொடர் தொடங்கப்பட்ட நிலையில் ஏற்கெனவே ஐக்கியநாடுகள் சபையில் கேட்டிருந்தோம் எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது என்று கேட்டிருந்தோம். எங்களுக்கு நியாயமான தீர்வு பெற்றுத்தரவேண்டும் என்று கோரியுள்ளோம் இந்நிலையில் ஜெனிவாவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கூட்டத்தொடரில் நாங்கள் கலந்து சாட்சியமளிக்க முடியவில்லை இலங்கை அரசினால் விசா மறுக்கப்பட்டுள்ளது.

இது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எட்டு மாவட்ட உறவுகளுக்கும் மிகவும் மன அழுத்தத்தினை கொடுத்துள்ளது பயத்தினை கொடுத்துள்ளது குற்றம் புரிந்த இராணுவத்திற்கு விசா கொடுத்து அவர்களை அனுப்பி எங்களுக்கு மறுப்பு தெரிவித்துள்ளது மிகவும் வேதனைக்குரிய விடயம் காணாமல் போனவர்கள் அலுவலகம் நீண்டகாலமாக வேண்டாம் என்றே சொல்லி வருகின்றோம். வெளிநாட்டு நிறுவனங்களும் காணாமல் போனவர்களின் அலுவலகத்தினை திணித்துக் கொள்கின்றார்கள். இதனால் கிடைக்கும் எந்த தீர்வும் எமக்கு வேண்டாம். இதனை நாங்கள் புறக்கணிக்கின்றோம்.

ஆயிரக்கணக்கானவர்கள் இணைந்து போராடிவரும் இந்த வேளையில் அரசும் அரசு சார்ந்தவர்களும் அவர்கள் சொல்வதைத் தான் நாங்கள் கேட்கவேண்டும் நாங்கள் சிறுபான்மையான மக்கள் என்ற நிலைப்பாடில் அவர்களின் கருத்துக்கள் செல்கின்றது.

எங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் எங்களின் உறவினை மீட்க சர்வதேசம் உதவவேண்டும். இலங்கை அரசின் காணாமல் போனவர்கள் அலுவலகத்திற்கு சர்வதேசம் துணைபோகாமல் எங்களுக்கு ஆதரவினை தந்து நீதியினை பெற்றுக் கொடுக்கவேண்டும்.

வெளிநாடுகளில் வாழ்கின்ற எங்கள் சமூகத்தினை நாங்கள் கேட்கின்றோம். எங்கள் உறவுகளை மீட்க நீதி கிடைக்க புலம்பெயர் தமிழர்கள் எங்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவேண்டும் எங்கள் நிலையினை உலகிற்கு தெரிவிக்கவேண்டும் என்று உங்களிடம் நாங்கள் கையேந்தி நிற்கின்றோம்.

விசாமறுப்பு தெரிவித்த மனவேதனையில் நாங்கள் இருக்கின்றோம். எங்கள் நியாயம் கேட்பதற்கு எந்த நாட்டிற்கு செல்வதற்கும் எங்களுக்கான ஒரு சூழலை அமைத்து தரவேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

எங்களுக்கு இலங்கை அரசின் காணாமல் போனவர்கள் அலுவலகத்தின் ஆறாயிரம ரூபா மாத கொடுப்பனவு வேண்டாம். அவர்கள் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் தெரிவித்துள்ள கருத்து உண்மைக்கு புறம்பானது இந்த அலுவலகத்தினை நாங்கள் முழுமையாக புறக்கணிக்கின்றோம். இந்த அலுவலகத்தால் எங்களுக்கு எந்த பயனும் இல்லை என பதை இந்த இடத்தில் சுட்டி நிற்கின்றோம் எனறும் காணாமல் போனவர்களின் உறவி னர்களின் சங்க தலைவி தெரிவித்துள்ளார். (ம-281)

## முப்படைகளின் பிரதானி...

எனினும் நேற்றைய அமைச்சரவை கூட்டத்தில் இது குறித்து கடும் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதிக்கு இந்த விடயத்தில் ஆதரவு கிடைக்காததை தொடர்ந்து பிரதமர் நாடு திரும்பியவுடன் இந்த விவகாரம் குறித்து மீண்டும் ஆராய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் வியட்நாமிலிருந்து நாடு திரும்பும் வரை இந்த விடயம் குறித்து கருத்துக்கள் எதனையும் வெளியிடவேண்டாம் என அமைச்சர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்தில் இடம்பெற்ற ஆள்கடத்தல்கள் படுகொலைகள் தொடர்பான விடயங்கள் குறித்து இடம்பெறும் விசாரணைகளிற்கு ஒத்துழைப்பை வழங்க வேண்டாம் என சிறிசேன சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளிற்கு தெரிவித்துள்ளார் என ஊடகங்களில் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது குறித்து மறுப்பு எதுவும் அரச தரப்பி லிருந்து வெளியாக வில்லை.

இலங்கை குற்றப்புலனாய்வு பிரிவினர் முப்படைகளின் பிரதானிக்கு எதிரான ஆதாரங்களை சேகரித்துள்ளமை குறித்தும் அவரை கைதுசெய்வதற்கான நீதிமன்ற உத்தரவினை பெற்றுள்ளமை குறித்தும் ஜனாதிபதி சீற்றமடைந்துள்ளார்.

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட சம்பவத்தின் முக்கிய சூத்திரதாரியான நேவி சம்பத் மறைந்திருப்பதற்கு உதவினார் என முப்படைகளின் பிரதானி மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம)

## இறுதிப் போரில்...

டில்லி சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இதனை தெரிவித்துள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக சர்வதேச ரீதியில் இடம்பெற்ற குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை. நாங்கள் ஒருபோதும் இனவாத யுத்தத்தை முன்னெடுக்கவில்லை. இராணுவ நடவடிக்கைகளானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராகவே அமைந்ததே தவிர தமிழ் சமூகத்துக்கு எதிராக நடத்தப்படவில்லை. ராஜீவ் காந்தி மற்றும் மேலும் பலர் உயிரிழப்பதற்கு காரணமாக விருந்த இந்த பயங்கரவாத அமைப்பானது இலங்கைக்கு மாத்திரமல்ல இந்தியாவுக்கும் அது அச்சுறுத்தலாக அமைந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

நீரோகா
திகதி 2018/09/13
சீட்டிழுப்பு இலக்கம் 446
லக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 05 21 38 62
போனஸ் இலக்கம் 50

மஹஜன சம்பத
திகதி 2018/09/13
சீட்டிழுப்பு இலக்கம் 3745
L 6 0 0 8 4 3

கொவிசெத
திகதி 2018.09.13
சீட்டிழுப்பு இலக்கம் 1881
Q 10 28 34 70

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1509 திகதி 2018/09/13
C B G
வெற்றி இலக்கங்கள் 27 43 68 71
போனஸ் இலக்கம் 41

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணம் வேம்படி வீதியில் அமைய உள்ள போட்டோ கொப்பி, பிறிண்ரிங், பாட சாலை உபகரணங்கள் விற்பனை நிலையத் துக்கு ஓரளவு அனுபவமுள்ளவர்கள் தேவை. **தொடர்பு:**

**077 904 0426** (5668)


## துப்பாக்கிச் சூட்...

நிலையில் அநுராதபுரம் வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டிருந்த 22 வயது டைய திருச்செல்வம் கபிலன் எனும் இளை ஞரே சிகிச்சை பயனின்றி நேற்று வியாழக் கிழமை காலை உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது ,

முல்லைத்தீவு மாவட்டம் கைவேலி, மரு தமடுகுளம் பகுதியில் உள்ள வீடொன்றினுள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு பத்து மணி யளவில் அத்துமீறி 6 பேர் கொண்ட வாள் வெட்டுக்குழு ஒன்று உட்புகுந்து வீட்டில் இரு ந்த ஐவர் மீது தாக்குதல் மேற்கொள்ள முயற் சித்தது.

அதன் போது வீட்டில் இருந்த இரு பெண் கள் தாக்குதலாளிகளிடம் இருந்து தப்பியோடி யுள்ளனர். ஏனைய மூவரும் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

குறித்த தாக்குதலில் வீட்டின் உரிமையா ளரான 45 வயதுடைய பொ.செல்வக்குமார், அவரது மனைவியான 43 வயதுடைய செ.புஸ்பகுமாரி மற்றும் அவரது மகன் ஆகி யோர் வாள் வெட்டுக்கு இலக்காகி காயமடை ந்துள்ளனர்.

தாக்குதலாளிகளின் தாக்குதலுக்கு இலக் கான நிலையில், வீட்டின் உரிமையாளரான செல்வக்குமார் வீட்டில் இருந்த (இடியன்) துப்பாக்கியை எடுத்து தாக்குதலாளிகள் மீது துப்பாக்கி சூட்டை மேற்கொண்டார்.

குறித்த துப்பாக்கி சூட்டுக்கு இலக்காகி தாக்குதலாளி படுகாயமடைந்தார். துப்பாக்கி சூட்டினை அடுத்து ஏனைய தாக்குதலாளிகள் அவ்விடத்தில் இருந்து தப்பி சென்றனர்.

அதனை அடுத்து அயலவர்களின் உதவி யுடன் தாக்குதலுக்கு இலக்கான மூவரும் மற் றும் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான தாக்குத லாளியும் முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான நபர் ஆபத்தான கட்டத்தில் இருந்தமையால் அவரை மேலதிக சிகிச்சைக்காக அநுராத புரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அநுராதபுரம் வைத்திய சாலையில் சிகி ச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பய னின்றி நேற்று வியாழக்கிழமை காலை அவர் உயிரிழந்துள்ளார்.

அதேவேளை சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுத்த முல்லைத் தீவு பொலிஸார், வாள் வெட்டு தாக்குதலை மேற்கொண்டார்கள் எனும் குற்றசாட்டில் கோம்பாவில்பகுதியை சேர்ந்த இரு இளை ஞர்களை கைது செய் துள்ளனர். (ம-281)


## கோலாகல திறப்பு விழா

நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியான

**Everpure Hi-Tec (Pvt) Ltd** இன்

கிளிநொச்சிக் கிளையும் காட்சியறையும் இன்று

14.09.2018 (வெள்ளிக்கிழமை)

இல.677,கரடிப்போக்கு சந்தி,

A9 வீதி, கிளிநொச்சியில்

கோலாகலமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

விசேட விலைக்கழிவும் இலவச நீர் பரிசோதனையும் 16.10.2018 வரை இடம்பெறும்.

(சி-3836)



Hotline: 021 2284 888 / 075 331 3302



## விரைவு பொதிகள் சேவை

### விசேட விலை குறைப்பு

UK- 550 /=Kg

கனடா-900 /=Kg

ஜேர்மனி- 700 /=Kg

நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS

(C-3782)

0768226240

V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை



## கறையான் தொல்லையா?

கட்டடங்களில் கறையான்களால் ஏற்படும் அல்லது ஏற்பட்டிருக்கும் பாதிப்புக்களை உத்தரவாதத்துடன் இல்லாதொழித்து தரப்படும்

(5 Years- 10 Years Warranty)

ஆலோசனையும் மதிப்பீடும் இலவசமாக வழங்கப்படும்.

தொடர்பு: ந.ரூபகாந்த் 0771515897, 0703312299, 0214993200 (5668)



**வலம்புரி**

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532



## பயிற்சியுடன் வேலை வாய்ப்பு

பயிலுனர்கள் - 2018 இல் A/L எடுத்தவர்கள்



விமானப் பயணச்சீட்டுக்கள்

விரைவுப் பொதிகள் சேவை

விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சுன்னாகம், சாவகச்சேரி, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, திருகோணமலை, வல்வெட்டித்துறை

● எமது அனைத்து கிளைகளிலும் 6 மாத கால வேலை வாய்ப்பு பயிற்சிகள் உண்டு.

● விரும்பியவர்கள் பயிற்சி முடிவில் வேலையில் சேரலாம்.

● பயிற்சிக்கால ஊக்கத்தொகை -7500/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0768226236 v2vacancies@gmail.com



## தரமான மணல் உடனடியாக தேவையா?

பூச்சுமணல், மணல்மண், கருங்கல் சல்லி மற்றும் கிரவல் அனைத்து உடனடித் தேவைகளுக்கும் அழை யுங்கள். 0761723344, 0214681633

**Smart Hardware**

இல.81, இலுப்பையடி சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (5666)



## சிறுப்பிட்டி தமிழறிஞர் இராவ்பகதூர் சி.வை.தாமோதரம்பிள்ளை அவர்களின் 187-வது ஜனன தினம் - 2018



(சி-3840)

நினைவுப் பேருரை

**கௌரவ எம்.ஏ.சுமந்திரன்**

(யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

**“இன்றைய சமஷ்டியின் விஸ்தீரணம்”**

**“The Extent of Federalism Today”**

இடம் : வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

காலம் : நாளை (15.09.2018) சனிக்கிழமை

நேரம் : பிற்பகல் 3.30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- சி.வை.தாமோதரம்பிள்ளை ஞாபகார்த்த நற்பணிமன்றம்



# வேலைவாய்ப்பு

நெல்லியடியில் இயங்கும் எமது நிறுவனத்திற்கு கீழ்க்காணும் அனுபவமுள்ள பணியாளர்கள் உடன் தேவை!

**வரவேற்பாளர்கள்**
Receptionist

**நிர்வாக அலுவலகர்**
Administrative Officer

**தமிழ், ஆங்கிலம்**
Computer Typing தெரிந்தவர்கள்

(சி-3841)

தகைமைகள்: நெல்லியடி, வடமராட்சியில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை

- கணினி அனுபவம் இருத்தல் வேண்டும்.
- கவர்ச்சிகரமான சம்பளத்துடன் மேலதிக கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

சனிக்கிழமை (15.09.2018) காலை 9.00 மணிமுதல் மதியம் 1.00 மணிவரை நேர்முகத்தேர்வு நடைபெறும்.

நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம்:

ANDRA WEDDING CARDS 232, யாழ்ப்பாணம் வீதி, நெல்லியடி. 0776622981 | 0777481696


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.